# திருக்கோயில்

ஏப்ரல் 1979 ரூ. 1-25






தஞ்சை மாவட்டம், சீர்காழி வட்டம், திருநாங்கூரில் நடைபெற்ற "பரக  பைந்தமிழ் விழா"வில், தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். ந்திரராசன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தபொழுது, நாகைத் துணை ஆணையர் திரு. தண்டபாணி அவர்கள்

முகப்பு :

அருள்மிகு கலியாண சுந்தரர்,
திருவியலூர்,
தஞ்சை மாவட்டம்


# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

மாலை: 21 | சித்தார்த்தி ஆண்டு - சித்திரைத் திங்கள்—ஏப்ரல்-1979 | மணி: 7


R.K.U.
Dy Commissioner H.Qrs. (Retired)
HR&CE Administration Dept

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் '' சந்தாதாரர் '' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்


மனமுருகி இறைவனை வழிபடுக
—திருமுருக கிருபாநந்த வாரியார் சுவாமிகள்

மது அருந்துவதால் ஏற்படுகின்ற கெடுதல்கள்
—டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம்

திருச்சிற்றம்பலக் கோவையார்
—திரு ந. ரா. முருகவேள்

முருகன் பெருமை
—திரு க. வச்சிரவேலர், பி.ஏ., எல்.டி.

தெய்வச் சேக்கிழாரும், செந்தமிழ் மரபும்
—திரு ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.

சமய இலக்கியம்
—தவத்திரு அழகரடிகள்

கர்நாடக சங்கீதத்தின் ஆதி மும்மூர்த்திகள்
—திரு மு. அருணாசலம், எம்.ஏ.

கந்தன் இனியன்
—டாக்டர் திரு துரை அரங்கனார்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்டி.

சப்த விடங்கத் தலங்களும் நடனங்களும்
—ஆசிரியர்

இறைவனும் உயிரும்
—திரு டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி,
எம்.ஏ., பி.எச்டி.

கண்டுபிடிப்பின் கண்டுபிடிப்பு
—ஆசிரியர்


**ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.**

# மனமுருகி இறைவனை வழிபடுக

"அருண் மொழியரசு"
திரு. முருக கிருபாநந்த வாரியார் சுவாமிகள்.

அகில உலதங்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவில் அடக்கிவிட லாம். ஒன்று தானே அறிகின்ற பொருள்: மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள்; அறிவித்தாலும் அறியாத பொருள்மற்றொன்று. இவற்றைப் பதி, பசு, பாசம் என்று நம் சைவ சமய ஞான நூல்கள் கூறுகின்றன. பதி-தானே அறிகின்ற பொருள்; பசு-அறிவித்தால் அறி கின்ற பொருள்; பாசம்-அறிவித்தாலும் அறிய மாட்டாத பொருள். இறைவனும் அநாதி; ஆன்மாக்களும், பாசமும் அநாதி. ''பதியினைப் போல் பசு பாசம் அநாதி'' என்கிறார் திருமூலர்.

ஆனால் இறைவன் இன்ப வடிவினன்; ஆன் மாக்கள் ஆணவத்துடன் கூடித் துன்பத்தை நுகர்கின்றன. ஆன்மாக்களின் துன்பத்தை நீக் குதற்குத் திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனி தாங்கி, ஆன்மாக்களுக்கு உடம்பை யும், கருவிகரணங்களையும், உலகங்களையும் படைத்துக் கொடுத்தருளினார்.

அவ்வாறு படைத்த எழுவகைப் பிறவி களில் மனிதப் பிறப்பு உயர்ந்தது. ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்று அவ்வைப் பிராட்டியும், ''எண்ணரிய பிறவிதனில் மானி டப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்'' என்று தாயுமான சுவாமிகளும் அருளியுள்ளனர். எண்ணில்லாத உலகங்களில் எண்ணில்லாத உடம்புகளை எடுத்து, எண்ணில்லாத காலமாகப் பிறந்து இறந்து மாறிமாறி வந்து இளைப்புற் றேன் என்கின்றார் மணிவாசகர். ஏழு கடற் கரைகளின் மணல்களை எண்ணி அளவிட்டு இத்துணை என்று அறுதியிட்டுக் கூறினும் கூற லாம். ஆனால், நாம் பிறந்த பிறப்பை எண்ணி அளவிட முடியாது என்கின்றார் அருணகிரி நாதர்.

''எழுகடல் மணலை அளவிடி னதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்'' —திருப்புகழ்

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டினால் பாற்கடல் சிறிதாகிவிடும் என்கிறார் குருநம சிவாயர்.

''எடுத்தபிறப் பெல்லாம் எனக்குவந்த தாய்மார்
கொடுத்த முலைப்பா லனைத்துங் கூட்டின்
—அடுத்துவரும்
பன்னா கணைத்துயிலும் பாலாழி யுஞ்சிறிதாம்
மன்னா சிதம்பர தேவா
—சிதம்பரவெண்பா.

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந் தது என்றோம். மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள்.

மன் என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன்; நினைக்கின்ற கருவி மனம். அது இன்றியமையாத ஒன்று. மற்றப் பிராணி கட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன், வட மொழியில் மநுஷ்யன். ஆங்கிலத்தில் மேன். இச் சொற்கள் யாவும் மன் என்ற பெயர்ச்சொல்லி லிருந்து தோன்றியவை. மனம் என்ற கருவி யில்லாமையால் விலங்குகளின் வாழ்வு ஒன்று போல் அமைந்திருக்கின்றது. மாடு அன்று உண்ட புல்லைத்தான் இன்றும் உண்ணுகின் றது. மனிதன் உணவைப் பல்வேறு வகையாகப் பக்குவஞ் செய்து உண்ணுகின்றான்.

குருவி அன்று கூடுகட்டியதுபோல் தான் இன்றும் கட்டுகின்றது. மனிதன் வீடுகட்டும் முறை கணத்துக்குக் கணம் பல்வேறு விதமாக முன்னேற்ற மடைந்திருக்கின்றது. உணவி னாலே, உடையினாலே, நடையினாலே, பேச் சாலே, எழுத்தாலே, வாகனங்களினாலே மனி தன் முன்னேற்றமடைகின்றான். இதனை இதனை இப்படி இப்படிச் செய்யவேண்டும் என்று சிந்திக்கின்றான். இவ்வாறு சிந்திக் கின்ற மனிதன் சமயநெறியிலும் முன்னேற வேண்டும்.

நான் யார்? இந்த உடம்பு எப்படி வந்தது? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந் ததா? தந்தவன் தன்பொருட்டுத் தந்தானா? என்பொருட்டுத் தந்தானா? உடம்பு எடுக்கு முன் எப்படி நான் இருந்தேன்? எதற்காக உடம்பு தரப்பட்டது? நான் எங்கிருந்து வந் தேன்? எதன்பொருட்டு வந்தேன்? எங்கே போக வேண்டும்? நான் எங்கே போய்க்கொண் டிருக்கிறேன்? என்பனவாறு சிந்தனைகள் சிந் திக்கவேண்டும். இந்தச் சிந்தனைகள்தாம் சிந்திக்கத்தக்கவை. இவைகளைச் சிந்திக்கின்ற வன் உண்மையில் மனிதனாகின்றான். இந்தச் சிந்தனை யில்லாதவர்களைச் சிந்தித்துப் பரம குருநாதராகிய அருணகிரிநாதர் பாடுகின்றார்.

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கின்றிலேன் தண்டைச்
சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்வா
கனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை
சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே

ஏனைய சிந்தனைகள் பிறவியைத் தரும். அச் சிந்தனைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும். தனியிழையை எளிதில் அறுத்து விடலாம். இருபத்தையாயிரம் இழைகளைக் கூட்டி முறுக்கிவிட்டால், அக்கயிற்றால் தேரை இழுத்துவிடலாம். அதுபோல் பல லட்சம் முறை மந்திர ஜெபம் கூடுமானால் இறைவனைத் தெரிசித்து விடலாம்.

96 கோடி ராமமந்திர ஜெபத்தால் தியாகராஜ சுவாமிகள் இராமரை நேரில் தெரிசித்தார். அண்மையில் வாழ்ந்த உண்மைத் துறவியாகிய பாம்பனடிகள் 46 நாள் பிரப்பன் வலசையில் மயானத்தில் குழிவெட்டிக் கொண்டு, அக்குழியிலிருந்து இடையறாது சடக்கர மந்திரத்தைச் செபித்து இளம்பூர்ணன் ஆகிய முருகனை நேரில் கண்டு தெரிசிக்கப் பெற்றார்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவது போல், இடையறாது தியானஞ் செய்தால் எம்பெருமான் வெளிப்படுவான்.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

— அப்பர்பெருமான்

உடம்பை உயிர் செலுத்துகின்றது. உயிரை இறைவன் செலுத்துகின்றான். காரை டிரைவர் செலுத்துகின்றான். டிரைவரை எஜமான் செலுத்துகின்றான் என்பதுபோல் உணர்க.

உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை; டயருக்குள் ட்யூப்; ட்யூப்புக்குள் காற்று. இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக எண்ணினால் உள்ளம் உருகும்; அன்பினால் என்பும் உருகும். முடிவில் உயிர் உருகும். உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றிவிடும். அரக்கின் இடையில் தங்கம். தங்கத்தின் இடையில் இரத்தினமணி. அரக்கு உருகினால் தங்கம் உருகும்; தங்கம் உருகினால் மணி அதில் பதிந்துவிடும். அதுபோல் உள்ளம் உருகி, உயிர் உருகி, சிவத்துடன் ஒன்றுபட வேண்டும். நம் உள்ளமே உருகவில்லையானால் உயிர் எவ்வாறு உருகும்? இறையுடன் எவ்வாறு ஒன்றுபட முடியும்?

ஆதலால் அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி, இறையுடன் கலந்து இன்புறுவதுவே சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபாம்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குரு புங்கவ எண்குண பஞ்சரனே

என்று, கந்தர் அனுபூதி இதனை நமக்கு உணர்த்துகின்றது.

உணவு தேடுகின்ற நாம் உணர்வும்தேட வேண்டும். நித்த அநித்த வேறுபாடுகளை உணர்வதுதான் உணர்வுடைமைக்கு அழகாகும். மகாபாரதத்தில் யட்சப் பிரச்சினை என்று ஒன்று உளது. அது மிகமிக அருமையானது. யட்சமூர்த்தி தருமரைப் பார்த்து வினாவுகின்றார் ,''தருமா! உலகிலே மிகவும் ஆச்சர்யமானது எது?'' ''தினந்தோறும் இறக்கின்றவர்களைக் கண்டும் தனக்கு மரணம் இல்லை என்று எண்ணுகின்றானே? அதுதான் பெரிய ஆச்சர்யம்'' என்றார் தருமர்.

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேல் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணை செய்யாவிடில்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ

என்று தயரதர் கூறுகின்றார். ஆதலால் மரணம் வருமுன் இறைவன் சரணத்தை வழிபட்டு நலம்பெற வேண்டும்.

இதுகாறும் கூறியவாற்றால், முப்பொருள் உண்மையும், இறைவன் தந்த அரிய பிறப்பு மனிதப் பிறப்பு என்பதும், இப்பிறப்பினால் இனியொரு பிறப்பு எடுக்காத வகையில் நாம் இறைவனுடன் ஒன்றிச் சிவாத்துவிதம் பெற வேண்டும் என்பதும், அதற்குரிய நெறி அன்பினால் உருகுவது என்பதும், ஐந்தெழுத்தைஓதி உய்யவேண்டும் என்பதும், மரணம் நேருமுன் கரணம்பெற வேண்டும் என்பதும் தெரியப் பெற்றோம். **

# திருமுருகன் சிறப்பு

இளமைமணம் தேன்அழகு தெய்வநலன் என்னும்
வளமை மிகுபொருள்கள் வாய்ந்தே, — ஒளிமிகும்நற்
சீரார் முருகன்எனும் செந்தமிழ்ச் சொற்சிறப்பிங்(கு),
ஆராப் பெருவிருந்தாம் ஆய்வு! (1)

முருகா! எனஓதும் மூதக்கார் எல்லாம்
அருகாத செல்வம் அடைவார்; — ஒருகாலும்
துன்பமுறார்; நோய்அணுகார்; சுற்றமொடு சூழ்ந்துயர்ந்த
இன்பமெலாம் துய்த்துவப்பர் ஈண்டு (2)

—ந. ரா. முருகவேள்

# மது அருந்துவதால் ஏற்படுகின்ற கெடுதல்கள்

''மருத்துவப் பேரறிஞர்''
**டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள்,**
B.Sc., M.D., F.R.C.P.(London), F.C.C.P. (U.S.A.), F.A.M.S.

கள்ளுண்டான் எனப்புகன்றார்; கனகசபை நடுவே
கண்டதுண்டு; சிற்சபையில் உண்டதும்உண்
டிநான்;
எள்ளுண்ட பலவிடயத்து இறங்கும்கள் அன்றே;
என்றும்இற வாநிலையில் இருத்தும்கள்;
உலகம்
உள்ளுண்ட போதுமயக்கு உற்றிடும்கள் அலவே;
உள்ளமயக்கு அனைத்தையும் ஒழித்திடும்கள்;
மடவாய்
அள்ளுண்ட பிறகும்எனை அடுத்துஅடுத்துக்
கண்டால்
அறிவுதரும் அவர்க்கும்இங்கே யான்உண்ட
கள்ளே!

—திருவருட்பா,
**இராமலிங்க அடிகள்.**

ஒருமுறை நான் சிதம்பரம் போயிருந்தபோது ஒரு சாமியார் என்னை நோக்கி, ''எந்த வழியாக வந்தீர்கள்?'' என்று கேட்டார். நான், ''புதுச்சேரி வழியாக வந்தேன்'' என்று சொன்னேன். அதற்கு அவர், ''இப்படிச் சொல்லக் கூடாது; அதற்கு அர்த்தம் வேறு விதமாகப் போய்விடும். கடலூர் வழியாக வந்தேன் என்று சொல்லுங்கள்'' என்றார். அதற்கு நான் ''சொல்லுபவர்களைப் பொறுத்தும், கேட்பவர்களைப் பொறுத்தும் பொருள் விளங்கிக் கொள்ள முடியும்'' என்றேன். இருந்தாலும் இராமலிங்க சுவாமிகளே ''கள்ளை உண்டேன்'' என்று சொன்னதாக, அவர் பாடிய மேலே உள்ள பாட்டைச் சொன்னேன்.

அதாவது கள்ளைக் குடிப்பது எதற்காக வென்றால், கள் குடித்தவுடன் போதை ஏற்பட்டு அதனால் நமக்குள்ள கஷ்டங்களைமறந்து இருப்பதற்கு. இப்போது அறுவைச் சிகிச்சை செய்வதானால், சிறந்த போதை மருந்துகளை உடலில் பிரயோகித்தவுடன் சொரணை இல்லாமல் போய்விடுகிறது. சொரணையில்லை எனினும் உடலில் உயிர் இருக்கிறது; அதனால் மரணம் ஏற்படுவதில்லை. ஆனால், ரண வைத்தியர்கள் உடலில் ஏற்பட்டுள்ள குறைகளைப் போக்குவதற்காகச் சிகிச்சை முடியும் வரையில், இந்தப் போதையைப் பிரயோகித்து மனிதனுக்கு வலியில்லாமல் ரண சிகிச்சை செய்கிறார்கள். முன் காலத்தில் எல்லாம் இப்படிப் பட்ட அறுவைச் சிகிச்சைகளைச் செய்யும் போது, போதை மருந்தாகக் கள், சாராயம் ஆகியவற்றை வைத்தியர்கள் உபயோகித்தார்கள். அந்தக் காலத்தில் மது ஓர் அவசியமான பொருளாகக் கருதிஉபயோகப்படுத்தப்பட்டது. அதனால், உடம்புக்குக் கெடுதல் எதுவும் அதிகமாக ஏற்படவில்லை. அப்பொழுது சிலர் அந்த மதுவை அதாவது கள், சாராயத்தை வலிகளைக் குறைக்கவும், கவலைகளை மறக்கவும் அருந்த ஆரம்பித்தார்கள். தசைகளிலுள்ள வலியை நீக்குவதற்குத் தொடர்ந்து மது உண்பது உசிதம் அல்ல; தொடர்ந்து மது அருந்தினால் உடலிலுள்ள பல்வேறு பாகங்களுக்குக் கெடுதல் ஏற்படுகிறது.

முதலில் மது அருந்தும் பொழுது அருவருப்பே ஏற்படுகிறது. அந்த அருவருப்பை ஓரளவுக்குப்பொறுத்துக்கொண்டுதான் மதுவை அருந்துகிறுர்கள். ஆனால், குடிப்பழக்கம் ஏற்பட்டபிறகு அதற்குக் குடிப்பவனே அடிமையாகி விடுகிறுன். மேலும் கொஞ்சம் பழகிக் கொண்டு மது அருந்துகிறவனுக்குப் போதை கிடைப்பதில்லை; அதனால் அவன் அதிகமாகக் குடிக்க ஆரம்பிக்கிறான். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஒருவன் குடிக்க ஆரம்பிக்கின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு உடலுக்குக் கெடுதல் ஏற்படுகிறது. இது ஒரு உணவுப் பொருள் அல்ல என்பதை உணரவேண்டும். அதில் உணவுச் சத்து இருந்தாலும்கூட, அதையே உணவாகக் கொண்டாலும் அதில் வைட்டமின் பொருள்கள் இல்லாததால், அதை அதிகமாகக் குடிக்கும்பொழுது பசி ஏற்படாது. உடலில் உள்ள வலிகளைப் போக்குவதற்கு ஓரளவு பயன்படுகிறது என்பதால், அதை அதிக அளவில் பருகினால் மிகவும் கெடுதலே ஏற்படுகிறது.

ஒருவன் மதுவை அதிகமாக உட்கொள்வானேயானால் அவனுடைய வயிற்றின் உட்பாகத்தில் இருக்கிற சவ்வு போன்ற மெல்லிய உறுப்புகள் கெட்டு விடுகிறது. முதலில் இரத்தக் குழாய்களில் இரத்தம் வருகிறது. உணவுப் பையில் அதிகமாக இரத்தம் வருகின்ற பொழுது அவ்வேளையில் உணவுப் பையில் மது இருக்கின்ற காரணத்தால், இரத்தத்திற்கு வேலை இராது; அதன் காரணமாக அங்குள்ள பொருள் உணவுப் பையைத் தாக்குவதால்-இரத்தத்திற்கு வேலை இல்லாமையால்-மது அருந்தினவன் வாந்தி எடுக்கிறான். முன் இரவு கண்ட சுகம் வாந்தியினால் அவனுக்கு அருவருப்பை ஏற்படுத்து

கிறது. ஆனால் அவன் தொடர்ந்து மதுவைக் குடிப்பதால், ஓரளவுக்கு இந்த அருவருப்பை அவனால் சகித்துக் கொள்ள முடிகிறது.

பிரபல மருத்துவர்கள்கூட மதுவைச் சிறிய அளவில் குடித்தால் கெடுதல் இல்லை என்று சொல்லுகிறார்கள். இது தவறான அபிப்பிராயம். ஏனென்றால் சிறிய அளவில் குடிப்பது, எப்பொழுதுமே அப்படியே இல்லாமல் நாளுக்குநாள் அளவு அதிகப் படுகிறது. மேல் நாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் முக்கியமான வித்தியாசம் உண்டு. மேல்நாடுகளில் இலவசமாக அருந்த மது வழங்கப்பட்டாலும், அந்நாட்டினர் சிறிதளவே குடித்துவிட்டு உடனே சாப்பிட ஆரம்பித்துவிடுகின்றனர். மறுமுறை இலவசமாக மது கிடைப்பதாக இருந்தாலும், அவர்கள் அதைக் குடிப்பதில்லை. ஆனால் நம் நாட்டிலோ முதலில் கொஞ்சம் குடிக்கிறார்கள், நாளுக்கு நாள் அதிகமாகக் குடிக்கிறார்கள். அதுவும் இலவசமாகக் கிடைக்கிறதென்றால், சொல்ல வேண்டுவதே இல்லை. அளவுக்கு மீறியே குடிப்பதுதான் வழக்கம்.

மதுவிலக்கு இல்லாத சமயத்தில் நான் பார்த்திருக்கிறேன். டாக்டர்கள் கூடும் சில நிகழ்ச்சிகளில், டாக்டர்கள் சிலர் அதிகமாகக் குடித்துவிட்டு நடக்க முடியாமல் மயங்கி விழுந்ததையும், பிறகு அவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டியிருந்ததையும், அங்கு அவர்களின் வயிற்றைக் கழுவ வேண்டிய நிலை ஏற்பட்டதையும் அறிவேன். அதிகமாக மது அருந்துவதால் மயக்கம் ஏற்பட்டால், உடனே அந்த மதுவை வயிற்றிலிருந்து வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் உயிருக்கே ஆபத்து நேரிடும். தொடர்ந்து அளவுக்கு மிகுந்து மதுவைக் குடித்தால், உணவுப்பையின் உட்பாகத்தில் கசியும் திரவத்திற்கு வேலையில்லாமல் போய்விடும். இதை ஆங்கிலத்தில் Chronic Alchoholic Gastritis (''நிரந்தர மது உணவுப் பை வேக்காளம்'') என்று சொல்லுவார்கள். அதாவது வயிற்றில் உண்டாக வேண்டிய உணவு சத்துக்கள் குறைந்துபோவது அல்லது இல்லாமலே போய்விடுவது. இந்தச் சமயத்தில் மது அருந்துவதை ஓரளவுக்கு நிறுத்திக் கொண்டாலும் குணம் காணலாம். ஆனால், எங்கே நிறுத்த முடிகிறது?

இப்படி உணவுப் பை செரிக்காதநிலையையடைந்த பிறகு சத்துப் பொருள்கள் இல்லாத காரணமாக மண்ணீரலுக்குப் போதுமான சத்து வருவதில்லை. அதனால், மண்ணீரல் முதலில் பெருத்துப் போகிறது. அவ்வப்போது ஈரலில் வலியும் ஏற்படலாம். நம்நாட்டில் சாதாரணமாக 100-க்கு 40 சதவீதம் பேருக்குப் பெருங்குடலில் அமீபா கிருமிஉண்டு. குடிப்பவர்களின் ஈரலை இந்த அமீபா கிருமி அதிகமாகத் தாக்குகிறது. இதனால், ஈரலில் கட்டியும் உண்டாகிறது. குடிக்காதவர்களுக்கும் ஈரலில் கட்டி அபூர்வமாக வரும். ஆனால், குடிப்பவர்களுக்கு இது சர்வசாதாரணம்.

நான் அரசுப் பொது மருத்துவமனைகளில் 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்திருக்கிறேன். 1938-லிருந்து 1948 வரையில் மதுவிலக்கு அமுலாக்கப்படாத காலம். அந்தக் காலங்களில் சர்வசாதாரணமாக ஒரு ஆண்டிலே எழுபது அல்லது எண்பது பேர் ஈரலில் அமீபா சீழ்க்கட்டி உள்ளவர்களாய் இருந்தார்கள். 1948-இல் மதுவிலக்கு கொண்டுவரப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக இந்த வியாதியும் குறைந்து வந்தது. ஆனால், 1972இல் மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டது. உடனே ஈரல் அமீபா சீழ்க்கட்டி மறுபடியும் பெரும்அளவில் காணப்பட்டது. ஏனென்றால், முன்பு குடித்துப் பழகியவர்கள் மறுபடியும் குடிக்க ஆரம்பித்தார்கள், சிறு வயது வாலிபர்கள் புதிதாகப் பழகிக் கொண்டார்கள். 1974-இல் மறுபடியும் மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இருந்தாலும் குடிக்கப் பழகியவன் உடனே பழக்கத்தை விடவில்லை. சட்டம் ஏற்பட்டது என்ற காரணத்தாலேயே ஒருவன் குடிப்பழக்கத்தை விட்டுவிடமாட்டான்.

மதுவிலக்குச் சட்டம் பிரயோசனப் படவில்லை; குடிக்கிறவன் குடித்துக் கொண்டுதான் இருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் திருடுகிறவன் திருடவில்லையா? ஏன் திருடக்கூடாது என்று, அதையும் ரத்து செய்துவிடலாமே? என்னைப் போலப் பல ஆண்டுகள் மருத்துவ மனைகளில் காலம்கழித்தவர்களுக்குத்தான் மதுவிலக்கின் அருமையும் அவசியமும் தெரியும். 1948-க்கு முன்பாகப் பொது மருத்துவமனையில் அவசர கேஸ்கள் பார்க்கும் அறைக்குச் சென்றால், தினந்தோறும் 5 அல்லது 10 கேஸ்கள் கத்திக்குத்து காயத்துடன் வருவார்கள். 1938இல் ஓர் இரவு முழுவதும் கத்திக்குத்துப் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்தேன். கத்திக் குத்துப் பட்டவர்களைச் சுத்தம் செய்து, காயங்களுக்கு மருந்திட்டு, தைக்க வேண்டிய இடங்களில் தையல் போட்டு, அக் கத்திக்குத்தைக் குறித்துப் போலீஸாருக்குத் தகவல் கொடுத்து எல்லாம் முடிப்பதற்கு ஓர் இரவு முழுவதும் சென்றது. அது 1938இல். 1954-55இல் இந்த மாதிரி ஒன்று அல்லது இரண்டு கேஸ்தான் இருந்தது அறிவேன். பின்னால் 1970இல் நான் வேலையைவிட்டு ஓய்வுபெற்ற பொழுது வருடம் முழுவதும் ஒரு கேஸ்கூட இல்லாமல் இருந்தது. இது ஒன்றே போதுமே மதுவிலக்குச் சட்டம் அவசியம் என்பதற்கு'

1970வரை ஜனங்கள் குடிக்கவில்லையா? குடிக்காமல் இருந்து விட்டார்களா? என்று கேட்கலாம். ஜனங்கள் குடித்திருப்பார்கள், இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் குடித்துவிட்டு நடுத் தெருவிலே கலாட்டாசெய்யாமல் வீட்டிற்குச் சென்றுவிடுவார்கள், நடுத் தெருவிலே நின்றுகொண்டு சண்டை போடமாட்டார்கள்; ஏனென்றால், அப்படி நடுத் தெருவிலே சண்டை போட்டால் தம்மைப் போலீஸார் பிடித்துக் கொள்ளக்கூடும் என்ற பயத்தினால் அப்படிச் செய்யாதிருந்தார்கள். 1972இல் இந்த மதுவிலக்குச் சட்டத்தை அரசாங்கம் நிறுத்தி வைத்தபோது, மக்கள் சர்வசாதாரணமாக நடுத் தெருவிலே குடித்துவிட்டுச் சண்டை போடுவதை நான் பார்த்திருக்கிறேன்.

முதலில் மதுவானது ஈரலைக் கெடுத்துப் பிறகு அமீபா சீழ்க்கட்டியை உண்டுபண்ணுகிறது. இதனால் ஈரலுக்குப் போதுமான சத்துணவு வராததனால் ஈரலின் பல்வேறு பாகங்கள் உணவு இல்லாததன் காரணமாகக் கெட்டுப் போகும். எந்தெந்தப் பாகங்களில் சத்துள்ள உணவு இல்லையோ, அந்தந்தப் பாகங்களில் எல்லாம் ஈரல் உறுப்பு இல்லாமல்போவதால், வெறும் நாரினால் அந்த இடம் நிரப்பப்படுகின்றது. இப்படி ஈரல் இல்லாமல் வெறும் நாராக இருப்பதால், ஈரல் வழியாகச் செல்லக்கூடிய இரத்தக் குழாய்களுக்குத் தடை ஏற்படுவதால் இரத்தத்திலிருந்து நீர் கசியும் உடலுள்ளே. அந்த நோயை மகோதரம் என்பர். மகா என்றால் பெரிது. உதரம் என்றால் வயிறு. அந்த நோய் ஏற்பட்டவர்களுக்கு வயிறு பெரிதாக இருக்கும். அந்த நோய் மது குடியாதவர்களுக்கும் வரும். அவர்கள் சாப்பிடும் உணவில் நிறையச் சத்து இல்லாததனால் அந்நோய் வருகிறது. ஆனால், குடிப்பவர்களின் ஈரலுக்குச் சத்துள்ள பொருள் இல்லாததினால் மகோதரம் ஏற்படுகிறது.

உணவுச் சத்து இல்லாமல் மகோதரம் ஏற்பட்டால் அந்நோய் குணமடையலாம். மது குடிப்பதனால் வரும் மகோதரம் குணமடைவது அரிதிலும் அரிது. சாதாரணமாகக் குடிப்பவர்களுக்கு மகோதரம் ஏற்பட்டால் மிஞ்சிப்போனால், ஒரு வருடத்திற்குமேல் அந்நோயுள்ளவர்கள் உயிரோடு இருக்கமாட்டார்கள். அடுத்து அவர்களுடைய இருதயமும் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக இருதயத்திற்கு வேண்டிய 'பி' வைட்டமின் சத்து இல்லாததால் குடிப்பவர்கள் பலம் குன்றி, பலவீனப்பட்டு நாடி தளர்ந்து போகிறார்கள். இருதயத்தின் தசைகள் தளர்வதால் இருதயம் பாதிக்கப்படுகிறது. இதை ''Alchoholic Cardio Myopathy'' என்பார்கள். அதாவது, மது இருதயத் தசைக் கோளாறு. இதனால் இருதயத் தசை நோய் ஏற்பட்டு, இருதயம் பலவீனப்பட்டு இருதயம் பெரிதாகக் காணப்படும். அப்பொழுது அவர்களுக்குச் சத்துள்ள 'பி' வைட்டமின்பொருள்களைக் கொடுக்கா விட்டால், காலில் வீக்கமும் நடந்தால் மூச்சு வாங்குதலும் ஏற்படும். அவர்களுக்குத் திடீரென்று மரணமும் ஏற்படலாம். மேலும் அவர்களுக்குக் கண்பார்வை போகக் கூடிய நிலைமையும் ஏற்படும். இரண்டு காரணங்களினால் அப்படிப்பட்டவர்களுக்கு மது குடிக்கும்பொழுது சக்திகுறைகிறது: (1)குடித்த பிறகு அவர்களால்நடக்கமுடிவதில்லை; அதற்கு வேண்டிய சக்தியை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். (2) உடலில் வலி ஏற்பட்டால் அதை உணரும் சக்தியை மது குடிப்பவரின் மூளை இழந்துவிடுகிறது.

மது அருந்துபவர்களுடைய மூளைவேலை செய்யும் சக்தியை இழந்துகொண்டே போகிறது. நமது ஈரலில் பல்வேறு விஷப் பொருள்களை முறிக்கும் சக்தி இருக்கிறது. ஆனால் அவர்களுக்குத் தூங்கக் கூடிய மருந்தைக் கொடுத்தால் அவர்கள் அதிகமாகத் தூங்குவார்கள். அவர்களுடைய மூளைக்குப் பகுத்தறியும் சக்திகுறைந்து போகிறது. கொஞ்சம் மது குடித்தவுடனேயே ஒருவனுக்குச் சுய அறிவு மங்கிப் போகிறது. அதனால் 'நாம் என்ன பேசுகிறோம்; நாம் பேசுவது சரியா, தப்பா? என்று அறிந்து கொள்ளும் சக்தி குறைந்து போகிறது. சாதாரணமாகக் குடிப் பழக்கம் இல்லாத நமக்கு வேண்டிய ஒருவன் நம்மை ஏமாற்றினால்,அவனைப்பார்த்தவுடன்,''என்ன ஏமாற்றினாயா? நீ பெரிய மோசடிக்காரன்'' என்று வசை பாடுகிறோம். அவன் கொடுத்து விட்டாலோ அப்படி அவனைக் கோபித்துக் கொண்டதற்காக, அவனிடம் மன்னிப்புக் கேட்கும் மனப் பக்குவத்தைப் பெற்றிருக்கிறோம். குடித்தவனோ அந்த அடக்கும் சக்தியை இழந்து மனத்தில் எது தோன்றுகிறதோஅதைக் கேட்டுவிடுகிறான். இருவரும் குடித்திருப்பார்களேயானால் அவர்களுக்குப் புரிந்துகொள்ளக் கூடிய சக்தி குறைவாக இருப்பதால் கோபம் வருகிறது. சண்டை ஏற்படுகிறது. கையிலே கத்தியோ வேறு பொருளோ இருந்தால் காயங்கள் ஏற்பட ஏதுவாகிறது.

குடித்துவிட்டு மோட்டார் கார் ஓட்டுவார்களேயானால் விபத்துக்கள் சர்வ சாதாரணமாக ஏற்படுகின்றன. பெரும்பாலும் இரவு வேளைகளில் நெடுஞ் சாலைகளில் ஏற்படக் கூடிய விபத்துக்கள் எல்லாம் குடித்துவிட்டு லாரி, பஸ் ஓட்டுவதன் காரணமாகத்தான் ஏற்படுகிறது. குடித்திருப்பவர்கள் மோட்டார் காரை ஓட்டக் கூடாது. கார் ஓட்டுபவன் குடித்து விட்டிருப்பானேயானால் அவனுக்குச் சாலையில் செல்பவர்கள் சரியாகத் தெரியமாட்டார்கள். அவன் நினைத்துக் கொண்டிருப்பான், தான் மோட்டார் காரைச் சரியாகத் தான் ஓட்டுகிறோம் என்று. திடீரென்று யாராவது குறுக்கே வந்தால், சட்டென்று பிரேக் போட்டு நிறுத்துவதற்கு அவனுக்குத் தோன்றுவதில்லை. அதுபோல எதிர் தரப்பில் வண்டி வந்தாலோ, தன்னுடைய வண்டியை விலக்கி ஓட்டுவதற்குச் சட்டென்று புத்தி ஏற்படுவதில்லை. எதிரும் புதிருமாக வரும்இரண்டு வண்டியோட்டிகளும் குடித்துவிட்டிருந்தாலோ கேட்க வேண்டியதே இல்லை. மேலும் குடிப்பவர்களுக்கு ஓர் அற்ப ஆசை உண்டு. அதாவது குடித்தால்தான் நன்றாக இருக்கமுடியும் என்ற ஓர் உணர்ச்சி ஏற்படுவதன் காரணமாக,குடித்துவிட்டு ஓட்டக்கூடாது என்று தெரிந்தும், அவர்கள் குடித்துவிட்டு ஓட்டுகிறார்கள். அவர்கள் அப்படிக் குடித்து வருவார்களேயானால் அவர்களுக்குச் சுய அறிவு சரியாக இல்லாததனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மேலும் குடித்துவிட்டு இருப்பவர்களுக்கு எதிரே வரக்கூடிய வண்டிகளின் வெளிச்சத்தைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி குறைந்துவிடுகிறது.

மது குடிப்பவர்களுக்கு நாளடைவில் நரம்புகளுக்குச் சக்தி குறைந்துவிடுகிறது. அவர்களுக்கு முதலில் கால்களிலும் கைகளிலும்சக்தி குறைந்து, நடக்கும்பொழுது தண்ணீர் மேல் நடப்பதுபோலத் தோன்றுகிறது; நாடி நரம்புகள் தளர்ந்து போகின்றன. முக்கியமாகக் குடியினால் உணவுப் பையும் ஈரலும் கெட்டுப் போகின்றன. அதனால் மது குடிப்பவர்களுக்கு ஆயுள் குறைகிறது.

ஒருசில பிரபல டாக்டர்களும்கூடக் குடித்தால் பரவாயில்லை என்று பேசுகிறார்கள். சாதாரணமாக எந்தச் சட்டமும் ஒரு சிலருக்காக மட்டும் ஏற்படுவதில்லை. பெரும்பாலான ஜனங்களுக்காக ஏற்படுவதே சட்டம். பிரபல டாக்டராயிருந்து நல்ல பணவசதியும் இருப்பவர்களுக்குத் தெரியும், அளவோடு, கொஞ்சமாகக் குடிப்பது தான் நல்லது என்று. அவர்களுக்கு நல்ல பணவசதி இருப்பதனால், நல்ல சத்துள்ள உணவுப் பொருள்களைப் பெரும்பாலும் சாப்பிட முடிகிறது. அதனால் அவர்களால் குடியினால் வரும் நோய்களைத் தடுத்துக் கொள்ள முடிகிறது. அப்படியில்லாமல் பாமர மக்கள் அளவு தெரியாமல் குடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார்கள், சத்துணவுகளையும் சாப்பிடுவது கிடையாது. எனவே, அப் பாமர மக்கள் கூடிய சீக்கிரத்தில் குடியினால் ஏற்படும் வியாதிகளைப் பெற்று மரணத்தைத் தழுவுகிறார்கள்.

குடிப்பவன் குடும்பத்தைச் சேர்ந்த மனைவி மக்கள் படும் கஷ்டத்திற்கு ஓர் அளவேயில்லை. தகப்பன் குடிகாரனாக இருந்தால் அவனுடைய பிள்ளைகளும் அந்தக் கெட்ட பழக்கத்தைக் கற்றுக் கெட்டுப் போகிறார்கள். பெரும்பாலும் குடிகாரன் மகன் நல்லவனாக இருப்பான் என்று சொல்ல முடியாது. பிள்ளைகளுக்குத் தெரிந்து குடித்துக்கொண்டும் சிகரெட் பிடித்துக்கொண்டும் இருக்கும் தகப்பனைப் பார்த்து, அவன் பிள்ளையும் அந்தப் பழக்கங்களைச் சுலபமாகக் கற்றுக் கொள்வதோடல்லாமல், தந்தையை எதிர்த்தும் பேசுவான்; தந்தை அவனுக்குப் புத்திமதி சொன்னால், ''நீ என்ன யோக்கியமா? நீ வந்து எனக்குப் புத்தி சொல்கிறாயே?'' என்பான். இதனால், நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் நம்மைச் சேர்ந்த சந்ததிகளைப் பாதுகாக்கவும் எவரும் மதுவை அருந்தக் கூடாது.

"காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் உண்டார் என்று உந்தீபற
வறட்டுப் பசுக்கள்என்று உந்தீபற"

—திருவியலூர் உய்யவந்ததேவர்,
(கி.பி.1148)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.

# மேலை நாடுகளில் இந்து மதம்

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்திய நாட்டில் வந்து தங்கியிருந்து, இந்து மதத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநாட்டில் பெசுநகர் என்னுமிடத்தில், பிராமி எழுத்துக்களில் நிறுவப்பட்டுள்ள கல்வெட்டுத்தூண் ஒன்றில் ''சுங்கவம்சத்து மன்னனாகிய பகபத்திரன் என்பவனின் அரசவைத் தூதுவனாக அந்தால்கிதாசு என்னும் கிரேக்க மன்னவனால் அனுப்பப்பெற்றவனும், டியோன் என்பவனின் புதல்வனும், தட்சசீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணு பக்தனும் ஆகிய ஈலியோடொரசு என்பவனால் பரவாசுதேவன் எனப்படும் விஷ்ணுவுக்குரிய, புனிதம் மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப்பெற்றுள்ள, இத்தூணானது நிறுவப்பெற்றது'' என்று காணப்படுகின்றது. இதனால் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் முதலிய பிற நாட்டவர்கள், இந்து மதத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்பு மிக்க செய்தி, அறியப்படுதல் காணலாம். மேலும், அமெரிக்க நாட்டில் தற்போதும் பற்பல இடங்களில் இந்துக் கோயில்கள் பல ஏற்பட்டு வருதலை நாம் அறிவோம்.

அண்மையில் உருசிய நாட்டில் நமது இந்து மதத்திற்குரிய இதிகாசங்களாகிய இராமாயணம், பாரதம் முதலிய நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மேலும், பெரியபுராணமும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. இன்னோரன்ன பற்பல செய்திகளால் இந்துமதம், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றிய தாய்ப் பிறங்கிவருதல் காணலாம்.

—ஆசிரியர்.

# திருச்சிற்றம்பலக் கோவையார்

## [கருத்துத் தொகுப்புச் சுருக்கம்]

ந. ரா. முருகவேள், M.A., M.O.L. —(முற்றொடர்ச்சி)

**முன்னுரை:**

மணிவாசகப் பெருமான், தாம் பெற்று நுகர்ந்த இறையருட் பேரின்ப அநுபவத்தின் சிறப்பினை, நம்மனோரும் உணர்ந்து உய்தற் பொருட்டு, நாம் விரும்பும் சிற்றின்ப அநுபவ நிலைகளில் வைத்து,

''அய்ந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவல்''

என்று குமரகுருபர அடிகள் புகழ்ந்து போற்றிப் பாராட்டுகின்ற, திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் இந்தச் சிறந்த செந்தமிழ்த் தெய்விக நூலின்கண்,

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலநெறி வழக்கம்''

என்று, தொல்காப்பியர் முதலிய நம் பண்டைப் பெருந்தமிழ்ச் சான்றோர்கள் வகுத்துச்சென்ற, மரபு நெறியினையே தாமும் பின்பற்றி, ஒரு கதைபோலத் தொடர்ந்து வளர்ந்து நிறைவு பெறும் நாடகத் தமிழியற் பாங்கு அமையும் படி, பாடிச் செல்லுகின்றார். ஆதலின், அப் புலநெறி வழக்கமே பற்றி, இந் நூலின் இறுதிப் பகுதியாகப் ''பரத்தையிற் பிரிவு'' என்பதனை, இலக்கியச் சுவைநலங்கள் கெழும, இனிது அமைத்து இயற்றியருளி முடிக்கின்றார்.

**பரத்தையிற் பிரிவு:**

தலைவன், தலைவியை மணந்துகொண்டு இன்புற்று வாழ்ந்துவருங்கால், ஓதற்பிரிவு-காவற் பிரிவு-பகைதணி வினைப்பிரிவு-வேந்தற்கு உற்றுழிப் பிரிவு-பொருள்வயிற் பிரிவு என்னும் பலவகைப் பிரிவுகளை, இடையிடையே மேற்கொள்ளுதல் போல, இசை ஓவியம் நடனம் நாடகம் முதலிய பலதிற நுண்ணியல் எழிற் கலைகளின்பால் தான்கொண்ட அளவிலா ஆர்வத்தால், தலைவியைப் பிரிந்து ஒரோவழிப் பரத்தையர்பாற் செல்லுதற்கும் தலைப்படுவான். இங்ஙனம் பரத்தையர்பாற் செல்லத் தலைவன் தலைவியை ஒருசில நாட்கள் பிரியும் பிரிவே, ''பரத்தையிற் பிரிவு'' என அகப்பொருள் நூல்களில் வழங்கப்பெறும்.

**இருவகை நூல்கள்:**

நமக்கு அறிவு தெருட்டும் நூல்கள் எல்லாம், பொதுவாக நாம் இருக்கும் நிலை கூறுவன (Realistic Portraiture) என்றும், இருக்கவேண்டும் நிலை கூறுவன (Idealistic Delineation) என்றும், இருவகைப்படும். முன்னையது பற்றித் தொல்காப்பியரும், பின்னையது குறித்துத் திருவள்ளுவரும், இப்பிரிவு நிகழ்தலை, முறையே தம் நூல்களில் ஏற்ற பெற்றி குறிப்பிட்டு விளக்கிப் போந்தனர். மணிவாசகரோ, தம்மையும், தம்போலும் ஞானிகளையும்கூட, ஒரோவழி ''ஆறுகோடிமாயாசக்திகள் வேறுவேறு தம் மாயைகள் தொடங்கி'' (திருவா-4, 44-45) மயக்கி மருட்ட முயன்று, தம்முடைய திருவருட் பேற்றின்பத்திற்கு இடையூறு விளைவிக்கும் இயல்புகளை யெல்லாம், நம்மனோர்க்கு விளக்கி விழிப்பூட்டும் ஒருவகைக் கருவியாக மட்டுமே, இப்பகுதியை மேற்கொண்டருளினார்.

**சீரிய தெய்விக நுண்பொருள்:**

தலைவன் என்பது, உயிர் (சீவான்மா). திருவருள்தான், சீவான்மா அணைதற்குரிய தலைவி! அத் தலைவியொடு கூடி இன்பம் நுகரவொட்டாமல், உயிரை அருள்நெறி நின்று பிரித்து, மருள்நெறி ஆகிய உலகியல் நெறிக்கு ஈர்த்து மயக்கி மருட்ட முயலும் ஆறுகோடி மாயாசக்திகள் தாம், பரத்தையர்கள். தலைவி ஒருத்தியேயாதலை, ஒன்றேயாய் விளங்கும் திருவருட் டிறன் உணர்த்துகின்றது. பரத்தையர் பலராதலை, ஆறுகோடி மாயாசக்திகள் என்னும் தொடர் சுட்டுகின்றது. பரத்தையர்கள் பலர் மயக்கிக் கெடுக்க முயலினும், தலைவன் அவர்களின் புன்மையினை என்றேனும் ஒருநாள் நன்குணர்ந்து தெளிந்து, அவர்களை அறவே வெறுத்து ஒதுக்கி, இறுதியில் தலைவியுடன் கூடி இன்பம் நுகர்ந்துஇனிது

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்கவும்)

# முருகன் பெருமை

"சைவசித்தாந்தக் கலைச் செல்வர்"
திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,
காஞ்சிபுரம்.
Dy Commissioner H.Qrs. (Retired)
HR&CE Administration Dept.

உலகில் உயர்ந்த பிறப்பெடுத்த மக்கள் அப்பிறப்பால் அடைவதற்குரிய சிறந்த பேறு, உலக முதற் பொருளாகிய இறைவனைத் தலைப் பட்டுணர்ந்து பேரின்பம் எய்துதலே ஆகும். இதனையே நக்கீரர் "செவ்வேற் சேஎய்-சேவடி படரும் செம்மல் உள்ளமொடு- நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்-செலவு" எனவும், "பெறல் அரும் பரிசில்" எனவும், திருமுருகாற்றுப்படையில் குறித்தருளினார். ஏனைய உலக நலன்களும் இறைவழிபாட்டால் எய்தற்பாலனவே ஆகும். "சிற்றம்பலம்மேய-செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்றருளிச் செய்த திருஞானசம்பந்தப் பெருமானின் திருவுள்ளக்கிடை இதுவே! உலகப் பொதுமறை வகுத்தருளிய திருவள்ளுவனார்க்கும் கருத்து இதுவே என்பது, அவர் நூலால் உணரப்படும்.

இறைவனது உண்மையியல்பு நம் மன மொழிகளைக் கடந்தது; ஆயினும், அவன் பேரருள் உடையவன். ஆதலின், அவன் தன்னை அன்பால் நினைந்து தொழுவார்க்கு, அவர் காணவும், கருதவும், பொருள்சேர் புகழைச் சொல்லவும், தொழுது இன்புறவும் ஆம்படி எளிவந்து, வெளிப்பட்டருளிய வரலாறுகள் பலப்பல. அங்ஙனம் முதல்வன் வெளிப்பட்டருளப்பெற்ற பெருமக்கள், தாம் கண்ட திருக்கோலத்தையும், பெற்ற பேறுகளையும் கிளந்தோதிய வாய்மொழிகளே பொருள்சேர் புகழ் எனவும், நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி எனவும், திருமுறைகள் எனவும், திருப்புகழ் எனவும், நம் தமிழகத்தே நிலவி வருகின்றன. அங்ஙனம் வெளிப்பட்டருளிய திருக்கோலங்களுள், திருமுருகனின் திருவுருவங்களும் சேர்ந்தவை என்பது தெளிவு.

இவ்வடிப்படை உண்மையை "நானாவித உருவாய் நமை ஆள்வான்" எனத் திருஞானசம்பந்தரும், "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்-திருநாமம் பாடி நாம்தெள்ளேணங் கொட்டாமோ" எனத் திருவாதவூர் அடிகளும், அருளிச் செய்தமை கொண்டு சிந்தித்துத் தெளியலாம்.

முதற்பொருளின் உண்மையியல்பாகிய கடவுள் நிலை, மாற்றம் மனங்கழிய நின்றது. ஆயினும், எவ்வாற்றானும் உணரப்படாதது அன்று, "உரை உணர்வு இறந்த நின்று உணர்வதோர் உணர்வே" எனத் திருவாதவூர் அடிகள் கூறுகின்றார்; ஆதலால், மருட்கையுணர் வினீங்கி அவாவறுத்தார்க்கு முதற்பொருள் அருளொளி விளங்கும் பேரின்ப வெளியாக அனுபவப்படுவதென்பதே, மெய்யுணர்ந்தார் முடிபு. "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி-அருளொடு நிறைந்தது எது" என்பது தாயுமான அடிகள் திருவாய்மொழி. ஞானத்தால் தொழும் சிவஞானிகளுக்கு உணரவரும் ஞானவுருவ அருளொளியே பராசக்தி (மேலான ஆற்றல்) எனவும், மோன பரானந்தமே பரமசிவம் (மேலான, தூய மாறுதல் இல்லாத பேரின்பம்) எனவும், இருவகைப் பட வைத்து, உயர்ந்த நூல்களால் உணர்த்தப் படும்.

பராசக்தியைச் சித்து (அறிவு) எனவும், பரசிவத்தை ஆனந்தம் (இன்பம்) எனவும் கூறுதல், வேத வழக்கமாம். தூய இயற்கைப் பேருணர்வும், ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமும் ஆகிய இவ்விரண்டும், ஒரே பொருளின் ஈரியல்புகளே ஆகும்; அப்பொருள் தோற்றக் கேடுகள் இன்றித் தூய்தாய், என்றும் ஒரு படித்தாய் உள்ளது. இக்கருத்துப் பற்றி அதனைச் சத்து என உபநிடதங்கள் உரைக்கின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவர் முதற் பொருளை மெய்ப்பொருள்- உள்ளது-செம்பொருள்-வாய்மை என்னும் பெயர்களால் குறித்தருள்கின்றார்.

இத்தகைய முழுமுதற் பொருளின் இயல்பைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர், எல்லோருடைய மனத்தையும் கவரும் மாண்பும் இனிமையும் தூய்மையும் வாய்ந்த, மலரோடு ஒப்பிட்டு மகிழ்ந்து உளங்கொண்டனர். இதனைப் "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்பம் ஆவண்ணம் மெய்கொண்டவன்" என்னும் திருவிளையாடற் புராணச் செய்யுளால் உணர்ந்தின்புறலாம். பூவின் பிழப்பும் அதன் வண்ணமும் (நிறமும்) போலப், பரமசிவனும் பராசக்தியும் பிரிப்பின்றிக் கூடியுள்ளனர். பூ தன்னையடைந்தோர்க்கே இன்பந்தருவது, ஆயின், அதிலிருந்து முளைத்து விரிந்த பரவும் முருகு (மணம்), நாமிருக்கும் இடத்தில் வந்து இன்பு ஊட்டிப், பூவின் இருப்பையும், அதனை எய்துமாற்றையும் நினைப்பித்து உணர்த்துவது.

இங்ஙனம் பரம்பொருளினின்றும் முளைத்தெழுந்து, எத்துணையும் எளியோமாய்க் கீழே உள்ள நம் நிலைக்குத் தக்கபடி இறங்கி வந்து, அருள்புரியும் முதற்பொருளின் அதோமுக சத்தியே, முருகு அல்லது முருகன் எனப்படும். அதோ முகம்-கீழ்நோக்கிய முகம்.

திருமுருகன், எங்கும் சிவபிரானுடைய குமாரனாகவே கூறப்படுதல் உலங்கொளற்பாலது. பண்டைத் தமிழகத்தே ''பிள்ளையார்'' என்னுந்திருப்பெயர் குமாரக் கடவுளையே குறித்து வந்தது என்பதும், எண்ணுதற்கு உரியது.

முருகு என்னும் சொல், தெய்வத்தன்மை என்னும் பொருளைக் குறிக்கும் என்பர் நச்சினார்க்கினியர். பூவின்கண் அடங்கியிருந்து அது மலரும்பொழுது வெளிப்பட்டு விரிந்து, அப்பூவினையும் தன்கண் அடங்கக்கொள்வது பூவின்மணம்; அதுபோல, உயிரின் கண்ணும் உலகத்துப் பொருள்களினும் காணப்படாது அடங்கிநின்று, பின் அன்பின் முதிர்ச்சியால் வெளிப்படுவதே தெய்வத்தன்மை; இதனை, ''பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல் சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது'' என்னும் திருமந்திரத்தாலும், ''உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல்-பற்ற லாவதொர் நிலையிலாப் பரம்பொருள்'' என்னும் திருவாசகத்தாலும் தெளிந்துகொள்க. எத்துணையும் அரியபெரிய சிவபிரான், எத்துணையும் எளிய கடைப்பட்ட உயிர்கள், உலக வாழ்வில் அழுந்தித் துன்புறுங் காலத்தில், தன்னை நினைப்பின், அவர் நினைந்த உருவில் விரைந்துசென்று இடுக்கண் தீர்த்து அருள்புரியும் கருணைத் திறமே, பண்டைத் தமிழ்ச் சான்றோர்களால் முருகு எனப்பட்டது என்பது இதனால் இனிது விளங்கும்.

நக்கீரர் முருகப்பெருமானை இங்குக்கூறியபடியே எண்ணியுள்ளார் என்பது, திருமுருகாற்றுப்படை வரலாற்றால் உணர்தல் கூடும். சிவபூசையில் நினைவு வேறு ஆனமை பற்றி, ஒரு பூதத்தால் மலைக்குகையில் அடைபட்டிருந்த போது, நக்கீரர் பின்வருமாறு எண்ணினார் எனச் சீகாளத்திப் புராணம் கூறுகின்றது:-

''வரைபுணர் குறிஞ்சி மன்னன்
வரைபக எறிந்த செவ்வேள்
முருகலர் அலங்கல் திண்டோள்
முருகன்என் றவன்பொற் றண்டைத்
திருவடி மலர்இ றைஞ்சில்
தீவினைச் செல்லல் முற்றும்
பருதியங் கடவுட் கண்ட
பனியென அகன்று போமால்!
(1)

''ஆறிரு தடந்தோள் அண்ணல்
ஆறெழுத் தினையும் ஓதில்,
வேறொரு பிணிபோம் என்கை
வியப்பதோ? பிறவி என்னும்
மாறரும் அநாதி நோயும்
மாறிவே தாக மங்கள்
கூறரும் இன்ப வீட்டிற்
குடிபுகுந் திருப்பர் அன்றே!
(2)

''ஐம்பெரும் பூத வாயின்
அகப்படும் உயிரை மீட்டுச்
செம்பொனஞ் சிறுச தங்கைத்
திருவடி நிழலில் வைக்கும்
நம்பிநம் குமர வேட்கிந்
நாள், ஒரு சிறுபூ தத்தால்
இம்பரிங் குறுநோய் தீர்த்தல்
எளிதலால் அரிய தன்றே!
(3)

''இன்னன நினைந்து கீரன்
இலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியும் ஆரப்
பருகமு தாகி, ஓதில்
உன்னிய உன்னி யாங்கிங்
குதவுவ தாகிப், பாவுள்
முன்னுற வந்து நிற்கும்
முருகாற்றுப் படைமொ ழிந்தான்!

நக்கீரர் பாண்டியன் நன்மாறனை 'முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்'' எனக் கூறுதலின் முருகன், தன்னை வழிபடுவோர் தம் குறையை எடுத்துரைக்க மாட்டார் ஆயினும் அவர் கருத்தறிந்து குறைமுடிக்கும் தெய்வம் எனக் கருதிவந்தார் என்பது விளங்குகின்றது.

கலியுக வரதன் எனவும், தமிழ்த் தெய்வம் எனவும், ஓங்காரப் பொருளெனவும், உயர்ந்தோரால் எண்ணி இறைஞ்சப்படும் முருகப்பெருமானை உள்ளன்புடன் வழிபடும் அன்பர்கள் அனைவரும் தாம் தாம் விரும்பி வேண்டும் நலங்களை எல்லாம் வேண்டியவாறே அடையப் பெறுவர் என்பது திண்ணம்.

# தெய்வச் சேக்கிழாரும் செந்தமிழ் மரபும்

திரு. ம. அ. முருகேசன், B.A., B.L.
மாவட்ட நீதிபதி, மதுரை.

R. RAJU, Dy Commissioner H.Qrs. HR&CE

கவி, ஆசு கவி, கவிச் சக்கிரவர்த்தி, புலவர் என்ற பட்டங்கள் பலருக்கு இருந்த போதிலும், 'தெய்வப் புலவர்' என்று தமிழகத்திலேகொண்டாடப்படுபவர்கள் நம் சேக்கிழார் பெருமானும், வள்ளுவப் பெருந்தகையுந்தான். எல்லோருக்கும் பொதுவான ஒரு நெறியைவகுத்து, 'பொது மறை' என்று புகழ்ந்து பேசப்படும் திருக்குறளை இயற்றியதனாலே, திருவள்ளுவர் ''தெய்வப் புலவர்'' என்று கொண்டாடப்படுகிறார். ஆனால், அந்தப் பெருமையை, ஒரு காப்பியத்தைச் செய்த, சேக்கிழார் பெருமானுக்கும், தமிழ்ப் பெருமக்கள் வழங்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர் காப்பியத்திற்காக எடுத்துக்கொண்ட கதையும், அதைச் சொல்லுவதற்காக அவர் கையாண்ட முறையும், நடையுமே ஆகும். நம்பியாரூரர் செய்திருந்த திருத்தொண்டத் தொகையிலிருந்து, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். அந்தத் திருவந்தாதியை ஆராய்ந்து அதை ஒரு பெரும் காப்பியமாகச் செய்திருக்கிறார் சேக்கிழார் பெருமான். பல சிறு கதைகள் போல் தோன்றுகின்ற வரலாறுகளை, எந்தக் காலத்திலோ, எந்தச் சூழ்நிலையிலோ நடந்த நிகழ்ச்சிகளை—தொகுத்து ஒருபெருங்காவியத்திற்குள்ள இலக்கணம் முழுவதும் அமைத்து, அதைத் 'திருத் தொண்டர் புராணமாக', ஒரே காப்பியமாகச் செய்தது, சேக்கிழாரின் பேராற்றலே!

'தெய்வம்' என்று சொன்னவுடன், ஒருவரின் நினைவிற்கு வருவது, வாய்மையும், தூய்மையுந்தான். ஒருவர் பொய்யே பேசும் இயல்புடையவராக இருந்தாலும், 'கடவுள் ஆணையாகச் சொல்லுங்கள்' என்று சொன்னவுடன், அவர் பொய் சொல்லத் தயங்குகிறார். உண்மையை ஒப்புக்கொள்ள விருப்பமில்லாவிட்டாலும், பொய்யைச் சொல்லாமல் நழுவிவிடுவதையும் பார்க்கிறோம். அதே போல, நாள் எல்லாம் தூய்மையில்லாமல், எப்படியோ இருந்தாலும், கோவிலுக்குப் போக வேண்டும், இறைவழிபாடு செய்ய வேண்டும் என்றவுடன், முதன் முதலில் நமக்கு எண்ணம் வருவது, உடல்சுத்தமாகயிருக்கிறதா குளித்திருக்கிறோமா என்பது தான். ஆங்கிலத்தில் கூட, '' Cleanliness is next to Godliness என்று தூய்மையை இறைவனுடன் சேர்த்தே சொல்லுகிறார்கள். இறை வழிபாடு என்று சொன்னவுடன், முடிந்த வரை நம்முடைய மன விகாரங்களை அடக்கியாளவும், சிந்தையை நல் வழிப்படுத்தவும் முயலுகிறோம். ஆக, வாய்மை, தூய்மை, விகாரமின்மை ஆகியவைகள் இறைவனுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றன. சேக்கிழார் தாம் செய்த பெருங்காப்பியத்தில், இந்தக் கோட்பாடுகளைப் பெரிதும் கடைப்பிடித்திருக்கும் காரணத்தினால்தான், அவரைத் 'தெய்வப் புலவர்' என்று கொண்டாடுகிறோம்.

இறை அருள் என்பது பாலில்படும் நெய் போல எல்லாரிடமும் இருந்தாலும், தயிரில், வெண்ணெயில்படும்நெய் போலச் சிலரிடம் அது நிலைத்துத் தெளிவாகயிருக்கிறது. அவர்கள் அருளாளர்கள். அப்படிப்பட்ட அருளாளர்கள் வரிசையில் சேக்கிழார் பெருமானும் வருகிறார். 'தவமும், தவமுடையார்க்கே' என்றபடி, இறை அருளைப் பெறும் வாய்ப்புக்காக, அவர் தவம் செய்திருக்கிறார். அந்தப் பயனை அவர் அடைந்து, அந்த இறை அருளால் 'திருத் தொண்டர் புராணம்' என்ற பெரும் காப்பியத்தைச் செய்திருக்கிறார். அப்படிச் செய்த போது, அதிலே தெய்வ மணம் கமழும்படிச் செய்திருக்கிறார். தான் எடுத்துக் கொண்ட வரலாற்றில், அதைச் சொல்லிய முறையில், அப்படிச் சொல்லக் கையாண்ட சொற்களில், அவர் வாய்மை, தூய்மை, விகாரமின்மை, தொன்மையான மரபு, ஆகியவற்றைக் கடைப்பிடித்து, அந்தக் காப்பியம் முழுதும் தெய்வ மணம் கமழச் செய்து, அதைப் படிப்பவர் மனத்திலே பக்தியை வளரச் செய்திருக்கிறார் இதுபற்றியே, 'தெய்வமணம் மணக்கும் செய்யுள்' என்றும் 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ'', என்றும் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாராட்டுகிறார். ''தோடு செய்த திரு நெறிய தமிழோடுஒக்கும்'' என்றும், ''அகத்தியனும் ஒப்பல்லன்'' என்றும், உமாபதி சிவம் பாராட்டுகிறார். இந்தப் பாராட்டுக்கு எல்லாம் அடிப்படையான சிலவற்றைப் பார்ப்போம்.

ஒரு பெரியவருக்கு ஏதாவது ஒரு சிறு குறையிருந்தால், அந்தக் குறையினாலேயே, அப்பெரியவரின் பெருமை குறைந்து விடுமோ அல்லது மக்கள் அவர் பெருமையைக் குறை வாக மதித்துவிடுவார்களோ என்று ஐயப்பட்டு, அந்தக் குறையை மூடி மறைப்பது தான் வழக்க மாக நடப்பது. திரு நீலகண்டரிடம் கூட ஒரு குறை இருந்தது. அடியார்பால் பக்தியும், அன்பும் கொண்டு, அவர்களுக்குத் திருவோடு செய்து வழங்கி வந்தவர் திருநீலகண்டர். அப் படிப் பக்தியும், சீலமும் உள்ள அவருக்குப் பரத்தையரின் உறவு இருந்தது. அப்படி, அவர் பரத்தையர் உறவு கொண்டிருந்தார் என்று சொல்லுவதனாலேயே, அவருடைய பெருமை மாசுபட்டுவிடுமோ என்று எண்ணுவது என்பது இயல்புதான். பல நாட்களுக்கு முன்பு வந்த 'திருநீலகண்டர்' என்ற திரைப்படத்தில் கூட, பரத்தையர் வீட்டிற்குப் போய் வந்தார் என்று காட்டினால், அவருடைய பெருமை குறைந்து விடுமோ என்று பயந்து, அவர் ஆல யத்திலிருந்து திரும்பி வரும்போது, மழை பிடித்துக்கொண்டதாகவும், அப்பொழுது அவர் ஒரு தேவதாசி வீட்டில் ஒதுங்க நேரிட்டதாக வும், அதைத் தொடர்ந்து, அவருக்கும் அவர் துணைவியாருக்கும் பூசல் ஏற்பட்டது என்றும், காட்டினார்கள். எனவே, பெரியவர்களிடத் தில் இருக்கக் கூடிய குறை எதையும் மறைத்துச் சொல்லுவதே மனித இயல்பாக இருக்கிறது. அப்படிச் சொல்லுவது நல்ல எண்ணத்தின்பாற் பட்டிருக்கலாம். ஆனால், அது உண்மைக்கு முரணானது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். திருநீலகண்டர் வாழ்க்கையி லிருந்த இக்குறையை அப்படியே சொல்வதா னால், அவர் பெருமைக்கு மாசு ஏற்படலாம். அல்லது அதை மறைத்துச் சொல்வதானால் அது உண்மைக்குப் புறம்பாகிவிடலாம். இந்த நிலையில், சேக்கிழார் பெருமான் அதி அற்புத மாகச் சொல்லுகிறார். ''இன்பத் துறையில் எளியரானார்'' என்று அவருக்குப் பல பெரு மைகள் இருந்த போதிலும், சிற்றின்பத் துறை யிலே அவர் சபலம் கொண்டிருந்தார் என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஒரு மாணவன் பல பாடங்களிலே கெட்டிக்காரனாகயிருந்தும், கணக்கிலோ அல்லது வேறொரு பாடத்திலோ அவருக்குத் திறமை போதவில்லையென்றால், "பையன் கணக்கில் கொஞ்சம் தொய்வு (weak)" என்று நாகரிகமாகக் குறிப்பிடுகிறோம். அப் படிச் சொல்லும்போது, அது உண்மை நிலை யைக் காட்டுவதுடன், சொல்லும் முறையும், மரபு வழுவாமல் தரம் உயர்ந்ததாயிருக்கிறது. இங்கே சேக்கிழார் பெருமானும், ''இன்பத் துறையில் எளியரானார்'' என்று சொல்லும் போது, வாய்மையையும், மரபையும் காக்கி றார்.

தமிழ் மொழியிலே எதையும் மங்கல மாகச் சொல்ல வேண்டுமென்று ஒரு மரபு உண்டு. விதந்துவான நிலையை ''தாலி பெரு கியது'' என்றும், வயது முதிர்ந்த கிழவியைப் ''பேரிளம்பெண்'' என்றும் தான் சொல்லுகி றோம். இது தமிழ் மொழிக்கே உள்ள ஒரு சிறப்பான மரபு. சொல்லுவதற்கும், கேட்ப தற்கும் இனியனவாகயிருக்க வேண்டும் என்ற நோக்கிலே இப்படி ஒரு மரபு தமிழுக்கு வாய்த் திருக்கிறது. இந்த மரபு பிறழாமல் எழுத வேண்டுமானால், அமங்கலச் சொற்களை அறவே தவிர்க்க வேண்டும். ஆயிரக்கணக்கான பாடல்களைக் கொண்டு, வேறு வேறு நிகழ்ச்சி களைச் சொல்லி ஒரு பெரிய காப்பியம் செய் யும்போது, அமங்கல நிகழ்ச்சிகள் இல்லாமல் இருக்க முடியாது. அப்படி அமங்கல நிகழ்ச்சி கள் வந்த போது, அமங்கலச் சொற்களைத் தவிர்ப்பது மிகக் கடினம். சொல்லுவதை விளக்கிச் சொல்லவேண்டும் என்பதற்காகவோ கேட்டவர் மனதில் எளிதாகப் பதியவேண்டும் என்பதற்காகவோ; அல்லது ஓசை நயத்திற்கா கவோ, கவிஞன் தன்னையும் மறந்து, அமங் கலச் சேதிகளையோ, அமங்கலச் சொல் லையோ சொல்ல நேர்வது உண்டு.

சீதையின் திருமணத்திற்குப் புறப்பட்ட தயரதனின் படைப் பெருக்கத்தை, ''உழுந்து இட இடம் இலை உலகம் எங்கணும்'' என்று கம்ப நாடர் கூறியிருப்பதை நினைவில் கொள் ளலாம். 'ஊசி குத்த இடமில்லை' அல்லது 'எள் விழ இடமில்லை' என்று தான் மக்கள் பெருக்கத்தைச் சொல்லுவது வழக்கம். 'எள்' என்பது அமங்கல நிகழ்ச்சியுடன் தொடர்பு கொண்ட காரணத்தினால், அதை நாம் மங் கலச் சொல்லாக ஏற்றுக் கொள்ளுவதில்லை. ''கையினால் எள் நீர் விட்டுக் கடன் கழிப் பாரைக் காட்டாய்'' என்று கும்பகன்னன் வாயிலாகக் கம்பரே சொல்லுகிறார். இது பற்றியே, மங்கல நிகழ்ச்சியாகிய திருமணத்தை முன்னிட்டுக் குறிப்பிடும்போது, எள் விழ இட மில்லை என்று சொன்னால், அது அமங்கல மாகப் படும் என்ற நினைவிலேதான், அப்படிச் சொல்லாமல் ''உழுந்து இட இடம் இலை'' என்று கம்பர் சொல்லுகிறார் என்பதை நினைத்துப் பாராட்டுகிறோம்.

இப்படி மரபைக் காத்து வந்த கம்பர்கூட, ஓரிரு இடங்களிலே தடுமாறிவிடுகிறார். அனு மனுக்கும், இந்திரசித்துக்கும் வாக்குவாதம் வந்தபோது, இந்திரசித்து, அனுமனைப் பார்த்து, ''உன்பக்கத்திலே வில்லை எடுத்துப் போர் புரியக்கூடிய வில் வீரர்கள் இருக்கிறார் களா?'' என்று கேட்க, அதற்கு அனுமன், ''வில்லை எடுப்பதற்கு மட்டுமல்லாமல், உன் உயிரைக் குடிப்பவர்களும் என் பக்கத்திலே யிருக்கிறார்கள்'' என்று சொல்லுவதாக அமைத்துக் கம்பர்,

''வில் எடுக்க உரியார்கள், வெய்ய சில
வீரர், இங்கும் உளர், மெல்லியோய்!
கல் எடுக்க உரியானும் நின்றனன்;
அது இன்று நாளையிடைக் காணலாம்''

என்று பேசுகிறார். இது வாக்குவாதத்தில் அனுமனின் பேச்சு ஆற்றலைக் காட்டுகிறது என்றாலும், ''கல் எடுக்க'' என்ற அமங்கலச் சொல் அமைந்திருப்பதை நாம் மறக்க முடி யாது. இப்படி ஓரிரண்டு இடங்களிலே தம்மை யும் அறியாமல், அமங்கலச் சொற்கள் விழுந்து விடுவது உண்டு. ஆனால், சேக்கிழார் பெருமானின், காவியத்திலே இம்மாதிரி சொல் லை நாம் பார்க்க முடியவில்லை.

நாவுக்கரசருக்கு அமுது படைக்க இலை பறித்து வரச் சென்ற அப்பூதி அடிகளின் மகன், அரவம் தீண்டி இறந்து விடுகிறான். அதை மறைத்து, அப்பூதி அடிகள் நாவுக்கரசருக்கு அமுது படைக்கிறார். உட்கார்ந்த வாகீசர், அப்பூதி அடிகளை நோக்கி, ''உமது மகன் எங்கே?'' என்று கேட்கிறார். அதற்கு அப்பூதி அடிகள், ''இப்போதிங்கவன் உதவான்!'' என்று கூறுவதாகச் சேக்கிழார் பாடுகிறார். இது உண்மை நிலையைக் கூறுவதுடன், அமங்கலச் சொல்லும் இல்லாமல் இருக்கிறது. இது சேக்கிழார் பெருமானுக்குக் கைவந்த கலை ;

பல சிறு வரலாறுகளைத் தொடுத்துப் பெரும்காப்பியமாக்கிய நிலையிலும், தமிழ் மரபைச் சேக்கிழார் மாற்றாமல், வரலாற்றுடன் இணைத்தே பேசுகிறார். தன்னேரில்லாத் தலைவனும், தலைவியும், ஊழ்வினை வயத்தால், ஒருவரை ஒருவர் கண்டு, இறையருள் கூட்ட ஒருவரை ஒருவர் காதல்கொண்டு, கற்பியல் வாழ்வில் ஈடுபடுகின்றனர் என்பது தொல்காப்பியர் கூறும் நெறி.

''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை யின்றே''

என்பது தொல்காப்பியச் சூத்திரம் (பொருளதிகாரம்-கற்பியல் -93) ''பால தாணையின்'' என்பதற்குப் ''பால் வரை தெய்வத்தின்ஆணையாலே'' என்று பொருள் கண்டிருக்கின்றனர்.

''ஒளிப்பினும், ஊழ்வினை ஊட்டாது கழியாது, கடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென் கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும், வெங்கதிர்க் கனலியும், தண் கதிர் மதியமும் தங்கதி வழுவித் தலைப் பெய்தாற் போலவும் தலைப்பெய்து ஒருவரொருவரைக் காண்டல் நிமித்தம் தமியராவர்''

என்று இறையனார் அகப் பொருள் சூத்திர உரை கூறுகிறது.

எனவே, தமிழ் மரபுப்படி, தெய்வ ஆணையின்படியும், விதி வழிப்படியுந்தான் தலைவனும், தலைவியும் கூடுகிறார்கள்.

கைலையிலே, சிவபெருமானின் அணுக்கத் தொண்டராக இருந்த ஆலால சுந்தரர், இறைவியின் பணிப்பெண்ணாகிய அநிந்திதை கமலினிபால் மனம் வைத்த காரணத்தால், பூவுலகத்தில் பிறந்து ஒருவரை ஒருவர் கண்டு, தலைவனும், தலைவியும் ஆகிறார்கள். ஆலால சுந்தரர் நம்பியாரூரராகவும், அநிந்திதை பரவையாராகவும், பூவுலகில் வருகிறார்கள். திருவாரூரிலே, வீதிவிடங்கப் பெருமானைத் தரிசிக்க வந்த பரவையாரைக் கண்டு காதலிக்கிறார். இது, தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் கண்ட சந்திப்பு. இந்தக் கூட்டம், கடவுள் ஆணையால் நடந்தது என்று தமிழ் மரபை ஒட்டி, ''பண்டைவிதி கடைக் கூட்டப் பரவையாருங் கண்டார்'' என்று சேக்கிழார் பெருமான் அற்புதமாகச் சொல்லுகிறார். அப்படிச் சொல்கையிலே அவர் வரலாற்றை மாற்றவில்லை: மரபையும் மாற்றவில்லை; வரலாற்றையும், மரபையும் அழகாக இணைக்கிறார். இப்படி வாய்மையையும், தூய்மையையும், மரபையும் சிறிதும் வழுவாமல் இறையருளைப் பெற்ற அருளாளர்கள் வாழ்க்கையைச் சொல்லித் திருத்தொண்டர் புராணம் என்ற மாக் கதையை ஆக்கியதால்தான், நம் சேக்கிழார் பெருமானைத் ''தெய்வப் புலவர்'' என்று தமிழகம் கூறுகிறது.

# இந்து மதத்தின் சிறப்பு

''கடந்த நாற்பது (40) ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு' இந்து மதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக்கூடியதும், ஆகிய சிறந்த மதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் நனறாக உணருகின்றேன். இந்து மதத்தினை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனை புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளு-கின்றோமோ, அத்துனை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்''

—அன்னி வசந்தை,

தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்.

"After a study of years years and more, of great religions of the world, I find none so perfect, none so scientific, none so psilosophical and none so spiritual as the great religion known by the name Hinduism. The move you know it, the more you will love it; the move you try to understand it the move deeply yon will value it"

—Dr. Annie Besant.

# சமய இலக்கியம்

'திருக்குறள் பீடம்'
தவத்திரு அழகரடிகள்,
மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்.

**முன்னுரை :**

சமயம் என்பது, ஒரு செம்மையான தகுதியைக் குறிக்கும்; செம்மை, தலைமைப்பாட்டுக்கும் நன்மைக்கும் உரியது. சமயநிலை தவிர மற்றவை அப் பெரிய நிலைக்கு எட்டும் வாய்ப்பில் இல்லை என்பது, அச் சொல்லைக் கொண்டே தெளிந்து கொள்ளலாம். காரணம் சமய உண்மைகளை எண்ணினால் விளங்கி விடும். இரண்டொன்று கருதலாம்.

**உண்மைத்திறன்:**

சமய உணர்வை, 'மெய்யுணர்வு' என்றுங் கூறுவதுண்டு; மெய்யைப் பற்றிய உணர்வு என்பது அதன் பொருள்; மெய்ம்மை என்பது ஒரு பண்பு; பண்புக்கு அதனுடைய ஒரு பொருள் வேண்டும்; குணி இல்லாமல் குணம் இல்லை. அந்தந்தப் பொருளைச் சார்ந்து பழகித்தான், அதன் இயல்பாகிய மெய்யுணர்வை யாரும் அடைய முடியும். சமயம் இப்படி உண்மையைத் தேடுகிறது. அப்படியானால் மற்றவை, பொய்யைத் தேடுகின்றன என்றாவது ஒரு முடிபுக்கு வரவேண்டும்; அல்லது அறைகுரையாக மெய்யைத் தேடுகின்றன என்றாவது துணிந்தே தீரவேண்டும். மக்களின் உணர்ச்சி கிளர்ச்சிகளை, ஆற்றலை, உண்மைக்குத் திருப்புகிறது சமயம்; பல துறைத் தலைவர்களுக்கும்தொண்டர்களுக்கும், 'உண்மையை நினையுங்கள், உண்மையைப் பேசுங்கள், உண்மையைச் செய்யுங்கள்' என்றுதான் அறிவுறுத்துகிறது சமயம்.

''மெய்ம்மையாம் உழவைச் செய்து.....
செம்மையுள் நிற்பாராகில்''

என்பது அப்பர் திருமொழி.

**வல்லமைப்பாடு :**

அந்த மெய்யுணர்வின் இயல்பை, அருளுணர்வு என்றும் சொல்வதுண்டு. அதன் கருத்து பிறர்க்கென வாழ்தல்; அருள் என்னும் சொல்லுக்கு வல்லமை என்று பெரியோர் பொருள் செய்திருக்கின்றனர். ''அருள் அது சத்தி'' என்பர் மெய்கண்டார். பிறர்க்கென வாழ்தலால் யார்க்கும்வாழ்க்கைஆற்றல் கொள்கிறது. உடம்பிலும் ஆற்றல், உள்ளத்திலும் ஆற்றல், உயிரிலும் ஆற்றல்; அன்பும் அருளும் அறனும் இங்ஙனம் பேராற்றல் பயப்பதனாலேதான், பொன்னும் பொருளும் போகமுமே பொருளென்று எண்ணாமல், அன்பும் அருளும் அறனும் விரும்பியது பரிபாடல். இவ்வாறு ஆற்றலான வாழ்க்கையை உருவாக்குவது சமயம். ஒரு காலம் வறுமை தாண்டவமாடிய திருவீழிமிழலை என்னும் ஊருக்கு அருகிற் செல்ல நேர்ந்தபோது, அப்பரும் சம்பந்தரும், கோழைகளாகி வேற்றூர்க்கு ஓடவில்லை. வறுமை தீரும் வரையில் அது தீர்க்கும் வீரராய் அவ் வூரிலேயே தங்கியிருந்தனர். பிறர் துயர் தீர்க்கும் ஆற்றலே, அருளே, சமயப் பண்பு!

**இருமைக்கும் துணை:**

இச் சமயப் பண்புகள், உடனுக்குடன் உதவுவன என்பதையும் கவனித்துக் கொள்ளவேண்டும். சமய ஒழுக்கம் மறுமைக்குத்தான் பயன் செய்வது என்னும் கருத்துச் சரியான கணிப்பாகாது. 'அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் அய்யுறவு இல்லைதான், ஆனால், இம்மையே தரும் சோறும் கூறையும், ஏத்தல் ஆம், இடர் கெடலும் ஆம்' என்பதை முதலில் முதன்மையாய்க் கவனித்துத்தான் கூறியிருக்கிறார் சுந்தரர்! செடியின் நோக்கம், முடிவாகப் பழம் பயப்பதே யாயினும், அதற்கு முன்பிருந்தே அது வேரும் தண்டும் கொழுந்தும் பூவும் பிஞ்சும் காயும் அவ்வப்போதும் உதவி வந்ததை யார் மறக்கமுடியும்!

மற்றவையெல்லாம் இம்மைக்கு மட்டும் அப்படிப் பயன்தரும் என்றால், சமயம் இருமைக்கும் பயன்தரும் நிறைவுடையது என்பதே இங்கே கருதத்தக்கது. எதைப் பயன்படுத்தினாலும் சரியாகப் பயன்படுத்தினால் நலம் உண்டாகும்; சமய ஒழுக்கம் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டாற் காலந்தோறும் தானே தக்க பயன் விளைத்தல் உறுதி.

**இயற்கைப் பாடம்:**

இயற்கைதான் நமக்கு எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுக்கிறது; சமய பாடத்தையும் நமக்கு அதுதான் கற்றுக் கொடுத்திருக்கிறது. ஓர் இயற்கைப் பொருளை எடுத்துக் கொள்வோம்; ஒரு வாழை மரம். இது உயிரோடு கூடியது. அதனால் இதை எண்ணிப் பார்க்கலாம். இந்த மரம், நமக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்கிறது. வாழை மரம் என்பது ஒரு பொருள். பொருளாக எதையும் பார்ப்பதைத்தான் 'பொருட் பால்' என்றார் திரு

வள்ளுவர். பசுமை நிறத்துடன் பெரிய இலைகளை விரித்து மிக அழகாக நீல மயில்போல விளங்குகிறது வாழை. ஒரு பொருளென்று இருந்தால் இப்படி ஓர் அழகும் வேண்டும்போல் இருக்கிறது. இந்தக் கவர்ச்சியைத்தான், 'கலைப் பால்' அல்லது 'இன்பப் பால்' என்று எடுத்துக் கொண்டார் பொய்யா மொழியார்.

மேலும் அந்த வாழையின் வளர்ச்சியை அதாவது, நடத்தையை நோக்கினால் எல்லாம் ஓர் ஒழுங்குமுறையில் காணப்படுகின்றது. பட்டைகளெல்லாம் அடுக்கடுக்காய் , இலைகளெல்லாம் முறை முறையாய், காய்களெல்லாம் வரிசை வரிசையாய் முறையோடு அமைந்திருக்கின்றன: ஏதோ ஓர் அறமுறையோடு நடந்து வருவதுபோல் தெரிகிறது: இந்தத் திறத்தைத் தான் 'அறத்துப்பால்' என்றார், தெய்வப் புலவர்.

மற்றும் ஓர் உயர்ந்த மறை பொருளும் வாழையின் பண்பிலிருந்து நமக்கு வெளிப்படுகிறது. ஆனால் அது குறிப்பாய்த் தெரிகிறது; முன்னே கூறிய பொருளும் இன்பமும் அறமும் காட்டும் மரபும், அதன் அழகும் அதன் ஒழுங்கும்போலப் புலன்களாற் கண்டுகொள்ளும்படி வெளிப்படையாகத் தெரியவில்லை. பொருட்பகுதியும், கலைக்கூறும், ஒழுங்குத் திறனுமாய் வாழை வளர்ந்து வாழ்ந்ததையெல்லாம் ஊன்றிக் கவனித்தால், முடிவில், குலையையும் மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்ள ஈன்றுவிட்டுத் தான் மறைந்துவிடுதலை அறியலாம். உள்ள காலமெல்லாம் உலகுக்குப் பட்டையும் இலையும் நாரும் பிறவும் உதவிக்கொண்டே வந்து, குலையும் காயும் கனியும் என்னும் பெரும் பயனும் ஈந்து, தண்டும் வேருமாகத் தன்னையே கூடப் பிறர்க்குத் தந்துவிடும் அதன் பண்பை என்னவென்பது!

**வாழை வாழ்கிறது:**

பிறர்க்கென வாழும் இல்லறத்தான்போல், விருந்தோம்பலாய் வாழ்ந்து முடிந்ததன் குறிக்கோளும் பிறர்க்குதவுதலே என்று பற்றற்ற துறவறமுங் காத்து, தன் கன்றுக்கென்றுகூடத் தன்னில் எதையும், தன் குலையையும் வைக்காத விடுதலை வீரம் சிறந்து, பிறர்க்கெனவே முற்றும் வாழும் உரிமைப் பெருமையில் வாழை எவ்வளவு ஓங்கி விட்டது! வாழையின் குலை வாழைக்கு ஏதும் பயன்படுவதில்லை: குலை ஈனும் வரையிலேயே வாழை வாழ்கிறது; அப்படியானால், வாழையின் வாழ்க்கைக் குறிக்கோளெல்லாம் பிறர்க்குக் குலை உதவவேண்டும் என்பதே என்று தெரிகிறது. பிறர்க்கென வாழ்தலே, தன் பற்று இன்றி வாழ்தலே, வாழ்வு என்று வாழை நிறுவுகிறது. வாழ் என்னும் முதல்நிலையால் வாழை என்று அது பெயர் பெற்றதுபோல, ஆறறிவிற் சிறந்த மக்களும் பெயர் பெறவில்லையே! வாழ்வது வாழைதான் போலும்.

இத்தகைய பற்றற்ற வீர விடுதலை வாழ்க்கையைத்தான் 'விட்டுப் பால்' என்று சிறப்பித்தார் திருக்குறட் குரவர். முப்பாலில் நாற்பாலும் விளக்கும் திருக்குறளைப்போல, ஒரு திருக்குறள் மறையாகவன்றோ வாழை விளங்குகிறது.

Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

**நான்மறைப் பொருள்:**

இங்ஙனம் ,பொருளும் இன்பமும் அறமும் வீடும் என்னும் நாற்கூற்று நுண்மைகளை ஒவ்வோர் இயற்கைப் பொருளிலும் காணலாம்; ஒவ்வொன்றில் ஒவ்வோர் அளவாவது இந் நான்கும் காணலாம். இவ்வுண்மைகள், இவற்றிலும் வீடு பேற்றுண்மை, இயற்கையில் வெளிப்படையாகத் தெரிவதில்லை; மறை பொருளாக உள்ளன. எல்லாம் இயற்கைப் பாடந்தாம்! நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமாய் அமைந்து எல்லாவற்றிலும் இயங்கிவரும் இவ்வுண்மைகளே நம் முன்னோரால் ஆழ்ந்து கவனித்துக் கண்டுபிடிக்கப்பட்டு நான்மறைகள் எனப்பட்டன. மற்றபடி நான்மறைகள் என்பவை நான்கு தனி நூல்கள் அல்ல. நூல்களால் விளக்கப்படும்போது, வாழ்க்கை நடத்தைகள் பொருளும் இன்பமும் அறமுமாக முப்பாலாய் அமைய, வீடு என்பது, வாழ்க்கையின் குறிக்கோளாய் நிற்றலின் ,வாழுங்காலத்தில் அது குறிப்பாகவே அடங்கிக் கிடக்கின்றது; வாழ்வாங்கு வாழ்வார்க்கு வெளிப்படும் வாழ்க்கை இங்ஙனம் நாற்பகுதிக்குரியதாயினும், அவற்றில் முதல் மூன்று பகுதிகளே வெளிப்படைக் குரியன. அதனாலேதான், தமிழ்மறை முப்பாலாய் நின்று நாற்பால் விளக்கும் முப்பால் அல்லது முத்தமிழ் நான்மறையாய்த் திகழ்கின்றது.

நூல் அல்லது இலக்கியம் என்பதில் இம் முப்பால்தான் முதற் சமய இலக்கியம், அதாவது, வாழ்க்கை யிலக்கியம்; இது உலகப்பொது வேத இலக்கிய மாகவும், பழமை பெருமைகளுடன் சிறந்துள்ளது.

**நிறை வாழ்வு:**

நிறைவான பெருவாழ்வு, இதனாற் சமய வாழ்வு எனத் தெளிந்து கொள்ளப்படும். மற்ற பொருள் வாழ்வோ, கலை வாழ்வோ, அற வாழ்வோ அல்லது இம்மூன்று வாழ்வுமேகூட நிறைவாழ்வாகாது என்பதும் துணிந்து கொள்ளப்படும். பிறர்க்கெனவே வாழும் பற்று விடுதலையான வீர வீட்டு வாழ்வும், வாழ்க்கையில் மணங் கமழும்போதுதான் அது நிறைவாழ்வாகும். அதாவது, சான்றாண்மை யாகும்.

'சீவன் முத்தி' என்று பிற்காலப் பெரியோர் சொல்வது, இச் சான்றாண்மையைத் தான். வாழ்வின் நோக்கம் என்பது இவ் வீடுபேற்று நிலையாகிய நிறைவாழ்வே என்று தெளிவிப்பதற்காகத்தான் ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன்எனக் கேட்டதாய்'' என்று திருக்குறளிலும் இது வந்தது.

## உயர்ந்த இலக்கியம்:

'இலக்கியம்' என்னும் சொல்லுக்குக்'குறிக்கோள் வாழ்க்கையின் வடிப்பு'என்பதுபொருள். நிறை வாழ்வின் இயல்பாகிய வீடுபேற்றைக் குறிக்கோளாகக் கொள்ளாத புல்லிய பொருளின்ப வாழ்க்கையின் வடிப்புக்கள், எவ்வளவு தான் சிறப்பாக அமைந்தாலும் அவையெல்லாம் எப்படி தலைசிறந்த இலக்கியங்களாகும் என்பதை அன்பர்கள் கருதிப்பார்ப்பது முக்கியம். சமய ஒழுக்கங்களின் வடிப்பாகிய சமய இலக்கியமே, இலக்கியங்களுள் உயர்ந்த தலைமைப்பாடுடையது என்று கருத்திற் பதித்துக் கொள்ள வேண்டும்.

'சமயத் துறையிற் பெருகத் திரும்பி விட்டோம், இலக்கிய இலக்கணத் துறையிலிருந்து திரும்பிவிட்டோம், வாழ்க்கை சிறப்பற்றதாகிவிட்டது' என்று எமக்காக இரக்கங் கொண்ட, எமது நலங்கருதிய அன்பர்கள் உண்டு. இந்த நேரத்தில் அது நினைப்புக்கு வருகிறது. இந்த இடத்திலேயே அன்பர்களுக்கு மற்றொரு கருத்தையும் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

## இருவகை இலக்கியம்:

குறிக்கோள் வாழ்க்கையைப் பின்பற்றுவதிலும் இரண்டுவகை உண்டு; ஒன்று, தன் குறிக்கோளை நிறைவேற்றுதல்; மற்றொன்று, தலைவன் குறிக்கோளை நிறைவேற்றுதல்.வீடுபேறெயாயினும் அதனைத் தான் அடைதல் என்பதில் தன்னலமும் தற்குறிப்பும் தன்முனைப்பும் தலையெடுக்கும். தலைவன், குறிக்கோள் நிறைவேற உழைப்பதிலேதான் முற்றிலும் பற்றுவிட்ட சரியான வீடுபேறு உள்ளது.''யான் கண்டனையர் என் இளையரும்'' என்னும் சங்ககால வாழ்க்கைத் திறனும், ''என் கடன் பணி செய்துகிடப்பதே'' என்னும் பிற்காலக் கடமை வாழ்வும், இவ்வூற்றம் அமைந்தவை.

'இலக்கியம்' என்னும் குறிக்கோள் வாழ்க்கை நூல்களில், தன் குறிக்கோள் நிறைவேற்றும் வாழ்க்கையே வெளிப்படையாய் வீறித் தெரிவனவே பெரும்பாலானவை.அவையே இப்போது எண்சுவை இலக்கியங்களாய் விளங்குகின்றன. தலைவன் குறிக்கோளன்றித் தன் குறிக்கோள் அற்ற பெருவாழ்வின் வடிப்பு 'மறை இலக்கியம்' என்று தனியே கொள்ளப் பட்டது. இதனில் எண்வகைச் சுவையோடு சமநிலைச் சுவை என்னும் மற்றொரு நற்சுவையும் சித்தித்திருக்கும். இலக்கியங்களுக்கும் மறைகளுக்கும் இது வேறுபாடு. திருக்குறள் அதனாலேதான் 'மறை' எனப்பட்டது.

## சங்கச் சான்றோர்:

சங்க இலக்கியங்களையும் இலக்கணங்களையும் இயற்றியவரைச் சங்கச் சான்றோர் என்று போற்றும் வழக்கிருக்கிறது; இவர் பலரும் நிறைவாழ்வு பெற்றவரே. பிசிராந்தையார் வாழ்க்கையும், அவர் தொடர்புடையார் வாழ்க்கையுமே இதற்குச் சான்று; அவர் பலரும் பொய்யா வாழ்க்கையர் மெய்யுணர்வினர். அக்காலத்தில் வாழ்க்கை வேறு, சமயவாழ்க்கை வேறு என்னும் வேற்றுமை இல்லை. சமய ஒழுக்கம் வாழ்க்கை வடிவில் மிகச் சிறப்பாகப் பற்றின்றிப் பிறர்க்கென வாழ்தலாகவே அமைந்திருந்தது. அதுதான் சரியான நாகரிக காலம்!

இல்லாவிட்டால், ''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'', ''தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு'', ''அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'', ''உண்டாலம்ம இவ்வுலகம்.. பிறர்க்கென வாழ்நர் உண்மையானே'', ''இன்னா தம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே''. ''பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே''என்றெல்லாம் வாக்குக்கள் எழுமா?

வாழ்க்கையில் பொய்ம்மைகள் கலந்த பின்புதான் பெருகிய சடங்கு நிகழ்ச்சிகள், கடவுள் உண்மைகள், இயல்புகள், உதவிகள், குருமார்நிலையங்கள், உருவ அருவ அருவுருவ வழிபாட்டு முறைகள் ,புறப்புறம் புறம், அகப்புறம் அகம் என்னும் பிரிவொழுக்கங்கள், அவ்வற்றிற்குரிய சாத்திரங்கள், தோத்திரங்கள், வழிபாட்டிடங்கள் சமயப் பிரிவுகள் புராணங்கள் மரபுகள், வடமொழி, தென்மொழிப் பிரிவுகள் முதலிய பலப்பலவற்றின் விளக்கங்கள், மக்கள் வாழ்க்கையை நன்முறையில் அமைப்பதற்குத் தேவைப்பட்டன. இவையெல்லாம் ஓரளவு நாகரிகச் சரிவையே காட்டிவிடும்; மன்பதைத் திருத்தமாகவே இவையெல்லாம் அமையும்.

## அமைதிக்கு வழி:

பண்டைக் காலத்தில் 'சமூகம்' குடிமை எனப்பட்டது. அதன் குறிக்கோள் சான்றாண்மையாகவும் அமைந்தது. நிறைவு வாழ்வில் கருத்தற்றுப்போன கிளர்ச்சிகளாலேதாம் சமயப் பிரிவு, மொழிப்பிரிவு, மக்கள் பிரிவு, ஆட்சிப் பிரிவுகளெல்லாம் நேர்ந்தது. உலகம் சீர் குலைந்தது; மீண்டும் நிறைவாழ்வாகிய சான்றாண்மையை எய்தினால்மட்டுந்தான் உலக அமைதிக்கு, மெய்யின்ப வாழ்க்கைக்கு வாய்ப்புண்டு என்பது இவற்றாலெல்லாம் இனிது விளங்கும்.

கர்நாடக சங்கீதத்தின்

# ஆதி மும்மூர்த்திகள்

''இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞர்''

திரு. மு. அருணாசலம் அவர்கள்

Dy. Commissioner (Retired) HR&CE. Administration Dept

(முற்றொடர்ச்சி)

## முன்னுரை :

இங்கு நாம் பேசப் போவது தியாகராச சுவாமிகள் முதலியோருக்குக் காலத்தால் முன்னே வாழ்ந்த மூன்று இசைவாணர் வரலாற்றை. இம்மூவரும் தமிழிலே பல கீர்த்தனம் செய்தார்கள். அவற்றுட் சில இன்றும் பாடப்பெற்று வருகின்றன. அவ்விசை வாணருள் ஒருவர், பரம்பரை மேளக்காரராகிய இசைவேளாளர் மரபிலேயே பிறந்தவர்; மற்ற இருவரும் கார்காத்த வேளாள மரபினர். கொள்ளிட நதிக்குத் தென்கரையிலும் வடகரையிலும் சற்றுத் தூரத்திலுள்ள சீகாழி சிதம்பரம்ஆகிய எல்லைக்குள் இவர்கள் வாழ்ந்தார்கள். சிதம்பரமானது உலகெங்குமுள்ள சைவ மக்களுக்கு நடராசத் தலமாகிய கோயில் என்னும் பெருஞ் சிறப்புடையது. மற்றச் சீகாழியோ ஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த தலம். இதன் அருகில் திருமங்கை மன்னன் ஆட்சிபுரிந்த திருவாலித் திருநகரி உள்ளது. இடைக்காலத்தில் சீகாழியில் சிற்றம்பல நாடிகள் போன்ற பெரியோர் தோன்றிச் சீகாழியை ஒரு ஞான இராசதானியாக்கினார்கள். முத்துத் தாண்டவர் பிறந்த காலம் கி.பி. 1600க்குச் சற்று முன்னதாக இருக்கும். மாரிமுத்தாப் பிள்ளை வாழ்ந்த காலம் 1712-1787. அருணாசலக் கவிராயர் வாழ்ந்த காலம் 1711-1778. பிந்திய இருவரும் இசைவாணராயிருந்த தோடன்றிச் சிறந்த இலக்கிய கர்த்தாக்கள். பல இலக்கியங்கள் செய்த பெருமை இவர்களுக்கு உரியது. இங்கு நாம் இவர்களுடைய இலக்கியத் திறனைக் காணப்போவதில்லை. இவர்களுடைய இசைப் பாடல்களையும் அவற்றுள் காணும் இசைத் திறனையுமே பார்க்கப் போகிறோம். இவற்றைப் பார்ப்பதன் நோக்கம் இவர்களால் இசைத்தமிழ் எவ்வளவு வளம் பெற்றது என்று காண்பதாகும். தமிழ் மக்கள் இந்த மூவரும் இசைத் தமிழுக்கு ஆற்றியுள்ள பெருந் தொண்டைத் தெளிவாக உணரவில்லை. அதை எடுத்துக் காட்டுவதே இவ்வாராய்ச்சியின் முதல் நோக்கம்.

ஒன்று நினைவில் கொள்ள வேண்டும். இவர்கள் சிறந்த தமிழ்ச் சாகித்தியங்கள்செய்த சாகித்திய கர்த்தாக்கள் என்றால், இவர்களுக்கு முன் என்னென்ன வகையில் இசைத்தமிழ் விரிவாக வளர்ந்தது என்பதை இக்கட்டுரையின் முதற் பகுதியில் தெளிவாகக் காட்டியிருக்கிறோம். முத்துத் தாண்டவர் காலத்துக்கும் மற்ற இருவர் காலத்துக்கும் இடையில் இசை வளர்ச்சியைப் பெரிதும் காண்கிறோம். குற்றாலக் குறவஞ்சிசெய்த திரிகூடராசப்பக் கவிராயர் (காலம் கி.பி.1720 ஒட்டி) தம் குறவஞ்சியில் இசைப் பாடல்களை நிரம்ப அமைத்திருக்கிறார். இதற்குமுன் தோன்றிய மீனாட்சியம்மை குறம் என்ற நூலிலும் இசையுறுப்புக்கள் நிரம்பப் பயில்கின்றன. கீர்த்தனையாகவே வென்றிமாலைக் கவிராசர் பாடிய மத்திய மாவதிக் கீர்த்தனமும் 1654ல் எழுந்தது. இங்ஙனமாக இவ்விடைக்காலத்தில் பலர் இசைத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இங்குக் குறிப்பிடவில்லை.

நாம் இங்குக் குறிப்பிடும் மூன்று இசை வாணரும், சிறந்த இசை நூல் செய்தார்கள். அந்த நூல்களும் பாடல்களும் விரிவாகப் பாமர மக்களிடையே கூடப் பிரசாரம் எய்தியிருந்தன. இன்றும் எய்தியிருக்கின்றன. மூவர் பாடிய இசைத் தமிழும் கர்நாடக சங்கீதமே. தேவார மூவர் போல இவர்களும் மூவர். கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகள் என்று பல்லோரும் இன்று போற்றுகின்ற தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவருக்கும் இவர்கள் காலத்தால் பெரிதும் முற்பட்டவர்கள். தியாகையர் முதலியோருக்கு முத்துத்தாண்டவர் சுமார் 200 ஆண்டுக் காலம் முற்பட்டவர். தியாகையரும் சாஸ்திரிகளும், தீட்சிதரும் பிறந்த காலத்தில் மாரிமுத்தாப்பிள்ளையும் கவிராயரும் 60 வயதுக்கு மேல் முதிர்ந்தவர்கள். எனவே தியாகையர், சாஸ்திரிகள், தீட்சிதர் மூவரையும் கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் என்றால், முத்துத் தாண் தாண்டவரையும், மாரிமுத்தாப்பிள்ளையையும், அருணாசலக் கவிவராயரையும் கர்நாட்க சங்கீதத்தின் ஆதிமும்மூர்த்திகள் என்று சொல்வதில் பொருத்தக் குறைவு இராது.

## முத்துத்தாண்டவர் :

தமிழ் நாட்டில் இன்றைய கீர்த்தனம்-கிருதி மரபுக்குப் பிரபிதாமகர் என்று சொல்லத் தக்கவர் சீகாழி-முத்துத்தாண்டவர். சிதம்பரம் நடராசப்பெருமான் மீது அளவில்லாத கீர்த்தனங்களும் பதங்களும் பாடியவர். இவர் பாடல்களை இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம்வரை சங்கீத வித்வான்கள்

தங்கள் கச்சேரிகளில் நிரம்பப் பாடிவந்தார்கள். அக்காலத்தில் இவருடைய பதங்கள் அபிநயத்துக்கு மிகவும் சிறப்புடையனவாகக் கருதப் பட்டன. அக்காலம் நாட்டியக் கச்சேரிகள் யாவும் இசைவேளாளர் மரபாரிடமே இருந்தன. ஆனால் சமீப காலத்தில் நாட்டியமெல்லாம் ஒரு வியாபாரத் தொழிலாக, பணம் திரட்டும் கருவியாக மாறிவிட்ட பின்னர் இவருடைய பாடல்கள் அதிகம் இடம் பெறுவதில்லை. நகர வாழ்க்கைக்குரிய ஆடம்பரங்களில் நாட்டியமும் ஒன்று என மாறிவிட்ட பின்னர், இவருடைய பாவம் பொருந்தியபாடல்களுக்கு இடம் குறைந்து விட்டது. இருப்பினும் சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்னர் ஜயம்மாள் பாடப் பாலசரசுவதி அபிநயம் பிடிக்க, இவருடைய 'தெருவில் வாரானோ' (கமாஸ்) என்பது போன்ற பாடல்களிலும் அவற்றின் ஆடல்களிலும் ஈடுபட்டு நெஞ்சைப் பறிகொடுக்காதவர் அரியர்.

**வரலாறு :**

முத்துத் தாண்டவர் சோழநாட்டில் சீர்காழி என்ற சிவதலத்தில் பிறந்தார். இத்தலம் சைவ சமய ஆசாரியராகிய திருஞான சம்பந்தர் அவதாரம் செய்து அம்பிகையிடம் ஞானப் பாலுண்ட அற்புதம் பொருந்தியது. இங்கு, சுவாமி பெயர் திருத்தோணியப்பர். அம்பிகை திருநிலை நாயகி. யுகாந்த காலத்தில் பிரளயம் உண்டாகி அதில் உலகம் யாவையும் மூழ்கிய போது, சிவபெருமான் இங்கு ஒரு தோணியில் உயிர்களை ஏற்றி மிதக்கச் செய்து காத்தமையால் இத்தலம் தோணிபுரம் என்றும், சுவாமி தோணியப்பர் என்றும் பெயர் பெற்றதாக ஐதிகம். இத்தலத்தில் சுவாமி திருமுன் நாகசுரம் வாசித்தலாகிய வாச்சியத் தொண்டு செய்யும் (இன்று இசைவேளாளர் என்று சொல்லுகின்ற) குலத்தில், முத்துத்தாண்டவர் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்டபெயர் தாண்டவன் என்பது. இளமையில் இவர் தமிழ்க் கல்வி மட்டும் கற்று வந்தபோது கொடிய கன்ம வியாதியொன்று இவரைப் பீடித்தது. அதன் கொடுமையால் இவர் குலத்தொழிலாகிய நாகசுரம் வாசிக்கும் பயிற்சி பெற இயலாது போயிற்று. இருப்பினும், பரம்பரையாக வந்த சிவபக்தி முதிர்வால் இவர் நாள்தோறும் கோயிலுக்குச் சென்று, பிரமபுரமாகிய இத்தலத்துக்குரிய பிரமபுரீசரையும், திருநிலை நாயகியையும், திருத்தோணிப்பரையும் மிக்கபக்தியோடு வழிபட்டு வந்தார். வழிபாட்டுக் காலம் தவிர மற்றை நேரங்களில் இவர் அந்நகரிலுள்ள ஓர் உருத்திர கணிகையின் வீட்டுக்குப்போய் அவளுடைய சிவநாம சங்கீர்த்தனத்திலும், ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு, சிவசிந்தையுடையவராகவே இருந்து வந்தார். இவர் அவள் வீட்டிற்குச் சென்று ஆடலிலும் பாடலிலும் பொழுதைப் போக்குவதைக் குடும்பத்தார் கண்டித்தார்கள். இவர் கேட்கவில்லை. அதனால் குடும்பத்தில் மனக்கசப்பு. அவர்கள் இவரை வெறுத்து ஒதுக்கினார்கள். இவரும் முறைப்படி வீடு செல்வதும் உணவு கொள்வதும் இல்லாமல் இருந்தார். பலநாள் கோயிலுக்குச் செல்வதும் நெடுநேரம் அங்கேயே தங்கி விடுவதுமாக இருந்தார்.

இப்படி ஒரு சமயம் மாலை நேரத்தில் சென்று கோயிலின் எல்லாச் சந்நிதிகளையும் தரிசித்து வந்தபோது, இவருக்குப் பசி மிகுதி. அதனால் சோர்வு. அதனால் மிக்க தளர்ச்சியோடு, வாகனங்களை வைத்திருக்குமிடம் சற்றே ஒதுக்குப் புறமானதால், அங்குச்சென்று சிறிது நேரம் படுத்தார். படுத்தவர் நன்கு உறங்கிவிட்டார். நேரம் ஆயிற்று. கோயில் சந்நிதிகளெல்லாம் திருக்காப்பிடும் சமயம் வந்தது. இவர் இங்கிருந்தது ஒருவருக்கும் தெரியாது. அர்ச்சகரும் காவல்காரரும் கதவுகளையெல்லாம் சாத்திப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

கொஞ்ச நேரமானபின் தாண்டவர் விழித்தார். எங்கும் இருண்டிருந்தது. வாகன அறை சும்மா சாத்தியிருந்தது. இவர் வெளியே வந்து பார்த்தால், எல்லாம் பூட்டப்பட்டிருந்தது. கோயிலை விட்டு வெளிப்பட்டுத் தம் வீட்டுக்குப் போக வழியில்லை. மனம் வருந்தித் தோணியப்பர் சந்நிதியை அடைந்தார். அங்கு நின்று பெருமானைத் தம் உள்ளம் உருகத் தியானித்தும் தம் நிலையை குறிப்பிட்டுத் துதித்தார். இசை வேளாளர் மரபு ஆதலினால் தமக்கு இயல்பாய்த் தெரிந்திருந்த தேவாரப் பாசுரங்களையெல்லாம் பாடித் துதித்தார்.

**அம்பிகை தரிசனம் ;**

அப்போது இவருடைய பூர்வ புண்ணிய வசத்தாலும், தமிழ்நாடு செய்த தவத்தாலும், ஒரு பேரற்புதம் நிகழ்ந்தது. சிவபெருமான் திருவுள்ளக் குறிப்பின்படி, உமாதேவியார் இவருடைய பசியையும் பிணியையும் ஒருங்கே போக்கத் திருவுள்ளங் கொண்டார். கோயில் பூசை செய்யும் பெரிய குருக்களுடைய பத்து வயதுப் பெண் குழந்தை போல் வடிவெடுத்து, அவர்முன் தோன்றினார். கோயிலுக்குள் குருக்களின் மகள் வந்தது இவருக்கு இயல்பாக இருந்ததேயன்றி, இவர் மனத்தில் எந்தச் சிந்தனையும் எழவில்லை.

பெண் குழந்தையான உமா தேவியார் கேட்டார்: அப்பா! நீ ஏன் இப்படி பெரிதும் வருந்துகின்றாய்?

இவர் சொன்னார்: ''தாயே! நான் என்னவென்று சொல்வேன்? முற்பிறவியில் செய்த பாவத்தால் பெரிதும் துன்பப் படுகிறேன். என்னுடைய கன்ம வியாதி என்னைப் பெரிதும் வாட்டுகின்றது. அதுவன்றியும் எப்போதும் வறுமை. இப்போது மிக்க பசி. நான் எதைச் சொல்லி உனக்கு உணர்த்துவேன்''? என்றார். பெண் குழந்தைகளைத் தாயே என்று விளித்துப் பேசுவது இன்றும்கூடப் பெரு வழக்கு.

''அப்பனே! நீ இப்போது மிகுந்த பசியோடிருப்பதால் சிறிது அன்னங்கொடுக்கிறேன். இதை உண்டு உன் பசி தணிவாயாக'' என்று சொல்லி உமாதேவியார் ஒரு கிண்ணத்தில் பிரசாத அன்னங் கொடுத்தார்.

தாண்டவர் அதை வாங்கியுண்டு பசிதீர்ந்தவராய், மிகுந்த நன்றி கலந்த மகிழ்ச்சியுடன்

அப்பெண்ணைப் பார்த்துச் சொல்லுவார்: ''தாயே, இந்தப் பசிப்பிணி இப்போது நீ நீக்கியது போல, என் உடற்பிணி நீக்கவும் ஏதேனும் சொல்வாய்'' என்று வேண்டினார். கேட்ட உமாதேவியார்'' அப்பா, உன் பெயர் தாண்டவனல்லவா? அதற்குப் பொருத்தமாக, தில்லையில் தாண்டவமாடும் சபாநாதரைத்தரிசித்து அவர் மீது பாட்டுப் பாடினால் இந்த நோய் நீங்கிக் குணமடைவாய். இப்போது புறப்பட்டுச் சிதம்பரம் செல்'' என்றார்.

''தாயே, நான் அதிகம் கற்றவன் அல்லேன். எனக்குப் பாடத் தெரியாதே? நான் எவ்வாறு பாடுவேன்?'' என்று இவர் கண்ணீர் விட்டார்.

மீண்டும் அம்மையார், ''அது பற்றி நீ வருந்தாதே. சிதம்பரம் செல். கனகசபையில் நின்று நீ தரிசிக்கும்போது, அங்கு தரிசிக்கும் திருக்கூட்டத்தாரிடையில் என்ன சொல் பிறக்கிறதோ அச்சொல்லை வைத்தே பாடத் தொடங்கு. சபாநாதர் கிருபையால் உனக்குப் பாட வரும்'' என்றார்.

இச் சொற்களைச் சொன்னவுடனே சிறுமியாக வந்திருந்த உமாதேவியார் ஒரு சோதியாக மறைந்து விட்டார். பார்த்துக்கொண்டேயிருந்த தாண்டவர் மிக்க வியப்பும் துக்கமும் ஒருங்கே அடைந்தார். ''என் கண்முன்னே வந்து இவ்வளவு நேரம் உரையாடிய என் தாயை நான் குருக்கள் குமாரி என்றே எண்ணிவிட்டேனே! வந்தவர் லோக மாதாவாகிய உமாதேவி என்று என் அஞ்ஞானத்தினால் அறிந்து கொள்ள முடியாத பாவியானேனே! கதவுகளெல்லாம் பூட்டியபடி இருக்க இங்குச் சிறு பெண் எப்படி வரமுடியும்? இதை நான் சிந்திக்கவில்லையே'' என்றெல்லாம் சிறிது நேரம் பலவாறாகப் பிரலாபித்தார். பின்னர், ''என் பசிப்பிணி போக்கிய உமாதேவியார் நினைத்தால் ஒரு கணத்தில் என் உடற்பிணியையும் நீக்கியிருக்கலாமே! ஏன் என்னைச் சிதம்பரம் போகும்படி கட்டளை இடவேண்டும்? ஆயினும் இறைவியின் திருவுள்ளத்தை யார் அறிய முடியும்? எனவே, நான் அம்மையார் கட்டளைப்படி நடப்பேன்'' என்று துணிவு கொண்டு அதன் பின்னர் உறக்கம் கொள்ளாமல் அம்பிகை சந்நிதிக்கு வந்து அங்கேயே தோத்திரம் செய்தபடி நின்று கொண்டிருந்தார்.

நேரம் ஆயிற்று, பொழுது புலர்ந்தது. கோயில் காவலர், அர்ச்சகர் முதலியோர் முறைப்படி திருக்காப்பு நீக்கி உள்ளே வந்தார்கள். அம்பிகை சந்நிதியை அடைந்தபோது அங்கே இவர் கையில் பொற்கிண்ணத்தோடு நின்றிருப்பதைக் கண்டார்கள். கண்டபோது அவர்கள் உள்ளத்தில் சந்தேகம் எதுவும் எழவில்லை. ஏதோ தெய்வச்செயல் நிகழ்ந்திருக்கிறது என்பது மட்டும் தெரிந்து கொண்டார்கள். அவரைச் சமீபத்தில் அழைத்து ''அப்பா, உன்னை எங்கும் தேடிச் கொண்டிருக்கிறார்களே! நீ எப்படி இங்கு வந்தாய்?'' என்று வினவினர்கள். அவர் மிக்க பணிவோடு தாம் கோயிலுக்கு வந்ததையும், உறங்கியதையும், கோயில் திருக்காப்புச் செய்ததையும் பசியால் வருந்தியபோது இறைவியார் தமக்குக் குருக்கள் புதல்வி வடிவத்தில் வந்து அன்னமளித்ததையும், பசி நீங்கிக் கோயில் திறக்கும் நேரத்தைத் தாம் எதிர் நோக்கி யிருந்ததையும் விளக்கமாகக் கூறினார். கேட்டவர்கள் பெரிதும் அதிசயித்தார்கள் என்பது சொல்ல வேண்டியதில்லை. அவர் கையில் இருந்த பொற் கிண்ணம் அவர் கூறிய செய்தி உண்மை என்று நம்பக் காரணமாயிற்று. அன்றியும், அவர் முகத்தில் முன்னில்லாத ஓர் அழகிய ஒளி முத்துப்போல விளங்கியதையும் அவர்கள் கண்டார்கள்.

''அப்பா, நீ இறைவியைத் தரிசித்து அவருடைய அருளைப் பெற்றவன். உன்னை இனி நாங்கள் வெறும் தாண்டவன் என்று சொல்லாமல் முத்துத் தாண்டவன் என்றே இனி அழைப்போம்'' என்று சொல்லி அவ்வாறே அழைக்கத் தொடங்கினார்கள்.

Dy Commissioner (Retired)
HR&CE Administration Dept

**சிதம்பர தரிசனம்:**

அப்பால், முத்துத் தாண்டவர் தம் இல்லம் அடைந்து, நிகழ்ந்தவற்றை வீட்டிலுள்ளளாரிடம் சொல்லிவிட்டுத் தில்லையை நோக்கிப் புறப்பட்டார். தில்லை அங்கிருந்து 12 மைல் தூரம். இடையில் மிகவும் அகலமான கொள்ளிடநதி. நடந்தே செல்ல வேண்டிய காலம். மெல்ல நடந்து கொள்ளிடத்தையும் கடந்து, பண்டைக்காலத்து நந்தனாரைப் போல, தில்லைப் பதியின் எல்லையை அடைந்தார். அங்கேயே சாஷ்டங்கமாகப் பணிந்தெழுந்து பின் நகரினுள் நுழைந்தார். கோபுரங்களைக் கண்டவுடனே மீண்டும் பணிந்தெழுந்து நான்கு வீதிகளையும் வலம் வந்தார். தில்லை மூவாயிரவர் வாசம் செய்யும் இல்லங்களையெல்லாம் பார்த்து வணங்கிக் கொண்டே சென்று சிவகங்கையை அடைந்து அதில்முறைப்படி நீராடி, திருநீறணிந்து நித்தியானுட்டானங்களை முடித்துக் கொண்டு ஈர உடையோடு உட்சென்று, நடராசப்பெருமான் சந்நிதியில் கனகசபையின் முன் நின்று அட்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்தெழுந்து துதி செய்தார். பக்தி மிகுதியால் மனமுருகிப் புளகாங்கிதம் அடைந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, தேவார திருவாசகங்களை அறிந்தவராதலினாலே அவற்றை மனத்தால் சொல்லிக் கொண்டு, தலைக்குமேல் கூப்பிய கையினராய், பரவசப்பட்டு நின்றார். அவருடைய மனம், 'கூட்டத்தில் யாரேனும் உச்சரிக்கும் ஒரு சொல்லைப் கொண்டு பாடத் தொடங்குவாயாக' என்று அம்பிகை தந்த உத்தரவை எண்ணிக் கொண்டேயிருந்தது.

அந்த நிலையில் நடராச மூர்த்தியின் திருவருளால் சந்நிதியில் வந்திருந்தவர்களுள் ஒருவர் 'பூலோக கைலாசகிரி சிதம்பரம்' என்ற ஒரு தொடரைச் சொன்னார். கேட்ட முத்துத் தாண்டவர் திருவருள் உந்த, அதை யேபல்லவியாக வைத்துக் கொண்டு பவப்பிரியா ராகத்தில் ஜெம்பை தாளத்தில் விரிவான தமது முதல் கீர்த்தனத்தைப் பாடித் துதித்தார். அவர் மேளக்காரர் மரபாயினமையால், இராக

மும் தாளமும் அவருக்கு இயல்பாகக் கைவந்திருந்தன. இந்தக் கீர்த்தனம் பல்லவியும், அநுபல்லவியும், மூன்று நீண்ட சரணங்களும் உடையது. தாண்டவருக்கு இயல்பாகச் சிறப்பான குரல் வளம் அமைந்திருந்தது.

பல்லவி

பூலோக கயிலாச கிரி சிதம்பர மல்லால்
புவனத்தில் வேறுமுண்டோ (பூ)

அநுபல்லவி

சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
சபைவாணர் ஆனந்தத் தாண்டவம் புரிவ
தால் (பூ)

முத்துத் தாண்டவர் சிதம்பரத்துக்குப் புதியவரானமையால் சிதம்பரத்தைப் பற்றித் தாம் கேட்டிருந்தவற்றையும், இப்போது நேரில் கண்ட செய்திகளான கோபுரம், மதில், தூண்கள், ஆயிரக்கால் மண்டபம், சிவகங்கை, பேரம்பலம், கொடிநிலை, அம்பிகை கோயில், விமானங்கள், வீதிகள், சத்திரங்கள் முதலிய சிறப்புக்களையும் சரணங்களில் விரிவாகப் பாடுகிறார்.

இவ்வாறு நெடுநேரம் கண்டோர் அதிசயிக்கும் படியாகப் பாடிக்கொண்டே இவர் நின்றபோது, இவரது பக்திக்கும் பாடலுக்கும் சபாநாதர் மிகவும் திருவுளம் உவந்தருளினார். அக்கணமே இவரைப் பீடித்திருந்த கொடு நோய் நீங்கிவிட்டது. அன்றியும் பெருமான், திருக்களிற்றுப்படி என்னும் பஞ்சாட்சரப் படியின்மேல் ஐந்து பொன் தோன்றச் செய்து, தினந்தோறும் அதை வந்து பெற்றுக்கொள்ளும்படி முத்துத் தாண்டவருக்குக் கட்டளையிட்டருளினார். தமக்கு நேரிட்டிருந்த கொடிய உடற்பிணி தீரும்படி கடாட்சித்தருளிய ஆனந்த நடராச மூர்த்தியின் திருவருளை எண்ணி யெண்ணி இவர் விம்மிதம் அடைந்து பின் படியிலிருந்த பொன்னையும் எடுத்துக் கொண்டு மீண்டும் பலமுறை அட்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்து தோத்திரம் செய்து சீகாழிக்கு மீண்டார்.

இவ்வரலாற்றிலுள்ள ஒரு நயம் உணரத் தக்கது. கோயிலில் வாத்தியம் வாசிக்கின்ற மேளக்காரருக்குப் பொருட்கவலையே இராதபடி சோழமன்னர் பண்டைக் காலத்தில் எல்லா மானியங்களையும் வழங்கி இருந்தனர். அவர்களுக்கு நெடுங்காலம் பின்னர் அதே பரம்பரையில் வந்து நடராசப் பெருமானைப் பாட முற்பட்ட முத்துத் தாண்டவருக்குப் பெருமானே பொற்காசு வழங்கிய செய்தி அறிந்து மகிழற்பாலது.

மறுநாளும் முத்துத் தாண்டவர் சீகாழியிலிருந்து சிதம்பரம் வந்து காலையில் தரிசித்துப் பணிந்தபோது கூடியிருந்தோரிடையே 'சேவிக்க வேண்டும்' என்றொரு குரல் எழுந்தது. அதையே தொடக்கமாக வைத்து இவர் ஒரு புதுக் கீர்த்தனம் பாடினார். (ஆபோகி, ஆதி தாளம்).

பல்லவி

சேவிக்க வேண்டுமையா-சிதம்பரம்
சேவிக்க வேண்டுமையா. (சே)

அநுபல்லவி

சேவிக்க வேண்டும் சிதம்பரமூர்த்தியாம்
தேவாதி தேவன் திருச்சந்நிதி கண்டு (சே)

சரணம்

காரானை மாமுகத்து ஐந்து கரத்தானை
கற்பக ராயனை முக்குறுணி யானைச்
சீரார் புலியூர்ப்பதி மேலை வாசல்வாழ்
தேவர் சிறைமீட்கும் சேவற்கொடி
யானை (சே)

பாடி முடித்துத் திருநீற்றுப் பிரசாதத்தையும் பொற்காசுப் பிரசாதத்தையும் பெற்றுக் கொண்டு, மாலையில் சீகாழி திரும்பி விட்டார். இந்தக் கீர்த்தனத்தில் நான்கு சரணங்களை அமைத்திருக்கிறார். அன்றியும் கற்பக விநாயகர், முக்குறுணி விநாயகர், புலியூர்ப்பதி, மேலை வாசலில் உள்ள சேவற்கொடியோன், சிவகங்கை, சிவகாமி அம்பிகை, திருமூலட்டானம் சிற்றம்பலம், பேரம்பலம், ஆனித் திருமஞ்சனம் மார்கழி தரிசனம் முதலான பல தலச் செய்திகளை இங்கே குறிப்பிடுகிறார். இவ்வாறு நாள்தோறும் வந்து இவர் தினம் ஒரு கீர்த்தனமாகப் பாடிய கீர்த்தனங்கள் பல நூறு ஆகும். ஒவ்வொன்றிலும் அரிய சமயச் செய்திகளையும் தலச் செய்திகளையும் புராணச் செய்திகளையும் தவறாமல் அமைத்துப் பாடியிருக்கிறார்.

பின் வரும் கீர்த்தனத்தில் 'தன்னை அறிவதுவே உண்மையான மெய்ஞ்ஞானம்' என்ற சிறப்பான சைவ சித்தாந்த அத்துவிதக் கருத்தை அழகாகச் சொல்கிறார். (ஆபோகி, ரூபக தாளம்).

பல்லவி

என்னை எனக்குத் தெரியச் சொல்வாய்-
தில்லைப்
பொன்னம்பலத் தரசே (என்னை)

அநுபல்லவி

தன்னை யறியும் அறிவதுநீ சற்றும்
தப்ப ஒண்ணுதிப்போ சாமி சமயம்
(என்னை)

சரணம்

பூதமும் நானல்ல பொறிபுலன் நானல்ல
ஓதும் அநாதி ஒருநான்கும் நானல்ல
போதக் கருவி புறம்பல்ல உள்ளல்ல
வாதமும் நானல்ல வென்று மயங்கும்
(என்னை)

இதுபோல மற்றச் சரணங்களும். இங்கு மனவாசகம் கடந்தார் சைவ சித்தாந்த சாத்திரங்

களுள் ஒன்றான உண்மை விளக்கத்துள் 'வேறாகா என்னை எனக்கறியக் காட்டீர்?' என்று கேட்கும் கருத்து பயின்று வருவது காணத் தக்கது. இவர் சாத்திரங்களை நன்கு ஓதியிருப்பார். அல்லது திருவருளால் அவற்றை இவர் நன்கு உணர்ந்திருக்கவும் கூடும்.

### ஆற்றுவெள்ளம் :

இவ்வாறு பலநாள் நிகழ்ந்து வருங்காலத்தில் ஒருநாள் சீகாழியில் இருந்து புறப்பட்டுத் தில்லையை நோக்கி நடந்து கொள்ளிடக் கரையை அடைந்தார். கொள்ளிடத்தில் பெரு வெள்ளம் பிரவாகமாக ஓடிக் கொண்டிருந்தது. பிரவாகம் இவர் இறங்கி அக்கரை வரமுடியாத படி தடுத்து விட்டது. அப்போது இவர் மிகவும் வருந்தி இரண்டு கீர்த்தனங்கள் பாடினார். முதலாவது 'காணாம லிருந் தாலென் கலக்கம் தெளியாதே' என்ற பல்லவி யுடையது (கல்யாணி-ஏக தாளம்). சிறிது நேரம் அதைப் பாடி முடித்தபின் நடராச தரிசனம் இல்லாமல் பொழுது வீணாய்க் கழிகிறதே என்று மனம் வருந்திக் 'காணாமல் வீணே கழித்தேனே' என்று மற்றொரு கீர்த்தனமும் பாடினார் (தன்யாசி-சாபுதாளம்).

பல்லவி

காணாமல் வீணிலே
காலம் கழித் தோமே (கா).

அநுபல்லவி

சேணாடர் போற்றும் தில்லைச்
சிதம்பரஸ்தலத்தைக் (கா)

சரணம்

சேரன் சோழன் பாண்டியன்
இரண்யன் செய் கோபுரமும்
சூரன் வீரப்ப பூபன்
செய்த திருமதில்களும்
பாருலகும் போற்றுகின்ற
பஞ்சாட்சரப் படிகளும்
ஆரணங்கள் சூழ்ந்த திரு
ஆயிரக்கால் மண்டபமும் (காணா).

இங்கே இவர் சம்பிரதாயமாகச் சேரன் சோழன், பாண்டியன், இரணியவன்மன் கோபுரங்கள், சூர வீரப்ப பூபன் செய்த திருமதில்கள் என்று குறிப்பிடுகிறார். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் வெள்ளம் வடிந்தது. இவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து கொள்ளிட நதியைக் கடந்து வடகரைக்கு வந்தார்.

'எவ்வாறு கடந்து வந்தார்' என்பது வரலாற்றில் சொல்லப்படவில்லை. அக்காலத்தில் மக்கள் உடல் வலிமை மிக்கவர்களாய் வாழ்ந்தார்கள். இவர் பெரும்பகுதி வெள்ளம் வடிந்ததும் இறங்கி நீந்தியிருக்கலாம். அல்லது பிரவாகம் குறைந்து ஓடம் தலைப்பட்ட உடனே ஓடத்திலேறியும் வந்திருக்கலாம்.

வடகரையை அடைந்தவர் எஞ்சியுள்ள சிறிது தூரமும் நடந்து சென்றார். நடராசரைத் தரிசனம் செய்யப் போகும் மனக் களிப்பினால், வசந்தா ராகத்தில் (ஆதி தாளம்),

தெரிசனம் செய்வேனே-முத்தி கொடுக்கும்
திருவம்பல வாணனை (தெரி)

என்ற பல்லவி உடைய கீர்த்தனம் பாடிக் கொண்டே வந்தார். கோயிலை அடைந்து கனகசபையுட் சென்று மலயமாருதத்தில் (ரூபக தாளம்)

கண்டபின் கண்குளிர்ந்தேன் - ஜனனக்
கடலைக் கரை கடந்தேன்

என்ற பல்லவி யுடைய கீர்த்தனம் பாடினார். இவ்வாறு நெடுநாள் நிகழ்ந்து வந்தது. ஒரு நாள் இவர் சபையில் நின்று யாரிடத்திலேனும் ஒரு சொல் பிறக்க வேண்டும் என்று எண்ணி அதற்காகக் காத்திருந்தபோது, சபாநாதர் கருணையால் ஒருவரும் ஒரு சொல்லும் சொல்லவில்லை. ஒரே அமைதியாக இருந்தது. அப்போது முத்துத் தாண்டவர், சூரியகாந்த ராகத்தில் (மி. சம்பை தாளம்) 'பேசாதே நெஞ்சமே' என்ற சொற்சுருங்கிய பல்லவியுடைய கீர்த்தனத்தைப் பாடினார்.

பல்லவி

பேசாதே நெஞ்சமே - பேசாதே

அநுபல்லவி

பேசாதே நெஞ்சமே
பேசியும்தான் என்னகண்டாய்
ஈசர் புலியூரில் வளர்
நேசர் அநுபூதி யல்லால் (பேசா)

### அரவு தீண்டுதல் :

மற்றொரு நாள் அதிகாலையில் வந்து கொண்டிருந்தபோது இவரை வழியில் ஒரு நச்சுப்பாம்பு தீண்டி விட்டது. இவர் தனியே எப்போதும் போவது வழக்கமாதலால் அருகில் துணைக்கு யாருமில்லை. ஆனால் இதன் பொருட்டு இவர் சிறிதும் பதறவில்லை. 'அம்பலத்தில் ஆடுகின்ற பெருமானே மருந்து' என மனத்தில் உறுதி கொண்டு ஒரு கீர்த்தனம் பாடினார். (காம்போதி-ரூபகதாளம்).

பல்லவி

அருமருந்தொரு தனிமருந்திது
அம்பலத்தே கண்டேனே (அரு)

அனுபல்லவி

திருமருந்துடன் பாடும் மருந்து
தில்லையம்பலத் தாடும் மருந்து
இருவினைகள் அறுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கும் மருந்து (அரு)

சரணங்கள்

1. கொன்றை தும்பை யணிந்த மருந்து
கோவை மீதிற் படர்ந்த மருந்து
மன்றுளேநின் றாடும் மருந்து
மாணிக்க வாசகர் கண்ட மருந்து (அரு)

2. இந்திர ரானவர் வானவர் போற்றும்
இருடிகள் தமக் கெட்டா மருந்து
சந்திர சூரியர் காணா மருந்து
தானே முளைத்துத் தழைத்த மருந்து (அரு)

3. திரித்தி தித்தியென் றாடும் மருந்து
தேவாதி மூவர்கள் காணா மருந்து
கருத்தைத் திருத்தி இருத்தும் மருந்து
காலனைக் காலால் உதைத்த மருந்து (அரு)

பாடத் தொடங்கிய வுடனேயே விஷம்இறங்க ஆரம்பித்தது. பாடல் முடிந்தவுடன் அவருக்கு எல்லா விடமும் நீங்கி எந்த அயர்ச்சியுமில்லாது முன்போலவே வலிமையோடு நடக்கலானார். இக்கீர்த்தனம் இன்றுகூட சபைகளில் பாடப் பெறுகின்ற அரிய கீர்த்தனம். முத்துத் தாண்டவருக்குப் பிற்காலத்தில் இது நாடெங்கும் மிகவும் பிரசித்தமாய் வழங்கிற்று. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த வடலூர் இராமலிங்க சுவாமிகள் இறைவனே மருந்து என்ற கருத்தைப் புள்ளிருக்கு வேளூரில் இறைவன் திருநாமமாகிய வைத்தியநாதன் என்ற பெயரொடு பொருத்தி ''நல்ல மருந்திம் மருந்து-சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து'' என்ற பல்லவியுடைய அரிய கீர்த்தனமாகப் பாடியிருப்பதை இசை ரசிகர்கள் எல்லோரும் அறிவார்கள்.

**அகப்பாட்டுக்கள் ;**

இவ்வாறு ஏராளமான கீர்த்தனங்களைப் பாடிப் பழகிய முத்துத்தாண்டவருடைய நெஞ்சம் அகத்துறையிலும் பாடஎண்ணியதுபோலும். இவர் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். அது காரணமாக இவர் சிறுமிகள் கூற்றாகவும், காதல் துறையிலும் பக்தியோடு அவர் பாடிய பாடல்களில் மிகவும் ஈடுபட்டிருக்கிறார். இதனால் இவர் தாமும் கீர்த்தனங்களைப் பக்தியோடு காதல் துறையில் அமைத்துப் பாடலாம் என்ற துணிவு கொண்டார். இவ்வாறு பாடிய கீர்த்தனப் பாடல்கள் பதம் எனப் பெயர் பெறும். இவ்வாறு இவர் பாடிய பதங்கள் அநேகம். இவையும் கீர்த்தனங்களைப் போலவே பிரசித்திபெற்றன. எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடலைக் காட்டலாம். (தோடி-ஆதிதாளம்).

பல்லவி

தெண்டனிட்டே னென்று சொல்வீர் -
நடேசர்க்குநான்
தெண்டனிட்டே னென்று சொல்வீர்.

அநுபல்லவி

அண்டமெல்லாம் பரவும்
கொண்டல்காள் கும்பிட்டேன்
ஆண்டவரெனும் தில்லைத்
தாண்டவராயர் முன்போய் (தென்)

சரணங்கள்

1. பொருந்தும் காதல் கொண்டு
பொன்னிதழ்த் தேனுண்டு
இருந்தோம் சொல்லவோ விண்டு
ஏகாந்தம் தனிற் கண்டு (தெண்)

2. கண்டால் வரும் பேச்சு
கன்னி வயதில் ஏச்சு;
பண்டு சொன்னதும் போச்சு
பார்வையவன் மேலாச்சு (தெண்)

3. மன்னும் நாணம் போக்கி
மனத்தைத் தாள்மலர்க் காக்கி
சென்னி மேற்கரங்கள் தூக்கித்
தில்லைப் பதியை நோக்கி (தெண்)

இந்தப் பதம் தாண்டவருக்குப் பின் மிக்க பிரசித்தி பெற்றிருந்தது. இதைத்

''தெண்டனிட்டேனென்று சொல்லடி
-சுவாமிக்கு நான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி''

என்று பாடியிருக்கின்ற பிரசித்தி பெற்ற இராமலிங்கசுவாமி கீர்த்தனத்தினால் நாம் நன்கறியலாம்.

**முந்திப்பேறு :**

இவ்வாறாக முத்துத் தாண்டவர் நெடுநாள் கீர்த்தனங்களும் பதங்களும் பாடிக்கொண்டிருந்தார். இவர் சபாநாதரை யன்றி வேறு யாரையும் பாடியதில்லை. எண்பது வயதுக்கு மேல் இவர் வாழ்ந்திருந்தாரென்பர். மாணிக்கவாசகரிடத்து இவருக்கு மிக்க ஈடுபாடு என்று குறிப்பிட்டோம். இவருடைய முடிவும் அவரைப் போலவே அமைந்தது. இறுதியில் ஒரு நாள் இவர் காலையில் நடராச தரிசனம்செய்த போது மாணிக்கவாசகரையே நினைத்துப் பாடினார். அன்று ஆனிமாதம் மக நட்சத்திரம். மாணிக்கவாசகர் பேறு எனக்குத் தரவல்லாயோ, என்று இவர் பாடினார். (கோகிலப்ப்ரியா-ரூபகதாளம்).

பல்லவி

மாணிக்க வாசகர் பேறெனக்குத்
தர வல்லாயோ அறியேன் (மா)

அநுபல்லவி

காணிக்கை யாகக் கொடுத்தேன்
உனக் கென்னை
ஆணிப்பொன்னே தில்லை
யம்பல வாணா (மா)

நடராசப் பெருமானுடைய பெரும் திருவிழா நாளாகிய திருவாதிரைத் திருநாளில் ஏற்றுகின்ற அளவில்லாத கற்பூரங்க ளெல்லாம் கரைந்து அகண்டத்திலே கலந்து விடுவது போல, தாமும் உடலோடு அவனுடைய திருச்

சபையில் கரைந்து கலந்து கொள்ள வேண்டும். என்று பாடினார். அவருடைய வேண்டு கோளைச் செவிமடுத்த பெருமானுடைய திருவருளால் சிற்சபையில் ஒரு சோதி உண்டாயிற்று. அந்தச் சோதியில் இவர் கலந்து தாம் விரும்பியபடி மாணிக்கவாசகர் பேற்றையும் பெற்று விதேக முக்தி அடைந்தார்.

**காலம் :**

இவ்வரலாறு பழமையாக 1852இல் அச்சிட்ட முத்துத் தாண்டவர் கீர்த்தனத்தில் உள்ளபடி அதைத் தழுவி எழுதப்பட்டது. அப்பதிப்பில் இவருடைய காலம் 350 ஆண்டுகளுக்கு முன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி கணக்கிட்டால் இவர் பிறந்த காலம் 1500ஐ ஒட்டியிருக்கலாம். சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியில் நூல்களை அச்சிட்டவர்கள் காலத்தைத் திரித்துச் சொல்வதில்லை. பரம்பரையாக வந்த செய்திகளையும், உண்மையாகத் தாங்கள் அறிந்தவற்றையும் மட்டுமே சொன்னார்கள். ஆதலால் அங்குக் குறிப்பிட்டுள்ள காலக் குறிப்பு எல்லா விதத்திலும் ஏற்கத்தக்கதே. எங்ஙனமாயினும் முத்துத் தாண்டவர் கி.பி.1600க்கு முன் வாழ்ந்தவர் என்பது உறுதி (1560-1640).

**கீர்த்தனங்கள் :**

முன்னமே குறிப்பிட்டது போல முத்துத் தாண்டவர் கீர்த்தனங்களில் கிடைத்து அச்சிடப் பட்டவை தொடக்கத்திலிருந்து இன்று வரை 60 கீர்த்தனங்கள். அவற்றுள் காணப் படும் இராகங்கள் 25. தாளவகைகள் 7. இவற்றுள் மேளகர்த்தா ராகங்கள் மிகவும் குறைவு. ஜன்ய ராகங்களே மிகுதி. கல்யாணி ஆனந்தபைரவி, நாதநாமக் கிரியை ஆகிய ராகங்கள் மிகுதி. மற்றவை குறைவு. பழக்கமில்லாத ராகங்களாக பரீஸ் (பரசு), கர்நாடக சாரங்கா, கௌளி பந்து, நாக வராளி (புன்னாக வராளியல்ல), மங்கள கௌசிகை என்பன காணப்படுகின்றன். அபூர்வமாக இரண்டொரு கீர்த்தனங்களுக்கு மட்டுமே நான்கு சரணங்கள் மற்றவை மூன்றே. பிற்காலத்தில் சரணங்கள் மூன்று அமைக்க வேண்டும் என்பதற்கு முத்துத் தாண்டவரே தோற்றுவாய் என்று கருதத் தோன்றுகிறது.

முத்துத் தாண்டவர் கீர்த்தனங்களில் ஒரு சிறப்புத் தன்மை, இவருடைய பல்லவிகள் சொற் செட்டாயிருப்பது. சொற்கள் குறைந்திருப்பதால் பாடகர் தம்முடைய கற்பனைத் திறனுக்கு ஏற்றபடி சுர விந்நியாசம் செய்வதற்கும் தக்க இடங்களில் சங்கதி அமைப்பதற்கும் நிரவல் செய்வதற்கும், இவை விரிவாய் இடம் கொடுக்கின்றன. ராகத்தில் விரிக்க வேண்டிய இடங்கள் யாவை என்பதெல்லாம் இசைவாணருக்கே தெரியவரும். சாகித்தியம் அதற்கேற்றபடி அமைத்திருந்தால் அது சிறப்புடைய சாகித்தியம், அந்த இசையும் சிறப்படையும். இல்லையானால் இரண்டுமே சிறப்படைய மாட்டா.

சில எடுத்துக்காட்டுகளைத் தரலாம். முன்னமே சில கீர்த்தனங்கள் குறிப்பிடப்பட்டன. 'பேசாதே நெஞ்சமே-பேசாதே' 'தெண்டனிட்டேனென்று சொல்வீர்-நடேசர்க்கு நான், தெண்ணிட்டே னென்று சொல்வீர்', 'நடிப்பவனே சிற்சபையில் நின்று நடிப்பவனே' 'மறவாதிரு நெஞ்சமே உனக்கிது - பிறவா மருந்தாமே', 'சிவனை மறவதே நினை மனமே-ஒருகாலும் சிவனை மறவாதே நினை மனமே', 'தேடித் திரியாதே நெஞ்சே - தேடித் திரியாதே', 'கண்டாயோ மனமே - நடேசனைக் கண்டாயோ மனமே', என்பன சில எடுத்துக்காட்டுக்கள். பதங்களிலும் இவ்வாறு சொற் செட்டாயுள்ள பதங்கள் பல.

திருஞான சம்பந்தர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே, திருத்தாளச்சதி என்றொரு பதிகம் பாடியுள்ளார். 'பந்தத்தால் வந்தெப் பால்-பயின்று நின்ற வும்பரப்-பாலே சேர்வாயேனோர் கான்-பயில்கணமுனிவர்களும்' என்று தொடங்குவது அப்பதிகம். சம்பந்தர் பிறந்த சீகாழிப் பதியிலேயே பிறந்த முத்துத்தாண்டவர் நெடுங்காலம் சென்று அவரைப் பின்பற்றித் தம்முடைய கீர்த்தனங்களுள் சிலவற்றை அதேவிதமான தாள அமைப்பிலேயே பாடி இருப்பது மிக்க சிறப்புடையது. (கீர்த்தனங்கள், 30,31,32). இவர் மேளக்காரர் மரபினர் ஆதலால் பரத நாட்டியமும், நட்டுவத் தொழிலும் நன்கு தெரிந்திருந்தவராவார். சில கீர்த்தனங்கள் தாளக் கீர்த்தனம் என்றே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று பின்வருவது. (சாருகேசி-மிச்ரஜம்பை).

பல்லவி

ஆடிய வேடிக்கை பாரீர்-ஐயர்
ஆடிய வேடிக்கை பாரீர் (ஆடிய)

அநுபல்லவி

தேடிய மாலயன் காணாத பாதர்
தில்லை மூவாயிரவர் கண்ட அதிதர்
தாள்தொழு வார்க் கருநல்கும் பிரக்யாதர்
தம்பரமான சிதம்பர நாதர் (ஆடிய)

தாகு சேகிணங் சேகிணங்கிட ததிங்கத்தோம்
திரிகிட
ததிங்கத் தோம் திரிகிட ததிங்கத்தோம்
தாகு சேகிணங் சேகிணங்கிட ததிங்கத்தோம்
திரிகிட
ததிங்கத் தோம் திரிகிட ததிங்கத்தோம் கிடத
ததிங்கத்தோம் கிடத தத்திமி தித்திமி தெய்
தெய்
ததிங்கத்தோம் கிடத தத்திமி தித்திமி தெய்
தெய்
தாம் தகுந்தரி தரிகு திரிகுகு தரிகுஜெம்தரி
தாம் தகுந்தரி தரிகு திரிகுகு தரிகுஜெம்தரி
தந்த திந்தம் தந்தணம் தணம்திமி

தந்த திந்தம் தந்தணம் தணம்திமி
தந்த திந்திமி ததிக்கிடந் திக்கிடத்தக
தந்த திந்திமி ததிக்கிடந் திக்கிடத்தக
தத்தடிங்கு தடிங்கு டிங்குகு
ததணத ஜெனுத
ததணத ஜெனுத

தத்த திங்கிணத் தோம்
ததிங்கிணத்தோம் ததிங்கிணத்தோமென
(ஆடிய வேடிக்கை)

இதன்பின் இதில் மூன்று சரணங்கள் உள்ளன. இரண்டாவது சரணத்தின் தொடக்கம் பின் வருமாறு:

விரித்த செஞ்சடையாட
விளங்கு குண்டலமாட
மென்கை மான் மழுவாட
மேனியிற் பொடியாடத்
தரித்த வெம் புலிபாம்பு
மருங்கி லிசைந் தாடத்
தண்டை கிண் கிணியிரு
தாளில் அசைந்தாட.

இவ்வரிகளின் பின், அநுபல்லவியின் பின்அமைந்துள்ள தாளச் சதியை அப்படியே எடுத்தமைத்திருக்கிறார். இங்கு மட்டுமல்ல. மூன்று சரணங்களிலும் அப்படியே. இவற்றைப்பார்க்கும்போது இவர் இந்தக் கீர்த்தனத்தை அபிநயம், நாட்டியம் இரண்டும் ஒருங்கிணைந்த நடனத்துக்காகவே பாடியிருக்கிறார் என்று தெரிகிறது.

மற்ற இரண்டு கீர்த்தனங்களும் ஷட்வித மார்க்கனி, ரூபகம்-'நடிப்பவனே சிற்சபை நின்று நடிப்பவனே' என்பதும், அமிர்தவாகினி மிச்ர தாளம் 'நிருத்தம் செய்தாரே-அய்யர், சதானந்த நிருத்தஞ் செய்தாரே அய்யர்' என்பதும் ஆகும். முன்காட்டிய 'ஆடிய வேடிக்கை' என்பது மட்டும் அநுபல்லவியிலும் மூன்று சரணங்களிலும் ஒரே தாளச்சதி அமைத்திருக்கிருர். மற்ற இரண்டிலும் சரணந்தோறும் தாளச் சதியை மாற்றியிருக்கிறார். தாளச் சதிக்குப் பொருத்தமான மூன்று கீர்த்தனங்களும், நிருத்தம் செய்வதையே குறிப்பிட்டுப் பாடுவது சொல்லத்தக்கது.

மூவடுக்கொலிக் கீர்த்தனம் (பகுதாரி-ஆதி தாளம்) என்பதன் பல்லவி :

ஆனந்தத் தாண்டவ மாடினார்-தில்லை
அம்பலவாணனுர் (ஆனந்த)

என்பது. இதன் சரணம் ஒவ்வொன்றிலும் மூன்று வகையான அடுக்கொலிகளை அமைத்துப் பாடியிருக்கிறார். அடுக்கொலிகள் பின் வருமாறு உள்ளன.

பாதச் சிலம்பு-கலீர்-கலீர்-கலீரெனப்
பைம்பொற் குழைகள் பளீர்-பளீர்-பளீ
ரென
வேதப்புராணந் தத்தெய் -தத்தெய்-தத்
தெய்யென்ன
விரித்துச் செஞ்-சடைக்குப் பெண்
தரித்துக்குஞ்-சரத்தைக்கொன்
றுரித்துத் திண் - புரத்தைப்புன்
சிரிப்பிற் சங்கரித்து நின்று (ஆனந்த)

இங்கு மூன்று ஒலிகள் - ஆனந்த தாண்டவம், பாதச்சிலம்பு கலீர்-விரித்துச் செஞ்சடை என்று மூன்று வகைப்பட்ட ஒலிகள் ஒலிப்பதைக் காணலாம். இவ்வாறெல்லாம் தாளக் கீர்த்தனம் அமைக்கும் மரபு அக்காலத்தில் இருந்து போலும். அம் மரபுகள் இன்று மறைந்துபோய் விட்டன. 'விரித்துச் செஞ்சடை' என்று வரும் பகுதி பிற்காலத்தில் முடுகியல் சந்தம் எனப் படுவது. கலீர்-கலீர்-கலீர் என என்பது முதலாக வரும் அடுக்கொலிகளை, இவர் அருணகிரி நாதருடைய திருப்புகழைப் பயின்றுஅமைத்திருக்கிறார் என்று அறியலாம்.

நீண்ட சரணங்கள் உடைய கீர்த்தனங்கள் மட்டும் அன்றி, சுருங்கிய சொற்களையுடைய கீர்த்தனங்களும் இவர் பாடவல்லவர். இதற்குப் பின்வரும் கீர்த்தனம் எடுத்துக் காட்டு. (தேனுகா, ரூபகம்).

பல்லவி

தெரிசனமே நினைமனமே- சபாநாதர்
தெரிசனமே நினை மனமே (தெரி)

அநுபல்லவி

தெரிசனமே முத்தி பரிசனமே-நித்திய
வரிசை நடம்புரி மாசபை வாணர்
(தெரி)

சரணம்

கஞ்சமலருதயன்-கஞ்ச வனிதைபதி
கஞ்சநயனன் பணி-கஞ்சமலர்த்தாள்
ஆகமத்துட் பொரு-ளாக நிறைந்தசு
தாகர மகிமைகொள்- ஆகாசலிங்கர்
கனகாம்பரதர-கனகசடாதர
கனகசுபாகர-கனகசபேசர் (தெரி)

இதற்கு முந்திய கீர்த்தனம் ஒன்றில்இவர் இவ்வாறே சுருக்கமான எழுத்துக்களை உடைய ஏழு சரணங்களை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு பாடலில் இவர் தம்மைத் தமிழ் அறியாதவன் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார். இது பணிவோடு கூறும் உபசாரச் சொல் என்று கருதவேண்டுமேயன்றி உண்மையல்ல. பாடல்களில் காணப்படும் சந்தம், முடுகு, அடுக்கு எனப்படுவன இவர் தமிழ்ப் பயிற்சி மிக்கவர் என்பதை உணர்த்தும்.

முன்னே குறிப்பிட்ட கீர்த்தனங்கள்அன்றி இன்றுங்கூட இசைவாணர் பாடி வருகின்ற ஒரு கீர்த்தனம் 'தெரிசித்த அளவில்' என்பது (லதாங்கி மிச்ரஜம்பை தாளம்).

தெரிசித்த அளவில் முத்தி பெறலாம்-புலியூ
ரனைத்
தெரிசித்த அளவில் முத்தி பெறலாம்

என்பது அக் கீர்த்தனத்தின் பல்லவி. ஒரு கீர்த்தனத்தில் 'மாயவித்தை செய்கிறானே அம்பலவாணன்மாயவித்தை செய்கிறான்' என்ற பல்லவியோடு தொடங்கி இறைவனுடைய சிறப்பியல்புகளையும் லீலைகளையும் நயமாக எடுத்துச் சொல்கிறார். 'ஆட்டிடை அம்பலத்தில் அஞ்சு ஆடு மேய்க்கிறான்' என்று எல்லாம் பேசுகிறார். 'அஞ்சாடு மேய்த்தல்' என்பது 'மேய்ப்பார் இல்லாமல் வெறித்துத் திரி

யும் பாற்பசு' என்று திருமூலர் குறிப்பிட்டது. இங்கு ஆடு-புலன். முதலில் ஆட்டிடை என்ற இடத்து, ஆடு, ஆடுகின்ற ஆட்டம் அல்லது சபை. இவ்வாறு 'மாயவித்தை செய்கிறான்.' என்று இவர் குறிப்பிட்ட தொடர்கள் இதே கருத்தை வைத்துப் பிற்கால இசைவாணர்கள் இன்றுவரை பாலகிருஷ்ணனைக் குறிப்பிட்டு எண்ணற்ற கீர்த்தனங்கள் தோன்றுவதற்கு இடமாக அமைந்தன.

தம் கீர்த்தனங்களில் இவர் ஒவ்வொரு சரணத்திலும் வழி எதுகைகள் பல அமைக்கிறார். இவையெல்லாம் பிற்கால சாகித்திய கர்த்தாக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்தன.

நடராசப்பெருமானைக் குறிப்பிடும்போது தாண்டவன், தாண்டவராயன் என்றெல்லாம் இவர் பல இடங்களில் சொல்கிறார். இத் தொடர்களால் இவர் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டார் என்று சிலர் கருதுவர். அது பொருத்தமில்லை. மற்றவர்கள் போல இவர் தம் பெயரை இறுதிச் சரணத்தில் மகுடமாக வைத்துப் பாடவில்லை. பாடல்கள் யாவுமே நடராச தாண்டவத்தைப் பற்றியதால், தாண்டவன் என்ற சொல்லால் மட்டும் இவர் தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டார் என்று கருத அவசியமில்லை.

**பதங்கள் :**

இவர் பாடிய பதங்கள் 25 என முன்னமே குறிப்பிட்டோம். இங்குள்ள ராகங்கள் 12. இவற்றுள் ஆஷாட கன்னடம் என்பது புதியது. இது 'பேசவும் ஒண்ணாத கோபம் ஏதோ' என்ற தொடக்கம் உடையது.

இவருடைய பதங்கள், தொடக்க காலம் முதலே கீர்த்தனங்களோடு சேர்த்துப் பதம் என்று பிரித்துத் தனியே எண்ணப்பட்டு அச்சிடப்பட்டு வந்துள்ளன. தமிழில் முதல்முதல் பதம் பாடியவர் இவரே என்பதில் கருத்து வேற்றுமையில்லை. பதம் என்பது அகப்பாட்டு, அதாவது நடராசப் பெருமான் மீது காதல் துறையில் அமைந்த கீர்த்தனம். இவருடைய பதங்களில் 14 தலைவி நேரே பேசுவதாகவும் 3 தோழி, தலைவியைப் பார்த்துச் சொல்வதாகவும், 6 தலைவி, தோழியிடம் பேசுவதாகவும், ஒன்று ஏசலாகவும் அமைந்துள்ளன. மூன்றாவது பதத்தில் ''பொற்படியே கொடுத்து எப்படியாகிலும் அப்படி இப்படிச் செய்ததற்கு ஒப்பினன்'' என்று அமைத்திருப்பது இவருக்கு நடராசப் பெருமான் திருப்படியில் பொற்காசு கொடுத்தார் என்ற வரலாற்றுச் செய்தியை நினைவூட்டுகிறது. இதன் சரணங்கள் மூன்றிலும் ஒவ்வொரு தொடரையும் எதுகையில் அமைத்திருக்கிறார். பின்வருவது எடுத்துக்காட்டு.

மேடையிலே-மலர்சூடையிலே-விளை
யாடையிலே-புறவாடையிலே-நீ
ராடையிலே-யென்னைக் கூடையிலே-முத்
நாடையிலே-கை-போடையிலே-நீர்
(அப்படி)

ஏசல் பதம் என்பது சௌராஷ்டிர ராகத்தில் ஏகதாளத்தில் அமைந்துள்ளது. 4 கண்ணிகள் உடையது. இதுகீர்த்தனவடிவத்தில் அமையாமல் 4 கண்ணிகளாக மட்டும் அச்சிடப்பட்டுள்ளது. பின்வருவது இதன் முதல் கண்ணி. ஒவ்வொரு கண்ணியின் முதல் பகுதி, மகள் தாயை வினாவுவது போலவும், பிற்பகுதி மகளுக்குத் தாய் விடை கூறுவது போலவும் அமைந்துள்ளது.

மகள் வினா :

திருமுத்துப் பந்தரின்கீழ்-
சுருதிப் பங்கயன் முதலோர்
இருபக்கமும் தொழவே வரும்-
இவரார் சொல்அன்னே!

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

தாய் விடை :

ஒருபத்தன் செயுந் தவத்துக்-
கருதி நிருத் தங்காட்ட
வருகிற பேரம்பல-
வாணர் காண்மின்னே.

பிற பதங்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லலாம்!

வருவார் வருவாரென்றென் -
மனத்தைத்தேற்றுவரல்லால்
வந்தா ரென்பாரைக்
காண்கிலேன்

என்ற கல்யாணி ராகப் பதம் (ஆதிதாளம்) நூலின் முதல் பதமாக உள்ளது. சிறப்பான ஒரு பரத நாட்டியப் பதம். பலரும் நன்கு அறிந்து சுவைத்தது. இதைவிடச் சிறப்பாக நன்கு நடிக்கப்பட்ட பதம் ''தெருவில் வாரானோ-என்னைச் சற்றே-திரும்பிப் பாரானோ'' என்ற சௌராஷ்டிரப் பதம், ஆதிதாளம். (ஆனால் இது கமாஸ் ராகத்தில் பாடி ஆடப்பட்டு வருகிறது).

'தெண்டன் இட்டேன்' என்ற யமுனா கல்யாணி பதத்தை முன்னமே விரிவாய்ச்சொல்லியிருக்கிறோம். மற்றொன்று, நீலாம்புரி ஆதி தாளம்:

நினைத்துக் கொண்டாற்-சகிக்கப்போமோ-
தனக்குத்தானே
நிகராகிய சாமி-செய்வித்தையை.

இதை அப்படியே அடியொற்றி, கி.பி.1785-இல் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் என்ற சிறந்த தமிழ்ப் புலவர் தமது குருவாகிய சிவ ஞானசுவாமிகள் முத்தியடைந்தபோது ''நினைதாற் சகிப்போமோ-என் சுவாமியை'' என்று ஒரு கீர்த்தனம் பாடியிருப்பது இங்கு அறியத் தக்கது.

கடைசியாகச் சொல்லத் தக்கது, துருவ தாளத்தில் இவர் பாடிய நாத நாமக்கிரியை ராகத்துக்குரிய பதம். இதன் பல்லவியும் மூன்றாவது சரணமும் பின்வருவன காண்க:

பல்லவி

மனமுருகுது, விழிபுனல் பூணுது
மையல் பெருகுது மதியனன்மூளுது
வருமுரு விலிசர-மெனைத் தீண்டுது
வகையென்ன செய்வேன். (மன)

சரணம்

தசம்பவி-தகுண தகுணந்தகு
தகுதிந்தி திமியென நின்றொரு
சவதம் பெறத்திரு நடனம் புரி
தருசங்கரனே நவசந்திர நுதல்வேல்
விழிதரு
நவசிந்தை யிலுருகி யிதம்பெற
நவபஞ்சணை யதனின் மகிழ்ந்தெனை
நண்பிலணைந்தாள் சிவசங் கரதிரி சூலா
தர
திரியம் பகதிரி லோகநாயக
திரிபுண் டரஹர மகாதேவ
தேவராய மூர்த்தி (மனமுருகுது)

இவ்வளவே முத்துத் தாண்டவரின் கீர்த்தனங்களையும் பதங்களையும் குறித்த செய்திகள். இவருடைய பாடல்களை நன்கு தோய்ந்து பாடக்கூடிய இசைவாணர் இக் கிருதிகளில் மேலும் எத்தனையோ இசைச் செய்திகளை இசைச் சுரங்கம் போலத் தோண்டி எடுத்துக் கொண்டே இருக்க முடியும்.

**சிறந்த மார்க்க தர்சி :**

முத்துத் தாண்டவர் இந்த இசைப் பாடல்களைத் தவிர இயல் தமிழில் வேறெதுவும் பாடியதாகத் தெரியவில்லை. ஆனால் இசைத் தமிழில் இவர் சிறந்த மார்க்கதரிசி. மேலே குறிப்பிட்டுள்ள எண்ணற்ற செய்திகளால் இது நன்கு விளங்கும். இசைப் பாடல்கள் யாவும் நடராசப் பெருமானுக்கென்றே எழுந்தவை. அன்றி நடனத்துக்காக இவர் பாடிய பாடலும் நடராசப் பெருமானுக்கே அர்ப்பணமானவை. எல்லாவற்றையும் ஆட்டுவித்துத் தாமும் ஆடுகின்ற இப் பெருமானுக்கன்றி வேறு யாருக்கு இப்பாடல் உரியனவாக இருக்க முடியும்? தாண்டவர் நன்கு தமிழ் பயின்றவர். சாத்திரங்களையும், தோத்திரங்களையும் நன்கு பயின்றவர் என்பதை முன்பு சில இடங்களில் எடுத்துக் காட்டினோம். இவர் மேலான அத்வைதக் கருத்தையும் நன்கு உணர்ந்தவர். இறைவனையே பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் உடற் பிணிக்கு மருந்தாகவும் கருதியவர். மாணிக்க வாசகரிடத்து மிக்க ஈடுபாடு கொண்டவர். பிற்காலத்தில் இவர் பாடல்களைத் தழுவி இராம லிங்க சுவாமிகள், தொட்டிக்கலை-சுப்பிரமணி முனிவர் போன்றோர் இசைப்பாடல்கள் பாடினார்கள்.

இவருடைய கீர்த்தனங்களில் சொற்செட்டு அமைந்திருக்கக் காணலாம். இவ்வியல்பு இசை வாணர் கற்பனைக்கு விரிவான இடங்கொடுக்கிறது. பதங்கள், ஏசல் முதலியன இவரே முதன் முதல் பாடுகிறார். திருஞானசம்பந்தரை அடியொற்றித் திருத்தாளச்சதி, திருவிராகம் முதலியன அமைத்துப் பாடியிருக்கிறார். புராணக்கதைகளும் தமிழ் மொழியில் இவருக்கு எளிதாகக் கைவருகின்றன. இந்த இயல்புகள் எல்லாம் ஒன்றாய்க் காணும்போது, இவர் இசைத்தமிழுக்கே பிற்காலத்தில் எழுந்த ஒரு மார்க்கதரிசியாகிய சிறந்த சாகித்தியகர்த்தா என்பதும், கர்நாடக சங்கீத முதல் மும்மூர்த்திகள் என்று சொல்லுகின்ற மரபில், முதல் மூர்த்தியாவார் என்பதும் நன்கு விளங்கித் தோன்றுகின்றன.

முத்துத் தாண்டவர் அமைத்துக்கொடுத்த மரபு விரிவாக வளர்ந்தது. பிறர் வடமொழியில் இலக்கணம் செய்து தந்திருக்கலாம். ஆனால் கர்நாடக சங்கீத இலக்கியம் செய்தோர் மரபில் இவரே முன்வைத்து எண்ணப் படுபவர். இசையும், நடனமும் பரம்பொருளுக்கே உரியன என்ற ஒரு பெருங் கொள்கையை இவரைப்போல எடுத்துக் காட்டியவர் வேறு எவரும் இல்லை. இவருக்கு முற்காலத்தில் நாகசுர இசையையும், நாட்டியக்கலையையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்தது போலவே, அதே மேளக்கார மரபில் வந்த இவர் முன்னமே சீகாழியில் தோன்றிய ஞான சம்பந்தர் போல வாய்ப் பாட்டு இசையையும் அபிநயக் கலையையும் நடராசப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்தது பெருஞ் சிறப்பு.

**பதிப்புக்கள் ;**

பதிப்புக்களை முன்னமே குறிப்பிட்டோம் சென்ற நூற்றாண்டின் தொடக்கம் முதல் இடையறாது சிலர் முத்துத்தாண்டவர் பாடல்களைப் பதிப்பித்த வண்ணம் இருந்தார்கள். அவர்களுடைய பதிப்புக்கள் செப்பமுடையனவை அல்ல. அப் பதிப்புகளுக்குக் குஜிலிக் கடைப் பதிப்பு என்று ஒரு பெயர் வழங்கிற்று. அவர்கள் அச்சிடாவிட்டால் இன்று நமக்கு இவர் பாடல் கிடைக்க வழியில்லை. தமிழிசை இயக்கம் தோன்றியபோது அதில் சிறப்பான சாகித்தியம் கிடைத்திருக்காது. தமிழிசை இயக்கம் தொடங்கிய காலத்தில் அண்ணாமலைச் சர்வ கலாசாலையார் பல தமிழ்ச் சாகித்தியங்களைச் சுரப்படுத்தி அச்சிட்டதுபோலவே முத்துத் தாண்டவர் பதங்களையும் அச்சிட்டார்கள். அச்சிட்ட முத்துத்தாண்டவர் கீர்த்தனங்கள், எல்லாவற்றிலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளன. எல்லாப் பதிப்புக்களிலும் தொடக்கத்தில் இவர் வரலாறு தரப்பட்டுள்ளது. அது தவிர வேறு செய்திகள் அறிய வழியில்லை. முதல் பதிப்பில் அச்சிடப்பட்ட இவர் 350 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் என்ற செய்தி முதற் பதிப்பில் உள்ளபடியே பிற பதிப்புகள் சில வற்றிலும் அச்சிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

எல்லாப் பதிப்புக்களிலும் பாடல்களின் முடிவில் 'முதற் பதிப்பு - புத்தகத்தின் கீர்த்தனம் 60, முதற்புத்தகப் பதிப்பு பதம் 25' என்று அச்சிடப்பட்டுள்ளது. இதன் கருத்தாவது முத்துத்தாண்டவர் பாடல்களில் இது முதல் தொகுதி என்றும், மற்றப்பாடல்களை இரண்டாவது புத்தகமாகப் பின்னும் அச்சிட

எண்ணினார்கள் என்றும் கருத இடம் தருகிறது. ஆனால் அவ்வாறு யாருமே இரண்டாம் புத்தகம் அச்சிட்டதில்லை. எனினும் இப்புத்தகத்தில் அடங்காத வேறுபல கீர்த்தனங்களும், பதங்களும் அக்காலத்தில் இருந்தன என்று நாம் அறியலாம்.

இப் பதிப்புக்கள் அல்லாமல் பின்னால் வந்த சிறப்புப் பொருந்திய பதிப்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் இசைக் கல்லூரி யமைத்து இசைத் தமிழுக்கு ஆக்கந் தேட முற்பட்டபோது, வெளியிட்ட சுரப்படுத்திய தமிழ்க் கீர்த்தனங்களின் வரிசையாகும். இவ்வரிசையில் நான்காவது புத்தகமாக முத்துத்தாண்டவர் பாடல்களில் 60 கீர்த்தனங்கள் மட்டும் (பதங்கள் 25ஐயும் நீக்கி) சுரப்படுத்தி வர்ண மெட்டு அமைத்து வெளிவந்தன. இவ்வாறு இவற்றை முறைப்படுத்தியவர் திருப்பாம்புரம் பிரசித்திபெற்ற புல்லாங்குழல் வித்துவான் திரு. ந. சுவாமிநாதபிள்ளையாகும். இவர் முத்துத்தாண்டவர் பரம்பரைக்குரியவர் என்பது அடுத்த தலைப்பில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதில் விரிவான முன்னுரைகள், முத்துத்தாண்டவர் வரலாறு, ராகதாள அட்டவணை முதலிய செய்திகள் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. முன் அச்சுக்களில் இருந்த பிழைகள் களையப்பட்டுள்ளன. தவிர, முன் பாடல் மட்டும் இருந்த பதிப்புக்களில் காணப்பட்ட ராக தாளங்களைச் சம்பிரதாய வித்துவான்கள் பாடிய ராகதாள முறையில் மாற்றிப் புதிதாகப் பாடல்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. இது பற்றிய விளக்கம் முடிவுரை என்ற பகுதியில் காணலாம். 31 மேளகர்த்தா ராகங்களில் பிறந்த 465 ராகங்களுக்கு ஆரோசை அமரோசை (ஆரோகணம் அவரோகணம்) விரிவாய்க் குறிப்பிட்டிருப்பது மிகவும் சிறப்பான அம்சம். இசைவாணர் இவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்களானால், இசையுலகம் பெரும் பயனடையும் என்பது உறுதி.

### முத்துததாண்டவர் பரம்பரை :

முத்துத் தாண்டவர் நல்ல மேளக்காரர் மரபில் பிறந்து தில்லை நடராசப் பெருமானுக்கே தம்முடைய கீர்த்தனங்களையும், பதங்களையும் அர்ப்பணித்து, அப் பெருமானோடு இரண்டறக் கலந்து விட்டார். தம்முடைய இசையைப் பரப்புவதற்காக பல சீடர் கொண்ட ஓர் இசைப் பரம்பரையை அவர் தோற்றுவிக்காதது இசைத் தமிழுக்குப் பெருங்குறை. அவர் தியாகையரைப் போல உஞ்சவிருத்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. சோழ அரசர்கள் மேளக்காரர்களுக்கு எல்லாக் கோயில்களிலும் நிபந்தங்கள் அளித்திருந்தமையால், பிற மேளக்காரர் இவருக்கு உணவும் உடையும் உறையுளும் தந்து ஆதரிப்பது மிக்க எளிதாய் இருந்தது. வீதிகளில் கையில் தம்பூரா வைத்துக் கொண்டு போய்ப் பாடி வந்திருப்பாரானால் இவருக்கும் ஒரு பக்தர்குழாம் சேர்ந்திருக்கும். இவர் வீதிகளில் பாடாமல் பெருமான் சந்நிதியில் மட்டுமே பாடினமையால் இவருக்கென்று ஒரு சீடர் குழாம் சேரவில்லை.

இருப்பினும், இவருடைய கீர்த்தனங்கள் அடியோடு மறைந்து விடவில்லை. இவர் பாடியவை பல நூறு கீர்த்தனங்கள். அவற்றுள் இன்று 85 கீர்த்தனங்கள் கிடைப்பது தமிழ் நாட்டுக்கே பெரிய பேறாகும். இவற்றைத் தொகுத்து முறைப்படுத்தி வைத்தவர் இவருடைய குடும்பத்தில் இருந்து இவரோடு பழகி வந்த குப்பையப் பிள்ளை என்பவர்; இவர் முத்துத் தாண்டவர் காலத்துக்குப் பின்னர், சிதம்பரத்திலேயே தங்கி அவருடைய இசைப் பாடல்களை அருமையாகப் பாடிக்கொண்டு வந்தார். இவ்வாறு இவர் தொகுத்து வைத்திருந்த பதங்களும் கீர்த்தனங்களும்-கீர்த்தனங்கள்:60, பதங்கள்:25. இவருடைய இசைத் திறன் காரணமாகவும், அழகான செய்யுளியற்றும் புலமை காரணமாகவும் இவர் சிதம்பரம் அமிர்தகவி குப்பையப்பிள்ளை என்று வழங்கப் பெற்றார். இவர் தொகுத்த முத்துத் தாண்டவர் கீர்த்தனங்கள், பதங்கள் இத்தனை இருந்த போதிலும், இவர் செய்த கிருதிகளில் ஒன்று தான் நமக்குக் கிடைக்கிறது. இது நாதநாமக் கிரியை இராகத்தில் ஆதிதாளத்தில் அமைந்து பின்வரும் பல்லவியைக் கொண்டது.

தரிசிக்க வேண்டும்—கனகசபை
தரிசிக்க வேண்டும்

அநுபல்லவியும் மிக நீண்ட மூன்று சரணங்களையும் உடையது. நடராசருடைய சிற்சபையும் கனகசபையும், அதில் அமைந்த தூண், உத்தரம், கைம்மரம், ஆணி, வரிச்சு, வாசல், ஓடு முதலிய யாவும் மனித சரீரத்தில்அமைந்த எல்லா உறுப்புக்களும் என்று சொல்வது ஒரு சைவ மரபு. இந்த மரபை அப்படியே அமைத்து முதல் சரணம் பாடியிருக்கிறார்.

இரண்டாவது சரணத்தில் நடராசப் பெருமானைக் கேசாதிபாதமாக வருணித்து அவரைக் கண்டு அன்பு கூடு மனமே, கண்டு தரிசிக்க வேண்டும். என்று அமைக்கிறார். மூன்றாவது சரணத்தில் பெருமான் யாருக்கெல்லாம் அருள் செய்தார் என்பதை முறையாகச் சொல்கிறார். இரணிய வன்மன், உபமன்யு, மன்மதன் என்று சொல்லிப் பின்னர் ''முத்துத் தாண்டவன் சரசமான கவிக்குத் தருபதம் கொடுத்தோனே'' என்று முத்துத் தாண்டவரைக் குறித்துப் பாடுகிறார். அதனோடு இதன் தொடர்ச்சியாக, ''செஞ்சொல் அமிர்தகவி துதிசெய் பையரவணிந்தோனே'' என்று தம்முடைய பெயரையும் மகுடமாக வைத்து இதிலேயே பாடியிருக்கிறார். இந்தக் குப்பைய பிள்ளையின் பரம்பரையினர் பிற்காலத்தில் திருப்பாம்புரத்தில் சென்று தங்கி, அங்கு, தங்கள் பரம்பரையை வளர்த்தார்கள் என்று தெரிகிறது. இவருடைய பரம்பரையில் வந்தவர் ஒருவர்சேஷுப் பிள்ளை என்பவர். அவர் புதல்வர் குழந்தைவேல் பிள்ளை, அவர் புதல்வர் சாமிநாத ப் பிள்ளை. அவருக்குப் பின் வந்தவர் திருப்பாம்புரம் நடராச சுந்தரம்பிள்ளை. அவருடைய புதல்வர்கள் மூவர். முதலாமவர், திருப்பாம்புரம் பிரசித்தி பெற்ற புல்லாங்குழல் வித்துவான் சுவாமிநாதபிள்ளை, இரண்டாமவர், பிரசித்தி பெற்ற நாகசுர வித்வான் திருப்

பாம்புரம் சோமசுந்தரம்பிள்ளை. இவர் பழநி தேவஸ்தானத்து நாதசுரக் கல்லூரியில் முதல்வராய் இருந்தவர். மூன்றாமவர் அண்ணாமலைப பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரியில் இசைப் பேராசிரியராக இருந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கின்ற திருப்பாம்புரம் சிவசுப்பிரமணிய பிள்ளை. இந்த வழியில் முத்துத் தாண்டவரின் இசை மரபுவளர்ந்திருக்கிறதென்பது தெரிகிறது. வேறு செய்திகள் தெரியவில்லை.

முத்துசாமி தீட்சிதரின் நேர் மாணாக்கர் கூறைநாடு பரதம் ராமசாமிப்பிள்ளை அவருடைய பிள்ளை பிரசித்திபெற்ற கூறைநாடு நடேசன். இவரிடம் படித்தவர் திருப்பாம்புரம் நடராச சுந்தரம்பிள்ளை. இங்ஙனம் இப்பரம்பரையினர் முத்துசாமி தீட்சிதருக்கும் பரம்பரைச் சீடர்களாக ஆனார்கள். இதனால் தான், முன்னே கூறியவாறு தீட்சிதருடைய கிருதிகள் இக் குடும்பத்தாரிடமே பாதுகாத்து வைக்கப்பெற்று பின்னால் இசையுலகுக்குப் பயன்படுமாறு வெளிவந்தன.

### மாரிமுத்தாப்பிள்ளை ;

முத்துத் தாண்டவரைப் போல, தில்லை நடராசப் பெருமான்மீது பல கீர்த்தனங்கள் ளும், பதங்களும் பாடிய மற்றோர் இசைவாணர் தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை என்பவர். (மாரிமுத்துப்பிள்ளை என்றும் இவர் பெயர் வழங்கும்). பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர் வரிசையிலே வைத்து எண்ணத் தக்கவருள் இவரும் ஒருவர். சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் இவர் பாடிய புலியூர் வெண்பா என்ற நூல் சென்னைப் பல்கலைக்கழகத்துப் பட்டப் படிப்புக்கான தமிழ்ப் பாடங்களுள் ஒன்றாகப் பலகாலம் இருந்து வந்தது. இதற்கு உரையிட்டாரும் இதை அச்சிட்டாரும் பலர். இது தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் பாடிய கலைசைச் சிலேடை வெண்பாப் போலப பின்னிரண்டியும் யமகத்தில் அமைந்தது, புலவருக்குப் பெருவிருந்தாய் இருந்தது; கலைசைச் சிலேடை வெண்பா காலத்தால் இதற்குப் பிற்பட்டது.

சிதம்பரத்துக்கு அருகிலுள்ள தில்லை விடங்கன் என்ற சிற்றூரிலே, சைவ வேளாளர் மரபிலே தெய்வப் பெருமாள் பிள்ளை என்பவர் புதல்வராக இவர் கி.பி.1712 இல் பிறந்தார். சிவகங்கநாத தேசிகர் என்பவரிடம் தமிழ்க்கல்வியும் சமயக்கல்வியும் பெற்று, தக்க குருவினிடம் சமய தீக்கையும் செய்து கொண்டார். தில்லை நடராசப் பெருமான்மீது மிக்க அன்புடையவராய் ஒழுகிவந்த நாளில் இவருடைய மூத்த புதல்வருக்குச் சித்த சுவாதீன மில்லாமற் போக, அது காரணமாக இவர் பெரிதும் கவலையுற்றிருந்தார். நடராசப்பெருமான் கனவில் தோன்றி, ''நம்மீது நீ பாடல் பாடினால் உன் கவலை நீங்கும்'' என்று கட்டளையிட்டதாகக் கண்டார். விழித்தெழுந்த புலவர், இறைவனின் கருணையை வியந்து, அன்றுமுதல் அவனைப் பாடுவதையே தம் கடமையாகக் கொண்டார். இவ்வாறு அவர் பாடிய பிரபந்தங்கள் மேற்சொன்ன புலியூர் வெண்பா, சிதம்பரரேசர் விறலிவிடு தூது, தில்லைப்பள்ளு, வண்ணம், வேறு பல பதிகங்கள் முதலியன. இளமையிலேயே இவருக்குச் சிறப்பான இசையறிவு நிரம்பியிருந்தது. அன்றியும் இவருடைய நடுப்பிராயத்திலே தம்மோடு சம வயதுடையவராய்ப் பெரும்புகழ் பெற்றிருந்த சீகாழி அருணாசலக் கவிராயரைக் கண்டும்கேட்டும், அவரோடு பழகியும் மிக்க பயன்பெற்றார். சிதம்பரத்தில் வாழ்ந்த வேறுபல இசைவாணர்களிடமும் தொடர்பு பெற்று, முற்கூறிய முத்துத்தாண்டவருக்குப் பின்வந்த குப்பைய பிள்ளை பரம்பரையினர் தில்லையில் வாழ்ந்த போது, அவர்களிடமும் பழகித் தம்முடைய இசைப் புலமையை வளர்த்துத் தாமும் அழகிய முறையிலே இசைபாடும் திறமையை அடைந்தார். நடராசப் பெருமான்மீது அளவற்ற கீர்த்தனங்களும் பதங்களும் பாடினார்.

பிறகு இவர் பல தலங்களுக்குச் சென்று ஆங்காங்கு சிற்சில பிரபந்தங்கள் இயற்றினார். வடதிருமுல்லைவாயில் கொடியிடையம்மைமீது பஞ்சரத்தினமொன்று பாடினார். தமது சொந்த ஊர் விஷயமாகப் பல பதிகங்களும், குறவஞ்சி, நொண்டி நாடகம் முதலியனவும் இயற்றினார். எழுபத்தைந்து ஆண்டு வாழ்ந்திருந்து பிலவங்க வருஷம் (1787 இல்) காலஞ் சென்றார்.

### கீர்த்தனங்கள் :

இப்புலவர்பெருமான் பாடிய கீர்த்தனங்கள் சில நூறு என்பார்கள். ஆனால் இவற்றிலே இன்று கிடைப்பன 25 கீர்த்தனங்களே. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் முன் முத்துத் தாண்டவர் கீர்த்தனத்தை அச்சிட்ட ஒரு புண்ணியவான், இவர் கீர்த்தனங்களில் இருபத்தைந்தையும் அவற்றோடு சேர்த்து அச்சிட்டமையினாலேதான் அவை இந்த அளவாவது இன்று கிடைக்கின்றன. கீர்த்தனங்களை அச்சிட்டவர்களுடைய நோக்கம் அக்காலத்துப் பாடிய சங்கீத வித்துவான்களுக்கு இத்தமிழ்க் கீர்த்தனங்கள் கிடைக்கவேண்டும் என்பது ஒன்றுதான். இங்கு நாம் அறிய வேண்டுவது, முக்கியமாக அக்காலத்தில் (அச்சிட்ட காலத்தில்) தியாகையர் கீர்த்தனங்களோ, மற்ற எவருடைய கிருதிகளோ தமிழ்நாட்டில் பாடப்பெறவில்லை என்பதாகும். முத்துத் தாண்டவர் கீர்த்தனங்களையும். மாரிமுத்தாப் பிள்ளையின் கீர்த்தனங்களையும் ஒருசேரப் பதிப்பித்ததனால் இந்த நோக்கம் நமக்கு விளக்கமாகிறது.

அப்படி பல பதிப்புகள் வெளியாயின. இவற்றைத் தமிழ்ப் பண்டிதர்களோ அல்லது இசைவாணர்களோ பார்த்துத்திருத்தமாக அச்சிடவில்லை. 1868ஆம் ஆண்டு அச்சான ஒரு பதிப்பு புதுவை சிவஞானமுதலியார் பார்வையிட்டு, ஒங்கூர் முனுசாமி முதலியார், ஒழுக்கை முத்துசாமி முதலியார் இவர்களது ஒளவை தமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது என்று முகப்பேடு கூறுகிறது. மாரி

முத்தாப்பிள்ளை பற்றிய விவரங்கள் எதுவும் இப்பதிப்பில் இல்லை. பின்னால் மாரிமுத்தாப் பிள்ளையின் வேறு பிரபந்தங்களில் அவருடைய பிரபௌத்திரர் குறிப்பிட்ட செய்திகளே மேலே தரப்பட்டுள்ளன.

இவர் பாடிய கீர்த்தனங்கள் 25ம் 17 இராகங்களில் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஆனந்த பைரவி, சௌராஷ்டிரம், தேவ காந்தாரி, மத்யமாவதி, மோகனம், ஆரபி, பைரவி, புன்னாகவராளி ஆகியவற்றிற்கு இரண்டு கீர்த்தனம் வீதமும், பூரி கல்யாணி பியாகடை, செஞ்சுருட்டி, எதுகுலகாம்போதி, சாவேரி, காம்போதி, தோடி, சுருட்டி, கேதார கௌளம் ஆகியவற்றுக்கு ஒவ்வொன்று வீதமும் அமைக்கப்பட்டுள்ளன. ஐந்து தாளங்கள்-திரிபுடை, ரூபகம் ஒவ்வொரு கீர்த்தனமும் சாபு, ஏகதாளம் மூன்று வீதமும், ஆதி தாளத்துக்குப் பதினேழு கீர்த்தனங்களும் அமைந்துள்ளன.

இவருடைய கீர்த்தனங்களில் சில பிரசித்தமாய் இன்றுவரை இசைக் கச்சேரிக்கும், பரத நாட்டியத்துக்கும் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். இவற்றுள் மிகவும் சிறப்பானது பின் வருவது. (இராகம் எதுகுல காம்போதி, தாளம் ஆதி).

பல்லவி

காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே-எனைக்
கைதூக்கியாள் தெய்வமே

அநுபல்லவி

வேலைத் தூக்கும் பிள்ளை
தனைப்பெற்ற தெய்வமே
மின்னும் புகழ்சேர் தில்லைப்
பொன்னம்பலத்திலொரு (காலை)

சரணம்

1. செங்கையில் மான் தூக்கிச்
சிவந்த மழுவும் தூக்கி
அங்கத்திலொரு பெண்ணை
அனுதினமும் தூக்கி
கங்கையைத் திங்களைக்
கதித்த சடையில் தூக்கி
இங்கும் அங்குமாய்த் தேடி
இருவர் கண்டறியாத (காலை)

2. நந்தி மத்தளம் தூக்க
நாரதர் யாழ்தூக்க
தொந்தமென் நயன் தாளம்
சுதியொடு தூக்கச்
சிந்தை மகிழ்ந்து வானோர்
சென்னிமேற் கரந் தூக்க
முந்தும் வலியுடைய
முயலகன் உனைத்தூக்க (காலை)

இதே போலப் பிரசித்தமாக வழங்குகின்ற மற்றொரு கீர்த்தனம், 'எந்நேரமும் ஒருகாலைத் தூக்கிக் கொண்டு இருக்கிறவகை ஏதையா' என்ற பல்லவி யுடையது. (தோடி-ஆதி தாளம்) மற்றொன்று (வேளாவளி ஆதிதாளம்) இதே போல நடராசப் பெருமானை முன்னிலைப் படுத்தி வினவுவதாக அமைந்தது.

பல்லவி

என்ன பிழைப்புன்றன் பிழைப்பையா-இதை
எண்ணிப் பார்த்தால் ஆர்க்கும் பழிப்பையா

அநுபல்லவி

அன்னங் கண்டறியாமற் சொரூபமும் மாறினீர்
ஆட்டை யெடுத்துத் துணிந் தம்பல மேறினீர்
(என்ன)

இதுவும், இதற்கு முந்தின 'எந்நேரமும் ஒரு காலைத் தூக்கித்' என்ற இரண்டும் பொதுவாக கச்சேரியில் இன்று பாடப்பெறுகின்ற கீர்த்தனங்கள். இவருடைய கீர்த்தனங்களில் இன்னும் இரண்டு வழக்கிலுள்ளன. ஒன்று துதியாகவுள்ளது, ஆரபி ராகம்.

ஒருக்கால் சிவசிதம்பரம் என்று சொன்னால்
இருக்காது ஊழ்வினையே

என்ற பல்லவியுடையது. சித்தர் பாடல்களின் கருத்தையொட்டி இங்கு இவர் வேள்விகள் தவம் யோகம் வழிபாடு கிரியைகள் துறவு முதலிய வற்றைக் கண்டித்து சிவசிதம்பரம் என்றபெயர் சொன்னாலே இத்தனைக்கும் மேலான பலன் கிட்டும் என்று பாடுகிறார்.

மற்றுமொரு கீர்த்தனம் இதனினும் சிறப்புடையது. நிந்தாஸ் துதியாக அமைந்தது.

பல்லவி

வீடும் அம்பலமாகி நீரும் அந்தரம் ஆனீர்
வேளை பொல்லாப் பாசியோ (வீடும்)

அநுபல்லவி

காடுங் காணியாகி
ஓடும் கைக் கொண் டீரே
கனக சபை நாதனே
பனக பூடண னாரே (வீடும்)

இதுவும் முன்காட்டிய 'என்ன பிழைப்பு' என்பதும் நிந்தாஸ்துதி. அதாவது இகழ்வதுபோலப் புகழ்வது. (நிந்தை-இகழ்ச்சி, ஸ்துதி-புகழ்ச்சி). 'என்ன பிழைப்பு' என்ற கீர்த்தனத்தில் இறைவனுடைய திருவிளையாடல்கள் அனைத்தும் சொல்லி நிந்திப்பது போலப் பாடுகிறார். பல கீர்த்தனங்கள் இந்த அமைப்புடையன. நிந்தாஸ்துதி அமைப்பு திருமுறைகளிலேயே காணப் படுவதொன்று. திருவாசகத்தில் 'என்னை விடுதி கண்டாய் விடின்வேலை நஞ்சுண் மழைதரு கண்டன் குணமிலி, மானிடன்: தேய்மதியன்; பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே' என்று மாணிக்க வாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் பாடுகிறார். பிற்காலத்தில் எல்லோரும் இந்த நிந்தாஸ்துதி அமைப்பைப் பல தனிப் பாடல்களில் பாடி இருக்கிறார்கள். ஆனால் மாரிமுத்தாப்பிள்ளையே பல கீர்த்தனங்களில் நிந்தாஸ்துதி பாடுவதை ஒரு முறையாகவே கொண்டு பாடியிருக்கிறார். இவராலேயே இந்த அமைப்புப் பிரபலமடைந்தது.

இவர் கீர்த்தனங்களில் இரண்டு பதங்களாக அமைந்தவை. ஒன்று சுருட்டி இராகத்தில் 'ஏதுக்கித்தனை மோடிதான் உமக்கு என்றன் மேலையா' என்று தொடங்குவது. மற்றது 'என்ன காரியத்துக்கு இந்தப் பேயாண்டி மேல் இச்சை கொண்டாய் மகளே' என்ற தர்மவதி இராகப் பதம். இது அகத்துறையில் அமைந்து பெருமான் மீது காதல் கொண்ட பெண்ணைத் தாய் பழித்துக் காட்டுவதாக அமைந்தது. இது ஒரு காலத்தில் மிக்க பிரசித்தமாய் இருந்ததென்று தெரிகிறது. பிற்காலத்தில் இதைப் பின்பற்றி இன்னும் பிரசித்தியான 'பேயாண்டி தன்னைக் கண்டு நீயேண்டி மையல் கொண்டாய்-பெண்களுக்கழகாமோ' என்ற பதம் எழுந்தது.

இவர் பாடல்களில் இறுதிக் கீர்த்தனம் அம்பிகை சிவகாமசுந்தரி மேல் ரீதிசந்திரிகா ராகத்தில் பாடிய கீர்த்தனம். 'ஏனிந்தப் பராக்கு ஏழை மீதில் உனக்கென்ன வன்மமோ அம்மா' என்பது

மாரிமுத்தாப் பிள்ளை இலக்கிய நூல்ல செய்தவர். ஆயினும் அவருடைய பெயர்இன்று நிலவுவது முன் காட்டிய சில கீர்த்தனங்களால் தான். மறந்தும் புறந்தொழா மாந்தர் என்று சொல்லுகின்றபடி, இவரும் முத்துத் தாண்டவரைப்போல நடராசப் பெருமான்ஒருவரையே பாடும் குறிக்கோள் உடையவர். அக்காலம் பலருக்கும் நோக்கம் இசையில் சென்றமையால் இவருக்கும் அருணாசலக் கவிராயரைப் போலக்கீர்த்தனங்கள் பாடுவதில் மனம் சென்றது. இவருடைய கீர்த்தனங்களில் எண்ணற்ற தலச் செய்திகளைச் சுவைபெற நிந்தாஸ்துதி போல அடுக்கிச் சொல்வதைக் காணலாம். மாணிக்கவாசகர் காலத்துப் பிட்டு விற்ற வந்தியைப் புராணகாரர் பலர் சொல்வதுபோல இவரும் செம்மனக் கிழவி என்றே குறிப்பிடுகிறார். புலையர் மூவர் தில்லையில் அருள் பெற்றார். என்று பல இடங்களில் கூறுகிறார். இம் மூவராவார் நந்தனார், பெற்றான் சாம்பான், தில்லை வெட்டியான் என்போர். (தில்லை வெட்டியான் வரலாறு விளங்கவில்லையாயினும், இவர் திருப்பல்லாண்டு பாடிக் களி நிவேதனம் செய்த சேந்தனார் என்று கருத இடமுண்டு.) இவருடைய பாடல்களில் தில்லைச் செய்திகள் பலவற்றை நன்கு காணலாம். இரண்யவன்மனுக்கு நோய் தீர்ந்தமை, கற்பகவிநாயகர், பேரம்பலம், கனகசபை, ஞானசபை முதலியவற்றைத் தெரிந்து குறிப்பிடுகிறார். இவர் காலத்தில் ஆசிரியர் தம் பெயரை மகுடமாக வைத்து இறுதிச் சரணத்தில் பாடும் பழக்கம் வரவில்லை.

## இவர் காலம் :

இவருடைய மூத்த புதல்வர் பிறந்தது சகம் 1679 லெகுதானிய பங்குனிமாதம் (கி.பி. 1756) என்றும், இவர் காலமானது சகம் 1709 (கி.பி.1787) என்றும் புலியூர் வெண்பா உரை எழுதிப் பதிப்பித்த வேலுசாமி பிள்ளை எழுதியிருக்கிறார்.. இவர் 75 ஆண்டு வரலாற்றை நோக்கும்போது 1712-1787 என்ற கால அளவு நன்கு பொருந்துகிறது. இவருடைய மூத்தபிள்ளையான தெய்வங்கள் பெருமாள்பிள்ளை பிறந்தது 1756 கி.பி. அப்போது இவருக்கு வயது 44 என்பதும் இந்தக் கணக்குக்குப் பொருந்தி வருகிறது.

## இவர் செய்த நூல்கள்

மாரிமுத்தாப்பிள்ளை சிறந்த இசை நூலாசிரியர். சாகித்தியகர்த்தா மட்டுமன்றி சிறந்த இலக்கியகர்த்தா என்றும் முன் குறிப்பிட்டோம். தில்லைத் தல சம்பந்தமாக இவர் கீர்த்தனங்களும் பதங்களும் அல்லாமல், பின் வரும் நூல்களும் செய்தார் என்று சொல்லப்பட்டுள்ளது: முற்கூறிய புலியூர்வெண்பா (புலியூர் என்பது சிதம்பரம்), சிதம்பரேசர் விறலி விடுதூது, தில்லைப்பள்ளு, சித்திரக் கவிகள், சிங்காரவேலவர் பதிகம் என்பன. இவர் பிறந்த ஊராகிய தில்லைவிடங்கள் ஐயனார் நொண்டி நாடகம், வருணாபுரி ஆதிமூலேசர் குறவஞ்சி (வருணாபுரி-தில்லைவிடங்கன்) வருணாபுரிப் பள்ளு, நொண்டிநாடகம், விடங்கேசர் பதிகம், தனிப்பாடல்கள், அநீதிநாடகம் முதலியன. இவை தம்மிடத்தில் இருப்பதாக இவர் மரபிலுதித்த வேலுசாமிப்பிள்ளை சர்வதாரி வருடத்தில் (1888) எழுதினார். வேறும் பல நூல்களும் இவர் செய்திருத்தலும் கூடும். இவற்றுள் இதுவரை தெரிவன கீர்த்தனங்கள் 25உம், புலியூர் வெண்பாவும் தில்லைவிடங்கன் நொண்டி நாடகமும் மட்டுமே. தில்லைவிடங்கன் பற்றிய இரு தனித் தோத்திரப் பாக்களும் உள்ளன. ஏனையவை பற்றித் தெரியவில்லை.

அநீதி நாடகம் என்பது அக்கால மக்கள் வாழ்க்கையிலோ நாட்டிலோ ஏற்பட்டிருந்த அநீதிகளை ஒரு நாடகக் கீர்த்தனமாகச் சித்தரிக்கும் நூல். மேலும் நூல் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் இது போல் எழுந்த நூல்கள் பல. தாசில்தார் நாடகம், டம்பாசாரி விலாசம் முதலாயின காணத்தக்கன.

## புலியூர் வெண்பா:

புலியூர் வெண்பா சிதம்பரத்தலம் சம்பந்தமாக நூறு வெண்பாப் பாடல்களைக் கொண்டது. இவருக்கு உடன் காலத்தவராகிய இராம செயத்திருப்புகழ் பாடிய பாலபாரதி என்ற கவிஞர் இதற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்திருக்கிறார். 'மாரிமுத்துப்பிள்ளையின் புலமைத் திறம்போல, முழுதுந் தெளிந்த மனம் போல, அரன் மால் அயன் மூவரும், பிச்சைக் குழன்றும் பன்றிவடிவெடுத்தும் ஓங்கிப் பறக்கும் ஜோதியாய் உயர்ந்தும் திரிந்தும் பூமியிலும் வானிலும் காணவில்லை' என்று இவர் பாடுகிறார்.

புலியூர்வெண்பா, பாடலில் முதல் இரண்டடிகளில் தலத்தின் பெருமையைச் சொல்லி பின் இரண்டடிகளைத் திரிபிலும் யமகத்திலுமாக அமைத்திருக்கிறது. இவ்வாறு பிற்காலத்தில் பலர் செய்த நூலுக்கெல்லாம் இது ஒரு சிறந்த

வழிகாட்டி. சர்வகலாசாலைப் பாடமாக இருந்த காலத்தில் இதற்குப் பல பெரும் புலவர்கள் உரை எழுதினார்கள். சிறப்பாக முற்கூறிய வேலுசாமிப்பிள்ளையும் உரை எழுதி அச்சிட்டார். இந்நூல் இத்தலம் பற்றிய எண்ணற்ற வரலாறுகளைக் கூறுவது.

### நொண்டி நாடகம்:

நொண்டி நாடகம் என்பது 18ஆம் நூற்றாண்டில் அதிகம் பாடப்பெற்ற ஒரு பிரபந்த வகை. ஒருவன் வேசிமாயையில் சிக்கி அவளுக்காகப் பொன் திருடி, அரசனால் அக்கால வழக்கின்படி திருட்டுக் குற்றத்திற்காகக் கையும் காலும் தறிக்கப்பட்டு முடிவில் தில்லைவிடங்கனில் கோயில் கொண்டுள்ள அய்யனாரான செல்வராக்கதமூர்த்தியின் அருள்பெற்றுக் கையும் காலும் கூடிப் பின் நல்வாழ்வு வாழ்ந்த கதையை அந் நொண்டியே அரங்கில் தோன்றிக் கையில் தடி ஊன்றி நொண்டியாகத் தன் கதையை ஒரு சிந்துப் பாட்டு மூலமாகச் சொல்வதாகிய பிரபந்தம். நொண்டி பாடியதால் இது நொண்டிச் சிந்தாயிற்று.

### இவர் பரம்பரை:

இசைவாணராயிருந்த முத்துத் தாண்டவரே ஓர் இசைப் பரம்பரையை வளர்த்து வந்கொள்ளாதபோது. இவர் அதை வளர்த்துக் கொள்ளாததில் வியப்பில்லை. இவரும் அருணாசலக் கவிராயரும் சம காலத்தில் வாழ்ந்த போதிலும் கூட அவர் தமது முதுமையில் தான் இசைப் பாடலில் ஈடு பட்டார் என்று தெரிகிறது. ஆனால் இவரோ தம் இளமையிலிருந்தே அவ்வப்போது கீர்த்தனங்கள் பாடி வந்தார் என்று நாம் கருதத் தோன்றுகிறது. நொண்டி நாடகம், குறவஞ்சி முதலியவற்றை இவர் பாடி இருக்கும்போது நாம் இவ்வாறு கருதுவது பொருந்தும். இலக்கியத்துறையில் இவருடைய பரம்பரையின் செய்தி நமக்குத் தெரியவில்லை. இவருடைய புதல்வர்களில் முதல்வரும் மூன்றாமவருமான தெய்வங்கள் பெருமாள்பிள்ளை குமாரசாமிப்பிள்ளைஎன்ற இருவரும் தமிழ்ப் புலவர்களாயிருந்தார்கள் என்று தெரிகிறது. பேரர் ஐயாத்துரைப் பிள்ளை என்பவர். அவரும் தமிழ்ப் புலவர். அவர் முன்னிலையில் இவருடைய புத்திர பிரபௌத்திரரான வேலுசாமிப் பிள்ளை என்பவர் மாரிமுத்தாப் பிள்ளையினுடைய நூல்கள் சிலவற்றை அச்சிட்டார். அது மட்டுமன்றி வெண்பாப் பாடுவதில் வல்லவராயிருந்தமையால் வெண்பாப்புலி என்ற பட்டமும் பெற்றிருந்தார். இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் கல்வி பயின்றவர். சிதம்பரத்தில் தமிழ்ப் பண்டிதராயிருந்த காலத்தில் இவர் பல நூல்கள் பாடியிருக்கிறார். கந்த புராண வெண்பா, தேவார வைப்புத்தல வெ வெண்பா, கச்சிக் குமரகோட்டப் பிரபந்தங்கள் முதலியன இவர் பாடிய நூல்கள். இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்திருந்து இவர் காலமானார்.

### அருணாசலக் கவிராயர்:

யோக மார்க்கத்திலே இடை, பிங்கலை, சுழுமுனை என்று மூன்று நாடிகளைச் சொல்வார்கள். இந்த மூன்று நாடிகளைப் போல தமிழிசைக்கு உயிர் நாடியாயிருந்த மூவருள் இடையில் நிற்பவர் சீகாழி அருணாசலக்கவிராயர்.

இசைத்தமிழிலே எவ்வளவோ விசித்திரமான அமைப்புக்களெல்லாம் உண்டு என்று நிரூபித்துக் காட்டியவர், சைவ சமயாசாரியருள் ஒருவரும், சைவத் திருமுறைகளில் முதல் மூன்றைத் திருவாய் மலர்ந்தருளியவருமான பாலறாவாயர் திருஞான சம்பந்த மூர்த்தியாவர். இவர் திருவவதாரம் செய்தருளிய திருப்பதி சீகாழியாகும்.

தமிழிசைக்குரிய மூன்று உயிர்நாடிகளுள்ளும் முதல் நாடியாயிருப்பவர் முத்துத் தாண்டவர். இவரும் சீகாழிப் பதியினர். இவ்வளவு பெருமை படைத்த சீகாழிப் பதியே அருணாசலக் கவிராயரையும் பெற்று வளர்த்துத் தமிழ் உலகுக்கு அளித்திருக்கிறது.

அருணாசலக் கவிவராயர் சீகாழி-ஆக்கூர்-திருக்கடையூர்-தில்லையாடி என்ற சாலையில் தில்லையாடி என்ற சிற்றூரில் கார்காத்த சைவ வேளாள குலத்தில் பிறந்தார். பிறந்த ஆண்டு கி.பி. 1711. (இவ்வளவு திட்டமாக நாம் இவர் பிறந்த ஆண்டை அறிந்து கொள்வதற்குக் காரணமாயிருப்பது இவர் பாடிய கீர்த்தனங்களில் தமிழ் மக்களுக்கு-சிறப்பாக, எழுத்துவாசனை கூட இல்லாத நாட்டுப்புறத்துச் சாமானிய மக்களுக்கு-இருந்து வந்த ஈடுபாடொன்றே தான் என்பதை இங்கு நினைவில் வைக்கவேண்டும்.) இவருடைய தாய் தந்தையர், நல்ல தம்பிப்பிள்ளை, வள்ளியம்மை என்போர். இவர் இவர்களுக்கு நான்காம் புதல்வர்.

இளமையிலேயே (இவருடைய பன்னிரண்டாம் ஆண்டில்) பெற்றோர் காலஞ் செல்லவும், இவர் தம் தமையன்மார் பாதுகாவலிலே வளரலாயினர். தக்க முறையிலே சிறிது காலம் கல்வி பயின்றபின் ,சீகாழிக்கு அருகிலுள்ள மாயூரத்தை யடுத்த தருமபுரம் சென்று அங்கிருந்த சைவாதீனத்தைச் சேர்ந்த முனிவர்களிடமும், அவ்வாதீன வித்துவானாயிருந்த அம்பலவாணக் கவிராயரிடமும் சமயக் கல்வியும் பிறவும் பெற்று வரலாயினர். வடமொழியும் அங்கே பயின்றார். தமது பதினெட்டாம் ஆண்டுவரை அங்கேயிருந்து, சைவத் திருமுறைகளையும், தமிழ்ச் சாத்திரங்களையும், வடமொழி ஆகமங்களையும் கற்றார். அதுகாலை இவருடைய கல்வி அறிவையும், சமய ஒழுக்கத்தையும், சீலத்தையும் பிற அருங்குணங்களையும் கண்ட ஆதீனத் தலைவர் இவரைத் துறவு பூணச் செய்து, தமக்குப்பின் ஆதீனத் தலைமையேற்கச் செய்ய வேண்டும் என்று எண்ணங்கொண்டாராம். இக்கருத்தை அவர் தம் மாணாக்கரிடம் தெரிவித்த போது, இவர் அதற்கு இணங்கவில்லை. தமிழிலே சுவை கண்ட இவ்விளைஞர் தமிழ் முற்றக் கற்க வேண்டும்; தமிழுக்காக உழைக்க வேண்டும்; தொண்டு

செய்யவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருந்தமையினாலே, துறவு பூண்பதில் தம் மனம் செல்லவில்லை என்றும், தாம் கற்ற தமிழ் நூல்களில் கூறப்பட்ட தமிழர் வாழ்க்கை மரபை ஒட்டித் தாமும் இல்லறம் நடத்திய பிறகே துறவு பூண எண்ணக்கூடுமென்றும் கூறிவிட்டார்.

தமிழ் செய்த தவத்தினாலேயே அருணாசலக் கவிராயர் அக்காலத்தில் துறவு பூணவில்லை என்று சொல்ல வேண்டும். துறவு பூண்டிருந்தாரானால், சாத்திர ஆராய்ச்சியில் அவர் மனம் சென்றிருக்கும். பொது முறையில் தமிழும், தமிழ்நாடும் சிறப்பாகத் இசைத்தமிழும் பயன்பெற வேண்டி இருந்தமையினாலே, தமக்குக் கிட்டவிருந்த உயர்ந்த அரும்பதவியைக் கவிராயர் துறந்தார்.

பிறகு கவிராயர் தருமையினின்றும் நீங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழ்ப் படிப்பிலேயே கழித்தார். தமது முப்பதாம் ஆண்டிலேதான் மணம் செய்து கொண்டார். மனைவியார் ஊர் கருப்பூர் என்பது. மணமான பின்னர் ஒரு தொழிலை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. காசுக்கடை வைத்துப் பொருள் ஈட்டிவந்தார். சுற்றுப் பக்கங்களிலுள்ளவர்கள் இவருடைய கல்விப் பெருமையை அறிந்து, இவரைக் கொண்டு ஆங்காங்கு புராணப் பிரசங்கம் செய்வித்தார்கள். அதனால் இவருக்குச் சிறிது ஊதியமும் கிடைத்தது.

இக்காலத்தில் இவர் தமிழிலக்கியப் பரப்பனைத்திற்கும் உரையாணி போன்ற கம்பராமாயணத்தை மனம் ஊன்றிப் படித்து அதில் திளைத்துக் கொண்டிருந்தார்; பிரசங்கமும் செய்து வந்தார்.

இந்நிலையிலே ஒருமுறை, தம் வியாபார நிமித்தமாகப் பொன், வெள்ளி முதலியன கொள்ளும் பொருட்டுப் புதுச்சேரிக்குப் புறப்பட்டார். இன்றுபோலவே அன்றும் வெளிநாட்டுச் சரக்குகள் நயமாகக் கிடைக்கக்கூடிய துறைமுகம் புதுச்சேரியாகவே இருந்தது. புதுச்சேரி செல்லப் புறப்பட்டு வந்த கவிராயர், சீகாழி வந்து அங்குள்ள தருமையாதீன மடத்தில் தங்கினார். அப்போது அங்குக் கட்டளைத் தம்பிரானாயிருந்த சிதம்பரநாத முனிவர் கார்காத்த வேளாளர்; தருமையிலே கவிராயருடன் பயின்றவர். இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு அளவளாவியிருந்தனர். முனிவர் செய்திருந்த கட்டளைமாலை என்ற நூலைக் கவிராயருக்கு காட்டினார். அதனோடுகூட சீகாழிக்கு ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடத் தொடங்கியதாகவும் அவகாசமின்மையால் அது முற்றுப் பெறவில்லை என்பதாகவும் கூறி, அதை முடித்துத் தருமாறு கவிராயரைக் கேட்டுக் கொண்டார். கவிராயர் அன்றிரவே அச்சீகாழிப் பள்ளு என்ற நூலைத் தம் நண்பர் மகிழும்படியாக முடித்துத் தந்தார்.

பள்ளின் சுவையை நன்கு அனுபவித்த சிதம்பரநாத முனிவர், கவிராயர் புதுவையிலிருந்து மீண்டவுடனே குடும்பத்தோடு சீகாழியிலேயே இருக்கச் செய்து வேண்டுவன உதவி வந்தார். இவ்வாறு கவிராயர் சீகாழிக்கே நிலையாக வந்தது தமது 42ஆம் வயதில் (1754). வந்த பின் தம்பிரானுக்காக எத்தனையோ பாடல்களும் பிரபந்தங்களும் பாடிக் கொடுத்தாராம். இக்காலத்திலே இவர் பாடிய நூல்கள் அளப்பில. சீகாழிப் புராணம், சீகாழிக்கோவை, சீகாழிக் கலம்பகம், காழியந்தாதி, அசோமுகி நாடகம், தியாகேசர் வண்ணம், சம்பந்தர் பிள்ளைத்தமிழ், அனுமார்பிள்ளைத் தமிழ் முதலிய பல நூல்கள் பாடினர். அவற்றுள் சிலவே இன்று கிடைப்பன. மற்றவை கிடைத்தில.

சீகாழிக் கடுத்த சட்டநாத புரத்திலிருந்த வேங்கடராமையர், கோதண்டராமையர் என்ற இரு பிராமணர் அப்போது இவரிடம் வந்து சேர்ந்து, கம்பராமாயணம் பாடம் கேட்டார்கள். இருவரும் இசையிலே நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். இவர் பாடஞ் சொல்லிய அருமையும், முன்னமே இவர் பாடியுள்ள நூல்களின் பெருமையையும், இவருடைய புலமையையும் அவர்கள் நன்றாக உணர்ந்து, தாங்கள் பயின்றுவரும் கம்பராமாயணத்தையே கீர்த்தனை யுருவத்தில் இசைப் பாட்டாகப் பாடித் தரவேண்டுமென்று இவரை வேண்டிக் கொண்டார்கள்.

தமிழ் நாடெங்கும் நடைபெற்று வந்த கூத்துக்கும் நாடகத்துக்கும் ஏற்ற முறையிலே, இராம சரிதத்தை இசைப்பாட்டாக அமைக்க வேண்டுமென்ற ஆசை கவிராயருக்கு முன்னமே இருந்தது. இசைத் தேர்ச்சிபெற்ற மாணவர் வேண்டுகோள் இவருக்குப் பெரிதும் ஊக்கமளித்தது.

பிறகு மெல்ல மெல்ல இராமசரிதத்தைக் கீர்த்தனையாகப் பாட ஆரம்பித்தார். கதைப் போக்கு சம்பந்தப்பட்டவரையில் கம்பருடைய இராமாயண அமைப்பையே பின்பற்றினார். கம்பருடைய காவியத்திலே தோய்ந்திருந்தமையால், அவருடைய கருத்துக்களை மட்டுமின்றி அவர் உபயோகித்துள்ள சொற்களையும், தொடர்களையும் எடுத்து உபயோகித்துக் கொள்வது இவருக்குச் சாத்தியமாயிற்று. கம்பர் காவியத்தின் சுவையிலே படிந்திருந்த மாணாக்கர் இருவரும் கவிராயர் கீர்த்தனம் பாடப்பாட, அவற்றைப் பிரதி செய்துகொண்டு வீட்டிலும், வெளியிலும் போனபோன இடமெல்லாம் அவற்றைப் பாடிப் பிரசங்கம் செய்யத் தலைப்பட்டார்கள். இதனால், கவிராயர் கீர்த்தனத்தை முடிக்கு முன்னமே, அதன் பாடல்களில் சில, சென்னை போன்ற இடங்களில் மிக்க புகழ்பெற்று விட்டன.

நூல் ஒருவகையாக முடிந்தது. கம்பர் தம் இராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றினார் என்ற கதை வழங்கிவந்த படியால், கவிராயரும் தம் நாடகத்தை ஸ்ரீரங்கத்திலேயே அரங்கேற்ற வேண்டும் என்றெண்ணம் கொண்டார். இதற்காக அங்கே சென்றார். ஆனால் கோயில் அடியார்களான வைணவர் அதற்கு இசையவில்லை. ''பெருமாள் எங்

களுக்கு உத்தரவு கொடுத்தால்தான் அரங்கேற்றத்துக்கு நாங்கள் சம்மதிப்போம்'' என்று சொல்லி விட்டார்கள். வருந்திய கவிராயர் தனியிடத்தில் இருந்து அழகியமணவாளனான திருவரங்கநாதரைப்பின்வரும் கீர்த்தனம் பாடித் துதித்தார். தமிழ் நாட்டிலே சுமார் 1940 ஆம் ஆண்டை யொட்டி இக்கீர்த்தனத்தைச் சபையிலே பாடாத இசைவாணர் ஒருவரும் இலர் என்று சொல்லிவிடலாம்.

மோகனம்) பல்லவி (ஆதி

ஏன் பள்ளி கொண்டீரையா-சிரங்க நாதரே நீர்
ஏன் பள்ளி கொண்டீரையா

அநுபல்லவி

ஆம்பல் பூத்தசய பருவத மடுவிலே
அவதரித்த இரண்டாற்று நடுவிலே (ஏன்)

சரணம்

கோசிகன் சொல் குறித்ததற்கோ -அரக்கி
குலையில் அம்பு தெறித்ததற்கோ
ஈசன் வில்லை முறித்ததற்கோ-பரசு
ராமன் உரம் பறித்ததற்கோ

மாசிலாத மிதிலேசன் பெண்ணுடன்
வழிநடத்த இளைப்போ
காசிலாத குகன் ஓடத்திலே கங்கைத்
துறை கடந்த இளைப்போ
மீசுரமாம் சித்ர கூடச் சிகரக் கல்
மிசைநடத்த இளைப்போ
காசினிமேல் மாரீசன் ஓடிய
கதி தொடர்ந்த இளைப்போ

ஓடிக் களைத்தோ-தேவியைத்
தேடி இளைத்தோ-மரங்களேழும்
தொளைத்தோ-இலங்கை என்றும்
வளைத்தோ-கடலைக்கட்டி
காவல்மாநகரை இடித்த வருத்தமோ
ராவணாதிகளை அடித்த வருத்தமோ (ஏன்)

இக் கீர்த்தனம் சீரங்கநாதர் மீது பாடப்பட்டிருந்தபோதிலும், இதனுள் பயின்று வருவது முழுமையான இராம சரிதம் ஒன்றுதான்.

அன்றிரவு பெருமாள் கவிராயருடைய கனவிலே தோன்றி, ''நம் பரிசனங்களையும் பாடு; அரங்கேற்றம் நிறைவேறும்'' என்று கூறிவிட்டு, வைணவர் கனவிலும் எழுந்தருளி, ''நம் பரிசனங்களையும் கவிராயரால் பாடுவித்து, இராமநாடகத்தை அரங்கேற்றம் செய்வியுங்கள்'' என்று சொல்லி மறைந்தாராம். காலையிலே அவ்வைணவர் கவிராயரைக் கண்டு வாழ்த்திக் கனவில் திருமால் தோன்றிக் கட்டளையிட்டதைக் கூறினார்கள். அவரும் தம்முடைய கனவையும் உரைத்து, திருமாலின் பரிசனங்களைத் துதிக்கு முகமாக, 'எவரும் வணங்கிய ரகுராமன்' என்ற தோடையம் பாடினார். பின்னர் கம்பர் தமது இராமாயணத்தை அரங்கேற்றிய திருநாளாகிய பங்குனி அத்த நாளில் இராம நாடகக் கீர்த்தன அரங்கேற்றமும் நிறைவேறியது. கோயிலார் கவிராயருக்குத் தக்க மரியாதைகள் செய்து கௌரவித்தார்கள். இவ்வரங்கேற்றம் நடந்த போது அவருக்கு வயது 60 (கி.பி. 1772).

அரங்கேற்றம் முடிந்தபின், கவிராயர் தஞ்சை வழியாகச் சீகாழியை நோக்கித் திரும்பினார். தஞ்சையிலிருந்த மராட்டிய மன்னனும் கலைவள்ளலுமாகிய துளஜாஜியின் அவைக் களத்தில் இராம நாடகத்தைப் பிரசங்கம் செய்யலாமென எண்ணினர். ஆனால், அச்சமயம் தஞ்சை மன்னனுக்கும் ஆர்க்காட்டு நவாபுக்கும் பெரும்போர் நடந்தது. நவாபின் சேனைகள் தஞ்சையை முற்றுகை செய்தன. ஆகவே கவிராயர் அரசனைக் காணவியலாது போயிற்று. முன்னமே புதுவைக்கு அவர் போயிருந்தபோது அங்கிருந்த பிரபுவும், பிரஞ்சுக்காரரின் துபாஷுமான ஆனந்தரங்கம் பிள்ளையோ, தம் நண்பரும் மன்னருமான தஞ்சைத் துளஜாஜி இராமநாடகம் கேட்ட பின்னரே நாம் கேட்பது முறை, அரசர் கேளாத நூலைப் பிரதானி நிலையிலுள்ள தாம் கேட்பது முறையன்று என்று சொல்லிவிட்டார். சொல்லியதோடு கவிராயருக்கு உரிய சிறப்புக்களைச் செய்து, சென்னையிலிருந்த தமது நண்பரான மணலி முத்துக் கிருஷ்ணமுதலியாருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்து, சென்னையிலேயே இராம நாடகத்தைப் பரவச் செய்வதற்கு வேண்டியவற்றை நிறைவேற்றுமாறு குறிப்பிட்டிருந்தார்.

கவிராயர் அங்கிருந்து உரிய காலத்தில் சென்னையை அடைந்து, முதலியாருக்கு அக் கடிதத்தையும், தாம் ஒரு சீட்டுக்கவி எழுதி அதையும் சேர்த்து அனுப்பினார். அச்சீட்டுக் கவி பின்வருவதாகும்.

சித்திரு கிற வல்லி பத்திதரு கிறவல்லி
தேவர்கள் வணங்கும் வல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
திருவிழிக் கருணை யாலே

சத்தியவா சகனென்று பூமண்ட லாதிபர்கள்
தாமெங்க ளுந்து திக்கும்
சகலபா ஷாநிபுண மணலிமுத் துக்ருஷ்ண
சதுரநீ வாழி கண்டாய்

நத்துமலர் குவளைநான் மதியம்நீ செஞ்சாலி
நான்கருவி மழைமேகம் நீ
நளினம் நான் பரிதிநீ பிள்ளைநான் அன்னைநீ
நான் கவிஞன் வழுதிநீ காண்

சுத்தமுள இராமாய ணந்தனைக் கொண்டுனது
சுமுகமது பெறவரு கின்றேன்
சொற்பொருள் அறிந்தளவு சொல்லுவேன்
கேட்கவே
துணை ஆகவேணும் நீயே.

கவிராயருடைய மாணாக்கர்களான வேங்கடராமையரும் கோதண்டராமையரும் முன்னமே சென்னையில் இராம நாடகப் பிரசங்கம் செய்தபோது, முதலியார் பெரிதும் கேட்டு அனுபவித்திருக்கிறார். கவிராயரைக் காணவும் பாராட்டவும் அவருக்கு இயல்பாக ஆவல் இருந்தது. எனவே, அவர் உடனே சென்று கவிராயரை அன்போடு அழைத்துவந்து, தம் முடன் இருக்கச் செய்து, தம் ஆதரவிலே விரிவான இராம நாடகப் பிரசங்கம் பண்ணச்

செய்து, ஏற்றபடி உபசரித்துக் கௌரவித்தார். தஞ்சையிலும் புதுவையிலும் தம்மையறிந்தவர்கள் இடையிலே பிரசங்கம் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்காமல் மனம் நொந்து வருந்திய கவிராயருக்கு, தாம் முன் அறியாதவரான முதலியாரிடத்திலே பெற்ற உபசாரமும், அன்பும் ஆதரவும், அவர் மூலமாகச் சென்னைபோன்றதொரு நகரிலே கிடைத்த மரியாதையும் உள்ளத்தை உருக்கின. ''செஞ்சாலி நான்-கருமழை மேகம் நீ'' என்று அவர் பாடிவிடுதல் எளிது; செஞ்சாலியானது மழை வேண்டித் தவம் கிடக்கலாம். ஆனால், அந்த மழை மேகம் வரக் கருணை கொள்ளவேண்டுமே! அதுவே பெரிய காரியம். ஆகவே கவிராயர் முதலியாருடைய அன்புடைமையைப் பெரிதும் போற்றினார். தாம் பாராட்டுதல் பெற்றது கூடப் பெரிதன்று, சென்னை மக்கள் இராம நாடகத்தைக் கேட்டனுபவிக்க முடிந்ததல்லவா என்று மகிழ்ந்தார். இந்த நன்றியறிதல் தோன்றக் கவிராயர் ஒரு பாடல் பாடி முதலியாரை வாழ்த்தினார்.

கனந்தந்தான் கனகாபி ஷேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை அழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலைதந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தான் இராமகதை எவர்க்கும் தந்தான்
எனை இராமா யணக்கவிஞன் எனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணலிமுத்து க்ருஷ்ண பூபன்
அகந்தந்தான் இருமையிலும் சுகந்தந்தானே.

பின்னர் ,கவிராயர், இலிங்கப்பச்செட்டியார் குமாரர் தேப்பெருமாள் செட்டியார் என்பவருக்குப் பின்வரும் சீட்டுக் கவி எழுதி அவரால் ஆதரிக்கப் பெற்றார்.

கணிகொண்ட பஞ்சலட் சணமும் ராமாயணக்
கடலையும் உணர்ந்த புலவன்
கவிராயர் புகழ்கின்ற காழிஅரு ணாசலக்
கவிராயன் எழுதும் ஓலை—
மணிகொண்ட மார்பிலிங் கப்பமகி பாலன்
மகிழ்ந்த சுதன் வணிகாதிபன்
வருஞ்சீர் படைத்த தேப்பெருமாள் மகிபனிதை
மனமுவந் தினிது காண்க:

அணிகொண்ட தியாகேசர் வண்ணமுரை செய்ததும்
அதற்கு வெகுமதி செய்ததும்
அது நமக்குபகார மானதும் இப்புவியில்
அறியாத பேருமுளரோ
பணிகொண்ட ராம கீர்த்தனையும் அப் படியே
பரிந்து நீ கேட்க வேணும்
பாரில் ஓராயிரம் பிறைகண்டு நீபொருள்
படைத்து வாழ்ந்திருக்க மாதோ!

இச் சீட்டுக்கவி கண்டு செட்டியார் ராம நாடகக் கீர்த்தனப் பிரசங்கம் செய்யும்படி சொல்லி அதைக்கேட்டுத் தகுந்த பரிசில் அளித்தார். இதற்கிடையில் முகமதியருக்குள்இருந்த போர் முடிந்து சமாதானம் ஏற்பட்டது. கவிராயர் பின்னர் தஞ்சை அரசர் துளஜாஜியைக் கண்டு அவரால் சிறப்பிக்கப் பெற்றார். பின்னர் உடையார்பாளையம் ஜமீன்தார் யுவரங்கப்ப உடையாரையும் அவர்போன்ற வேறுசில ஜமீன்தலைவர்களையும் கண்டு அங்கெல்லாம் இராம நாடகம் பிரசங்கம் செய்து பலருடைய நன்மதிப்பையும், உபகாரத்தையும் பெற்றார்.

இவர் தமது 60ஆவது வயதில் இராமநாடகக் கீர்த்தனையைப் பாடி முடித்தார். பின்னர் ஏழு ஆண்டுகளே வாழ்ந்தார். சீகாழியில் சிதம்பரநாத முனிவர் தமக்கு அமைத்துக்கொடுத்த இல்லத்தில் தங்கி வாழ்ந்து சகம் 1701இல் (கி.பி.1778) விகாரி வருடம் ஆனிமாதம் காலமானார்.

இவர் பிறந்தது சகம் 1634 (கி.பி.1711) என்று வரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது. முப்பதாம் வயதில் திருமணம் ஆனபின் 12 ஆண்டுகள் தில்லையாடியிலும், 25 ஆண்டுகள் சீகாழியிலும் வாழ்ந்திருந்தார். சிறந்த கோலப் பொலிவு உடையவர். மேனி எங்கும் திருநீற்றுப்பூச்சு, தூய வெள்ளாடை, தலையிலும் மார்பிலும் தாழ்வடங்கள்.

### இராமநாடகக் கீர்த்தனை :

இந்த நூல் தமிழ் மொழியில் காலட்சேபத்துக்கென்றே எழுந்த முதல் இசை நாடக நூல் என்று சொல்லலாம். இதைக் கவிராயர் எழுதிய காலம் கி.பி.1771. இதற்கு முன்பு குறவஞ்சி நாடகங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றுள் இசைப் பாடல்கள் பெய்யப்பெற்றுள்ளன. இருப்பினும், அவை நாடகக் கீர்த்தனை நூல்கள் ஆகா. பல குறவஞ்சி நாடகங்கள் கோயில் திருவிழாவில் பாடி ஆடுவதற்கென்றே எழுந்தவை. அத்தகைய தொடர்பில்லாமல் பாமர மக்கள் பார்த்தும் கேட்டும் அனுபவிப்பதற்கென்று எழுதப்பட்ட முதல் நூல் இராமநாடகக் கீர்த்தனை நூல். இதனுள் இதன் இயல்புகள் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம். முதலாவது இது ஒரு கீர்த்தனை நூல். இதனுள் இசைப் பகுதிகள் 258. தரு என்ற கீர்த்தனம் 197. திபதை 60. திபதை என்பது இரண்டு அடிக்கண்ணிகளால் மட்டும் ஆன இசைப்பாட்டு. தோடையம் 1. தோடையம் என்பது கடவுள் வணக்கமாகச் சொல்வது. நான்கடிகொண்ட ஒருவகை விருத்தப் பாட்டு. இதன் இறுதியில் ஜயஜய என்ற கோஷம் உண்டு. தோடையத்தில் ஆறு தனிப்பாடல்கள் உள்ளன. இவற்றுள் முறையே விநாயகர், சரசுவதி ஆழ்வார் பதின்மர், மணவாளமாமுனி, அநுமன், கருடன், சேனையர்கோன் ஆகியோர், வேதாந்த தேசிகர், பாஷ்யகாரரான இராமாநுசர், பஞ்சாயுதங்கள் இவற்றுக்கு வணக்கம் சொல்கிறார்.

இதனுள் அமைந்த மொத்த விருத்தங்கள் 268. கொச்சகம் 6. வெண்பா 2. கலித்துறை-1. வேறுபல நாடகக் கீர்த்தனைகள் போல இதனுள் வசனப் பகுதி இல்லை. ஒரே ஓர் இடத்தில் மட்டும் இரண்டு வரிகள் உள்ளன. இந்த நூலைப் பாடியபோது ஆசிரியர், முழுமையும் கம்பராமாயணத்தைப் பின்பற்றிப் பாடுகிறார். ஒவ்வொரு சிறு காட்சியும் கம்பராமாயணக் காட்சியே.

விருத்தம் முதலான பகுதிகள் ஆசிரியர் கூற்றாக வரும் கதைத் தொடர்பைக் கூறும்

பகுதிகள். தரு என்ற கீர்த்தனைப் பகுதி முழுமையும் பாத்திரங்கள் பேசி, பாடி ஆடு கின்ற பகுதி.

இந்த நூலில் ஆசிரியர் நாற்பது ராகங் களைப் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றுள் அசாவேரி, கல்யாணி, சாவேரி, தோடி, மத்திய மாவதி, மோகனம் ஆகியவை 15 முதல் 20 தடவைகள் வரை வருகின்றன. ஆனந்தபை ரவி, சங்கராபரணம், சௌராஷ்ட்ரம், புன்னாக வராளி, பைரவி என்பவை 11-13 தடவைகள். மற்றவை பத்துக்கும் குறைவானவை. கமாஸ், காபி, சயிந்தவி, நாட்டக்குறிஞ்சி, நாட்டை, பரசு, பிலஹரி, மங்களகௌசிகம், ஸ்ரீராகங் களில் ஒவ்வொரு பாடலே. இவற்றுள் துவ ஜாவந்தி, மங்கள கௌசிகம், சயிந்தவி போன்ற சில அபூர்வமானவை.

தாளங்கள் ஆதிதாளம் 146 பாடல். அட தாளச் சாபு 78 பாடல். ஏனைய ஏழு மிகவும் குறைவு.

எதுகுல காம்போதியை இரண்டிடங்களில் அச்சிட்ட புத்தகம் எருக்கல காம்போதி என்று சொல்கிறது.

கவிராயருடைய நூலின் ஒரு சிறப்பு அவர் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற இராகத்தில் இசையை அமைத்திருப்பதாகும் என்று இசைவாணர் சொல்கிறார்கள்.

இராமனை இவர் எப்போதும் சாமி சாமி என்றே சொல்வார்.

யுத்த வர்ணனை இந்நூலில் மிகவும் சிறப் பாக உள்ளது. எந்த இடத்திலும் இவர் யுத் தங்களைப் பெருங்காப்பியத் தன்மையோடு வருணிக்கிறார். இலக்குவனுக்கும் இந்திரசித் துக்கும் நடந்த இரண்டாம் முறை யுத்தத்தை இவர் நாத நாமக் கிரியை ராகத்தில் பெருங் கீர்த்தனமாகப் பாடியிருக்கிறார். இது 'பெருஞ் சண்டைபாரீர்' என்றே தொடங்குகிறது. இது எட்டுச் சரணங்கள், ஒவ்வொன்றிலும் 22 அடி கள் உள்ளன. இதுபோலவே எல்லா இடங் களிலும் பார்க்கலாம். தாடகை வதத்தில் தொடங்கி யுத்த காண்டம் முடிகிற வரையில் இந்த நிலைமையை எங்கும் காண்கிறோம். ஒரு கால் கவிராயர் வாழ்ந்த காலத்தில் இருந்த அரசியல் சூழ்நிலை அவருக்கு யுத்தத்தைச் சிறப்பித்துச் சொல்லும் மனப்பான்மையை உண்டாக்கி இருக்கலாம்.

'மூலபலச் சண்டையைக் கேளும்' என்று தொடங்குகின்ற பந்து வராளி ராகத் தரு எல் லாவற்றிலும் மிக நீண்டது. இதன் அனு பல்லவி மட்டும் 'மு' என்ற எழுத்துக்குரிய மோனையில் தொடங்கும் 21 அடிகளை யுடை யது. இதன் சரணங்கள் மூன்றே. இவற்றின் அடிகள் 338. சிறந்த இலக்கியப் பண்போடு இப்பாடல்களை இவர் அமைத்திருக்கிறார்.

சந்தர்ப்பத்தின் கருத்தை மனத்தில் அமைத்து, பாடலைச் செய்திருப்பதும் குறிப் பிடத்தக்கது. அனுமன் சீதையைப் பார்த்து விட்டு வந்து மிக்க ஏக்கத்தோடு இருக்கின்ற இராமன் முன்பு, 'கண்டேன் சீதையை என்று கூவிக் கூவிக் களிகொண்டான் அனுமன் வந்து குதி கொண்டானே' என்று விருத்தத்தை முடித்து, முகாரி இராகத்தில் 'கண்டேன், கண் டேன், கண்டேன் சீதையைக் கண்டேன் இரா கவா' என்று தொடங்குகிறார். காத்திருக் கின்ற இராமனுக்குக் கண்டேன் என்ற சொல் அமுதம்போல் செவிக்குள் நுழைகிறது. இது போலவே யுத்தமெல்லாம் முடிந்து இராமன் திரும்புகின்ற நேரத்தில் இராமன் வரவுகாணாது அக்கினிப் பிரவேசம் செய்ய இருக்கின்ற பரதன் முன்னே, மத்யமாவதி இராகத்தில் 'வந்தான் வந்தான் பரதா இரகுராமன் வந்தான்' என்று கூவிக் கொண்டு அனுமன் எதிர்ப்படுகிறான். இவ்வாறு தொட்ட தொட்ட இடங்களிலெல் லாம் இவர் கவிச்சுவையும் காப்பியப் பண்பும் பொருந்தக் கீர்த்தனத்தை அமைப்பது மிக்க சிறப்பாய் உள்ளது.

பல பாடல்கள் பொது மக்கள் நடுவில் நன்கு பழக்கமாகி நிலவி வருகின்றன. பால காண்டத்தில் இராமனைக் கண்டு சீதைஐயுற் றுச் சொல்லுகின்ற சொல்லாகிய கீர்த்தனம் (சாவேரி), ஸ்ரீமதி சுப்புலட்சுமி பாடல் மூலம் தமிழுலகம் நன்கறிந்தது.

R. RAJU ... By Commissioner ... HR&CE Administration Dept.

பல்லவி

ஆரோ இவர் ஆரோ-என்ன
பேரோ அறியேனே (ஆ)

அநுபல்லவி

[illegible]ருலாவும் சீருலாவும் மிதிலையில்
கன்னிமாடம் தன்னில்முன்னே நின்றவர் (ஆ)

சரணம்

சந்திர விம்பமுக மலராலே என்னைத்
தானே பார்க்கிறார் ஒருக்காலே
அந்த நாளில் சொந்தம்போலே உருகிறார்
இந்த நாளில் வந்து சேவை தருகிறார் (ஆ)

தீய உபதேசம் செய்ய வந்த கூனியைக் கோபித்துக் கைகேயி சொல்வதாக உள்ள 'இராமனுக்கு மன்னன் முடி தந்தாலே' என் னும் கீர்த்தனமும் இன்று வழக்கிலுள்ளது.

இலக்குவன் கைகேயி வஞ்சனையால் காட் டுக்குப் போகவேண்டும் என்ற நிலை ஏற்பட்ட போது 'நானே லட்சுமணன் ஆனால் கொடுக்கி றேன் இராமனுக்கு மகுடம்' என்று லட்சும ணன் மிக்க சீற்றத்தோடு வில்லை த்வனி செய்து கொண்டு சொல்கிற கீர்த்தனம் தமிழுலகம் நன் கறிந்தது. இதுபோலவே இராவணன் அவை யில் தனக்கு மதிப்புத்தராமல் இராவணன்பேசி யதைக் கேட்ட அனுமன், 'இராமசாமி தூதன் நானடா அடா இராவணா-நானடா என்பேர் அனுமானடா' என்று அவனை இகழ்ந்து பல முறை 'அடா' போட்டுச் சொல்லிய பாடலும் விபீடணனுக்கு இராமன் அபயம் கொடுத்த போது 'இந்தா விபீஷணா லங்காபுரி ராஜ்யம்' என்று சொல்லிய தருவும் இன்றும் மக்கள் மனத்தில் நின்று நிலவுகின்றன.

ஒரு குறிப்பைச் சொல்லி இத்தலைப்பை முடிக்கலாம். இந்த நூற்றாண்டின் தொடக்கப் பகுதி வரையில் மங்களம் பாடியபோது இராம நாடகக் கீர்த்தனையில் வரும் மங்களத்தைத் தான் எல்லோரும் பாடுவார்கள்.

பல்லவி

ஸ்ரீராமச் சந்திரனுக்கு ஜயமங்களம்-நல்ல
திவ்விய முகச் சந்திரனுக்குச் சுபமங்களம் (ஸ்ரீ)

அனுபல்லவி

மாராபி ராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறு நாமனுக்கு இரவிகுல சோமனுக்கு (ஸ்ரீ)

—தொடரும்

# கந்தன் இனியன்

பேராசிரியர் டாக்டர் திரு. துரை அரங்கனார், M.A., M.O.L., Ph.D.

கந்தன், முருகன், சேயோன், செவ்வேள், வேலோன், நெடுவேள் முதலியன ஒரேபொருள் உணர்த்தும் பெயர்களாகும். இப்பெயர்களுள் சிறந்ததும் தலையாயதும் கந்தன் எனலாம். கந்தன் எனும் பெயர் இனியது. எனவே, கந்தன் இனியன் என்று கூறிவிடலாம்.

'கந்து' என்ற சொல்லடியாகப் பிறந்த பெயரே கந்தன் என்பது. தமிழ் நூல்களுள் மிக்க பழமையானதும் தலைமையானதுமான தொல்காப்பியத்திலேயே கந்து என்ற சொல் 'கந்தழி' (தொ.பொ.88) என்ற தொடரில் ஆளப் பெற்றிருத்தலைக் காணலாம். ஈண்டுக் 'கந்து' என்பது பற்றுக்கோடு என்று பொருள் படுவதாகும். 'காதன்மை கந்தா' (திருக்குறள், 507) என்ற தொடரில் 'கந்து' என்பதைப் பற்றுக்கோடு என்ற பொருளிலேயே திருவள்ளுவர் ஆண்டுள்ளார். 'வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்' எனவரும் பட்டினப்பாலை அடியில் (வரி,249) 'கந்து' என்பது 'தெய்வ முறையும் தறி' என்ற பொருளில் வந்துள்ளது. 'கந்துடை நிலை' எனவரும் திருமுருகாற்றுப் படைத் தொடரில் (வரி, 226) 'கந்து' என்பது 'ஆதீண்டு குற்றி' (பசு முதலியன உராயும் தறி) அல்லது யானைத்தறி எனும் பொருளைஉணர்த்துகின்றது. 'கந்திற் பிணிப்பர் களிற்றை' என வரும் நான்மணிக்கடிகை (பா,12)ப் பகுதியில் 'கந்து' என்பது 'யானை கட்டுந் தறி'யையே குறிப்பதாகும். 'கந்துமா மணித்திரள் கடைந்து' என்றுவரும் சீவகசிந்தாமணிப் பாடற் பகுதியில் (பா.155) 'கந்து' என்பது தூண் என்னும் பொருள் பயப்பது. இவ்வாறு கந்து என்ற சொல் பண்டைத் தமிழ் நூல்களிலேயே பயின்று வழங்குவதாய்த் தமிழ்ச் சொல்லே எனக் கொள்ளக் கிடப்பதாய் உள்ளது.

'கந்த' என்று பாகதத்திலும், ஸ்கந்த:என்று சமஸ்கிருதத்திலும், கந்தன் என்று தமிழிலும் வழங்கும் சொற்களை ஒப்பிட்டுத் தமிழில் வழங்கும் கந்தன் என்ற சொல் சமஸ்கிருதத்தில் வழங்கும் ஸ்கந்த, என்பதன் திரிபு எனக் கூறுவர். கந்து எனத் தமிழில் வழங்கும்சொல்லும் ஸ்கந்த என்ற சமஸ்கிருதச் சொல்லின் திரிபென்பர். ஸ்கந்த: என்பதிலிருந்து கந்தன் பிறந்தது என்பதை ஓரளவு ஏற்கலாமாயினும், ஸ்கந்த என்பதிலிருந்து கந்து பிறந்தது என்பதை ஏற்பதற்கில்லை. ஏன்? இவ்வாறு திரிந்து வரும் முறைமை பிறவிடத்துக் காண்டலின்மையானும், பண்டைத் தமிழ் நூல்களிலெல்லாம் கந்து என்பது திரிபெனக் கொள்ளுமாறின்றிப் பயின்று வருதலானும் என்க. மேலும் கந்தனை உணர்த்தும் ஸ்கந்த: என்ற இடத்து வரும் தகர ஒலி வேறு. கந்து என்பதை உணர்த்தும் ஸ்கந்த என்ற இடத்துவரும் தகர ஒலி வேறு. கந்து எனவே முருகனை உணர்த்தும் கந்தன் என்ற சொல், ஸ்கந்த என்ற வடசொல்லின் திரிபெனக் கொள்ளாது கந்துஎன்ற சொல்லடியாகப் பிறந்த சொல்லெனக் கொள்வதே நேர். ஐந்து முகங்களையுடைய சிவபெருமான் தன் அதோமுகத்தோடும் ஆறு முகங்கள் கொண்டு ஒவ்வொரு முகத்திலுமுள்ள ஒவ்வொரு நெற்றிக்கண் வாயிலாக ஆறு நெற்றிக்கண்களிலுமிருந்து ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவிக்க, அவற்றிலிருந்து உண்டான ஆறு குழந்தைகளையும் அம்பிகை வாரி அணைத்த காலையில் அவை ஆறு முகங்களொடும் பன்னிரண்டு கைகளொடும் ஒரு குழந்தையாய் ஒன்றாயின நிலையை ஸ்கந்த என்ற சொல் குறிப்பது என்று கூறி, அந்நிலையைக் குறிக்கும் தமிழ்ச் சொல் கந்த என்று திரிந்து பின் ஆண்பால் விகுதி ஏற்றுக் கந்தன் என வழங்கும் சொல் என்பர். ஒன்றான நிலையைக் குறிக்கும் ஸ்கந்த ( Skandha ) என்பது வேறு. கந்தனைக் குறிக்கும் ஸ்கந்த (Skanda) என்பது வேறு.

தமிழ் நாட்டின் கடவுட் கொள்கை தொன்மையானது. இக்கடவுட் கொள்கை தமிழரிடம் தானாகப் பூத்ததேயன்றிப் பிறரிடமிருந்து வந்ததன்று. இயற்கைப் பொருள்களைப் பிறழ்ச்சியின்றி இயங்கச் செய்யும் பேராற்றலுடைய ஒரு பொருள் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாததாய், இத்தகையது என்றுசொல்ல மாட்டாததாய் நிற்பதென்ற உண்மையைத் தமிழர் தாமாகப் பண்டே உணர்ந்தனர்; மனமொழி மெய்களைக் கடந்து நிற்கும் அதனைக் கடவுள் என்ற சொல்லால் குறித்தனர். அஃது யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்பதென்பதை இறை என்ற சொல்லாற் குறித்தனர். அதுவே ஒவ்வோர் உயிரினும் உள்நின்று இயக்குவது என்பதை இயவுள் என்ற சொல்லாற் குறித்தனர். எல்லா ஆற்றலும் உடைய அது தாம் நினைந்த வடிவாகத் தம் ஊனக்கண்முன் எழுந்தருளிக் காட்சியளித்துத் தாம் வேண்டும் குறையை முடிக்கவும் வல்லது என அவர்கள் உணர்வு பெற்ற நாளே அவர்கள் தங்கள் வாழ்க்

கையில் எல்லாச் சிறப்புக்களும் எய்தும் சிறந்த நாளாயிற்று. அந்த நாளும் இஃது என எட்டி அறியாத தொன்மை வாய்ந்தது. எனலாம். நமக்கு இன்று கிடைத்திருக்கும் மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்திலேயே கடவுளைக் கண்ணால் காணும் முறையில் கடவுள் வழிபாடு நிகழ்ந்து வந்ததற்குச் சான்று பெறுகிறோமாத லின் அவ் வழிபாடு தொன்மையதென்பதற்கு எள்ளளவும் அய்யமே இல்லை.

இத்தகைய வரலாற்று வளர்ச்சி முறையை அறியமாட்டாத தமிழருட் சிலர், அருவமாகவே கொள்வதற்குரியது கடவுள் என்றும், உருவமாக அதனைக் கொள்ளும் முறையும், கோயில் வழி பாடும் கோயில்களும், அவற்றிலுள்ள உருவத் திருமேனிகளும் பிறரிடமிருந்து தமிழ் நாட்டிற் குடிகுபுந்தவை என்றும் கூறிக் குழப்பம் செய் வர்.

எட்டியறியமாட்டாத கடவுளாய், யாண் டும் நிறைந்திலங்கும் இறையாய், எல்லா உயி ருள்ளும் இருந்தியங்கும் இயவுளாய் இம்முறை யில் அருவாய் நிற்கும் அது, அன்பொன்றற்குக் கட்டுப்பட்டு, வழிபாடு ஆற்ற நினைக்கும் எவ் விடத்திலும் அன்பர்கள் குறித்த ஒரு குறியை (இலிங்கத்தை)ப் பற்றுக்கோடாகக் கொண்டு அவர்கள் தங்கள் கண்களும் கருத்துக்களும் கண்டுணர்ந்து மகிழ்ச்சி எய்தும் வண்ணம் அழ கோவியமாக எழுந்தருளிக் காட்சியளித்து அவர்கள் குறையை முடித்துக் களிப்பூட்டிய செய்தியைப் பண்டைத் தமிழிலக்கியங்களில் நாம் பரக்கக் காணலாம்.

உருவ வழிபாட்டின் பழமையான அடிப் படையை உணர்த்துவதே 'கந்து' ஆகும். கந்து என்பது பண்டைய இலக்கியங்களில் பலபல பொருள்களை உணர்த்தியதற்குச் சான்று முன் னரே காட்டினோம். ஒரு சொல்லுக்கு ஒரு பொருளே இயற்கையானது. மற்றப் பொருள் களெல்லாம் அதனை அடிப்படையாகவும் சார் பாகவும் கொண்டு பிறக்கும் சார்பு பொருள் களேயாகும். மேற்காட்டிய சான்றுகளில் வரும் பொருள்களையெல்லாம் சீர்தூக்கி ஆராய்வோ மானால் கந்து என்பதன் இயற்பெயர்ப் பொருள் 'தறி' (மரத்துண்டு, மரத்தூண், மரக் கோடு) என்பதேயாகும் என்று துணியலாம். இன்று சிவாலயங்களில் காணப்படும் இலிங்கங் கள், பண்டு மரத்தறியாயிருந்தவை பின்பு கல் தறியாய் மாறுபாடுற்றவைகளே. மரத்தறி கள் விரைவில் அழிந்துபோகும் தன்மையுடை யன. கல் தறிகள் அவ்வாறு அழிந்துபோகும் தன்மையுடையன அல்ல. எனவே மரத்தறி நட்டு அதில் கடவுளை வழிபட்ட முறைமை தமிழ் நாட்டின் மிக்க பழமையைக் காட்டுவதே ஆகும்.

சிவபெருமானுடைய வீரியம் நழுவியதால் தோன்றினவன் ஸ்கந்தன் ( Skanda ). ஆறு வேறு குழந்தைகளாக முன் இருந்து பின்பு ஒன்று சேர்க்கப்பெற்றவன் ஸ்கந்தன் (Skanda). முன்னைய வரலாற்றைப் பரிபாடலிற் காண லாம். பின்னைய வரலாற்றைத் தமிழ்க்கந்த புராணத்தில் காணலாம். இப்படி வேறுபட்ட ஒலிகளை உடைய வடமொழிச் சொற்களால் வேறுபட்ட வரலாறுகள் ஒன்றாகிக் கந்தன் வர லாறாக வழங்குவதில் உள்ளத்தைப் பறி கொடுப்பதைவிடக் கந்து என்னும் தறி அல்லது தூண் நட்டு வழிபாடாற்றுங்கால், அதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு அன்பர்க்குக் காட்சியளித்தவனே கந்தன் என்று கொள்வது சாலச் சிறந்ததும் பயனுடையதும் ஆகும்.

பண்டைத் தமிழர் வழிபாட்டில் சடங்கும் மந்திரங்களும் வற்புறுத்தப் பெறவில்லை. எளி யார்க்கு எளியனாகவே முருகன் கருதப்பெற் றான். அன்பொன்றே அவனை வழிபடுவதற்கு உரிய சடங்கும் மந்திரங்களும் ஆகும். அவனை வழிபடுவதற்கு இன்ன இடந்தான் தக்கதென்ற வரையறை இல்லை. எல்லாம் அவன் உறை விடங்களே. யாண்டும் நிறைந்திலங்கும் அவன் உறையாத இடமே இல்லையன்றோ! எளி யார்க்கு எளியனாகும் முருகனுடைய அருளி யல்பைப் பெறுவதற்கு அரியதொன்றாக்கி உல கப் பொருள்களில் (புலன்களில்) வைக்கும் பற்றை நீக்கி அவனிடத்தில் உறுதியாகப் பற்று வைப்போர்க்கே முருகன் வந்து அருள் செய் வான் எனக் கூறுவன பத்துப் பாட்டின் முதற் பாட்டான திருமுருகாற்றுப் படையில் வரும் திருப்பரங்குன்றப் பகுதி, திருச்சீரலைவாய்ப் பகுதி, திருஆவினன்குடிப்பகுதி, திருஏரகப் பகுதி ஆகிய நான்கும். அவற்றை அடுத்து வரும் குன்றுதோறாடல் பகுதி அவனுடைய எளியார்க்கு எளியனாம் தன்மையைப் பொது வாக உணர்த்துவதாகும். பழமுதிர் சோலைப் பகுதி அவனுடைய எளியார்க்கு எளியனாம் தன்மையைப் பலபடப் பாராட்டி அச்சத்தை அறவே நீக்கி அவனை வழிபடுவது மிக மிக எளிது; அன்பொன்றே வேண்டற்பாலது; எவ் விடத்து வேண்டுமானாலும் அவன் வந்து அருள் செய்வான் என்பதை விரித்துரைப்பது. இந்த எளியார்க்கு எளியனாம் தன்மையே தமிழரால் போற்றப்பெற்றது; பாராட்டப் பெற்றது; கடைப்பிடிக்கப்பெற்றது.

பழமுதிர் சோலைப் பகுதி, முருகன் யாண்டு யாண்டு உறைதற்குரியன் என்பதை உணர்த்துகின்றது; ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும் அவன் உறைதற்கு உரியன்; தன்மேல் அன்புடையார் ஏத்துதலாலே தன் மனம் பொருந்துதல் வருகின்ற இடத்தினும் அவன் உறைதற்குரியவன்; வேல் ஏந்தி ஆடும் வேலன் இழைத்த வெறி ஆடும் (தெய்வம் ஏறி ஆடும்) களத்தினும் அவன் உறைதற்கு உரியன்; காட்டிலும் சோலையிலும், அழகுபெறும் ஆற் றிடைக்குறையினும் அவன் உறைதற்கு உரியன். ஆறுகளிலும், குளங்களிலும் அவன் உறைதற்கு உரியன்; முன்கூறிய ஊர்களிலன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களிலும், அவன் உறைதற்கு உரியன்; நாற் சந்தியினும், முச்சந்தியினும், ஐஞ்சந்தியினும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்தடியிலும், ஊர்க்கு நடுவாய், எல்லா ரும் இருக்கும் மரத்தடியினும், அம்பலத்திலும், கந்து உடை நிலையினும் (ஆதீண்டு குற்றி அல் லது யானைத்தறி அல்லது ஏதோ நட்ட ஒரு தறி உடைய இடத்திலும்) அவன் உறைதற்கு உரியன்; செந்நூல் காப்புக்கட்டி, ஆட்டுக்கிடா யின் குருதியோடு (இரத்தத்தோடு) பிசைந்து தூய வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டுத் தூபம் கொடுத்துப் பல வாச்சியங்களை ஒலிக்

கப்பண்ணிக் குறமகள் வரப்பண்ணின அகன்ற இடத்திலும் அவன் வந்து உறைதற்கு உரியன்; வேண்டுநர் வேண்டியாங்குப் பெற்று உவக்கும் வண்ணம் ஆண்டாண்டு அவன் உறைதற்கு உரியன்; இவ்வாறு இவன் உறைதற்கு உரிய இடங்களாக உயர்வு தாழ்வு கருதாமல் கூறியிருத்தலை நோக்கும்போது அவனுடைய எளியார்க்கு எளியனாம் தன்மை தெற்றென விளங்குதலை நாம் காணலாம். இங்கே தான் கந்துடை நிலை குறிக்கப்படுகிறது. ஏதோ ஒரு தறி நட்ட இடம் என்பதே அதனுடைய நேர்பொருளாகும். அவனை அதிலிருந்து தோன்றி அருள் செய்யுமாறு வேண்டும் பண்டை வழக்கம் இங்கே குறிக்கப் பெற்றுள்ளது எனலாம். எனவே கந்துடை நிலையில் எழுந்து தோன்றுபவனே கந்தன் எனலாமன்றோ?

இனி, அப்பழமுதிர் சோலைப் பகுதியிலேயே அவனை வழிபடும் முறையும் உணர்த்தப்படுகிறது. முற்கூறிய அவ்விடங்களிலே ஆயினும் ஆகுக, பிறவிடங்களிலே ஆயினும் ஆகுக; ''முற்பட நீ கண்டபொழுதே முகம் விரும்பித் துதிப்பாயாக. அவனுடைய தெய்வத் தன்மையைக் கண்டபொழுது அச்சம் பிறவாமல் நிற்பாயாக. கையைத் தலைமேலே வைத்து வாழ்த்துக. பின்னர்த் திருவடி தலையிலே உறும்படி தண்டனிட்டு, 'ஆறுவடிவு பொருந்திய செல்வ, ஆல்கெழு கடவுட் புதல்வ, மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே, கொற்றவை சிறுவ, பழையோள் குழவி, வானோர் தானைத் தலைவ, மாலைமார்ப, நூலறிபுலவ, செருவில் ஒருவ, பொருவிறல் மள்ள, அறிந்தோர் சொல்மலை, மங்கையர்கணவ, மைந்தர் ஏறே, வேல்கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ, மொழிப் புலவர் ஏறே, அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக, வீடுபெற வேண்டுமெனவிரும்பி அதனை நுகர்விக்கும் பெரியபுகழை ஆளுதலையுடையாய்! பிறரால் இடுக்கட்பட்டு வந்தார்க்கு அருள்பண்ணும் சேய், பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள், பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள், பொருந, குரிசில் எனப் புகழ்ந்து கூறுக. இவ்வாறுதான் கூறவேண்டும் என்பதில்லை. நீ உனக்குத் தோன்றியவாறு எப்படி வேண்டுமானாலும் கூறுக. பின், 'உன் தன்மையெல்லாம் அளந்தறிதல் பல் உயிர்க்கும் அரிதாகையால், உன் திருவடியைப் பெறவேண்டுமென்று இடைவிடாது நினைத்து வந்தேன், ஒப்பற்ற மெய்ஞ் ஞானத்தை உடையோய்' என்று நீ சொல்லக் கருதிய வீடுபேற்றினை நீ விண்ணப்பம் செய்வதற்கு முன்பே, அவன் பக்கத்திருப்போர் 'இவன் அளிக்கத்தக்கான்' என்றுகூற, அவன் தன் அச்சம் தரும் பேருருவத்தைக் கொண்டு மணம் நாறும் தெய்வத்தன்மையை உடைய தன் இளைய வடிவைக் காட்டி உன்மேல் அன்புடைய நன்மொழிகளைப் பலகாலும் அருளிச் செய்து நீயே பிறர்க்கு வீடளிக்கும் உரிமையுடையவன் ஆகும்படி பிறராற் பெறற்கரிய வீடுபேற்றினைத் தருவான்'' என்று இவ்வாறு உணர்த்தும் பகுதியை நாம் படிக்கும் போது, பொதுவாக எவ்விடத்தும், சிறப்பாகக் கந்திடத்தும் எளியார்க்கு எளியனாகத் தோன்றும் கந்தன் மிகமிக இனியன் என்பது நன்கு புலப்படுகின்றது.

கந்துடை நிலையிற் கந்தனைக் காண்பாரே வீடுபெற வல்லரெனின், கந்தழி நிலையில் தம் உணர்வே கருவியாகக் காண்பவர் வீடுபெற வல்லராவார் என்பது சொல்லாமலேவிளங்கும்.

கந்துடை நிலையிற் கந்தக் கடவுளைக் கண்டு வாழ்த்துதல் அனைவருக்கும் எளிது. கந்தழி நிலையிற் கந்தனை வாழ்த்துதல் உணர்வு வலிமிக்கார்க்கே இயைவதாகும். ஏதாவது ஓர் இடம், அதில் ஒரு குறி, அதை வழிபடுவதற்கு ஏதாவது ஒரு நேரம் இவைகொண்டு வழிபாடாற்றுதல் எளிது. கால இடவரையறையின்றிக் கண்ணையும் கருத்தையும் நிறுத்துவதற்கு ஒரு குறியுமின்றி யாண்டும் நிறைந்திலங்குவதாக அதனைப் பாவித்தல் மிகவும் அருமையாகும். எளிமையை உடன்பட்டு, அருமையை அவ்வளவாக வரவேற்க மனம் இல்லாமை பற்றியே, கந்தழி நிலையும் கடவுள் வாழ்த்தோடு கண்ணி வரும் என்றார் தொல்காப்பியனார்.

என்றாலும் கந்தழிநிலை கடவுள் வாழ்த்தொடு கண்ணிவரும் என்ற தொல்காப்பியரது குறிப்பால், கந்துடை நிலையில் கடவுளை வாழ்த்தி வழிபடுதல் சிறந்ததும் எளியதும் ஆகும். கந்தழி நிலையில் கடவுளை வாழ்த்தி வழிபடுதல் மிக்க அருமையுடையதாகும் என்ற வேறுபாட்டை நாம் உணர்தல் வேண்டும்

தமிழ்நாட்டில், இவ்வேறுபாட்டினையும், கந்துடை நிலையில் கடவுளை வாழ்த்தி வழிபடுதலின் எளிமையினையும் உணர்ந்த சான்றோர்கள், அதனைமிகுதியாகக் கடைப்பிடித்ததால் தான் தமிழ்நாட்டில் கோயில் வழிபாடும் வழிபாட்டிற்குரிய பாடல்களாகத் தேவார திருவாசக நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களும் மிகுந்து தோன்றுவனவாயின. இந்தச் சான்றுகள் கொண்டே கந்துடை நிலையிற் காட்சிதரும் கந்தன் இனியனாயினான் எனலாம்.

கந்துடை நிலையில் காட்சியளிக்கும் கந்தனை முதற் கடவுளாகக் கொள்பவர், சிவபெருமான் முதலாகக் கூறப்படும் ஏனைய தெய்வங்கள் எல்லாவற்றையும் அவனுக்கு அடங்கி ஏவல் புரிவனவாகக் கூறுவர். இத்தகைய சிறப்பையும் கந்தனைப் பற்றிய பாடல்களில் காணலாம்.

எளியார்க்கு எளியனாகும் கந்தன் சிவபெருமானுக்கு மைந்தனாம் எளிமையைக் கொண்டு திகழ்தலில் தவறொன்றுமில்லை. அவ்வாறு அவன் திகழும் தன்மைகளைப் பற்றியும் அவனைப் பற்றிய பாடல்களில் காணலாம்.

கந்தனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளுங்கால் அவன் முக்காலத்தும் அழிவில்லாதவன்; ஆதலினால்; சத்து; எல்லா அறிவும் உடையவன்; ஆதலினால் சித்து; இனியன்; ஆனந்தஸ்வரூபி, ஆதலினால் ஆநந்தம். எனவே கந்தன் சச்சிதானந்த வடிவன் எனினும், அவன் சத்தாகவும் சித்தாகவும் இருத்தலினால் நமக்கொரு பயனுமில்லை. அவன் ஆநந்தஸ்வரூபியாய், இனியனாய், நமக்கு இனிமை தருபவனாய் இருத்தலே நமக்குப் பயன் தருவதாம். ஆதலினால்தான் அவனை இனியன் எனக் கொண்டு நாம் அவனுக்கு வழிபாடாற்றுதலில் நமக்கு விருப்பம் மிகுகிறது.

**

# திருமாலுக்குச் சங்கத் தமிழ்மாலை

வித்துவான் திரு. இராம. பட்டாபிராமன், விஷ்ணுபுரம்.

திருமாலைத் தம் ஒரே இறைவனாகக் கொண்டொழுகும் பெற்றி வைணவர்களிடம் நிலவுகின்றது. பழம்பெருமை மிக்க நந்தமிழரும், வைணவ நோக்கு உடையவராய் வாழ்ந்தனர். 'வடுவில் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடுவில் கேள்வியுள் நடுவணவர்'- (பரி 2:24,25). ஆம், மறையின் அந்தர்யாமியாகிய திருமாலினைச் சங்க காலத் தங்க இலக்கியங்கள் எவ்வாறு புகழ்கின்றன என்பதைக் காண்போம்.

**பாற்கடலில் பள்ளிகொண்டோன்:**

''இருள் இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி இனத்துத்தி அணிபணமாயிரங்கள் ஆர்ந்த அரவசரப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி'' அறிதுயில் துயின்ற அரங்கனை வைணவ வேதமாம் நாலாயிரம் கண்டது போல், பரிபாடல் ''தன்னுரு உறழும் பாற்கடல் நாப்பண் மின்அவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த கவை நாவருந்தலைக் காண்பின் சேக்கைத் துளவம் சூடிய அறிதுயிலோன்'' என்று பல்லாண்டுகட்கு முன்னரே புகழ்ந்துள்ளது.

**வராக அவதாரம்:**

பத்து அவதாரங்கள் எடுத்த பரந்தாமனின் வராகஅவதாரம்பூவுலகத்தைப் பிரளயத்திலிருந்து மீட்டது அன்றோ! அந்த அவதாரத்தினைப் பரிபாடல் (2:15-17) ''கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய ஊழி ஒருவனை உணர்த்தலின் முதுமைக்கு ஊழியாவரும் உணராத்'' தோற்றமாக வணங்குகின்றது. மேலும் ''ஊழி ஆழிக் கண் இருநிலம் உருகெழு கேழலாய் மருப்பின் உழுதோய்'' எனப் புகழவும் செய்கின்றது.

இரணியன் என்பானை 'மாயன் அந்தியில் அவன்பொற்கோயில் வாயிலின் மணிக்கவான் மேல்,வயிரவாள் உகிரின்வாயின் மீயெழு குருதி பொங்க வெயில் விரி வயிர மார்பு தீ யெழப் பிளந்து நீக்கித் தேவர்தம் இடுக்கண் தீர்த்த' நரசிங்க அவதாரத்தினைக் கம்பர் தம் இராமகாதையில் விளக்கிப் போந்தார். இம்மாதிரியே பண்டைநூலாகிய பரிபாடலும் 'நிற்புகழப் புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற் பிருங்கலாதன் பலபல பிணிபட வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத் தலர்ந்த புகழோன் தாதை ஆதலின் இகழ்வோன், இகழா நெஞ்சினனா நீ இகழா நன்றா நட்ட அவன் நன் மார்பு முயங்கி ஒன்றா நட்டவன் உறுவரை மார்பில் படிமதம் சாம்ப ஒதுங்கி, இன்னல் இன்னலொடு இடிமுரசியம்ப வெடிபடா ஒடித் தூண் தடியொடு தடிதடி பலபட வகிர் வாய்த்த உகிரினை'' எனப் புகழ்ந்து போற்றுகின்றது.

காலத்தில் முன்பின் நினைத்துக் கம்பருக்கு ஒப்பிடுவதாக நினைத்தல் கூடாது. நம் சமயக் கருத்துக்கள் இந்தியா முழுவதும் பரந்து மாறுபடாவகையில் விரவி மக்கள் உள்ளத்துப் பதிந்து கவிஞர் வாயிலாக வெளிவருவதைக் கண்டு இன்புறவேண்டும். சங்கத் தமிழைச் சமய உணர்வோடு படிக்கும் காலமாக இது இல்லை. இந்நிலை மாறி வழிபாட்டு உணர்வோடு படிக்கும் காலம் வர என் உள்ளம் அவாவுகின்றது. அதனாலேயே பிற்காலச் சமய அறிஞர்களது கருத்துக்களை முதற்கண் கூறி, சங்க நூற் கருத்துக்களை எடுத்துக் காட்டுகிறேன்.

**வாமனாவதாரம்:**

'மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால் ஞால முழுவதும் நயந்தளந்த' தன்மையை (திருவள்ளுவர்மாலை-பரணர்), முல்லைப் பாட்டு 'நனந்தலையுலகம் வளைஇநேமியோடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை, நீர் செல நிமிர்ந்த மாஅல்' எனப் பாடுகின்றது. இந்த வாமனர் விசுவரூபம் எடுத்த காட்சியை நற்றிணை ''மாநிலம் சேவடியாகத் தூ நீர் வளைநரல் பௌவம் உடுக்கையாக, விசும்பு மெய்யாகத், திசைகையாகப், பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணாக, இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய வேதமுதல்வன் என்ப. அவன் தீதற விளங்கிய திகிரி யோன்' எனத் துதித்து வாழ்த்துகின்றது. வள்ளுவர் தம் குறட்பாவும் 'அடியளந்தான் தாஅயது' (610) என்ற தொடரால் அடக்கி, இவ்வவதாரத்தைக் குறிப்பிடுகின்றது.

**இராமாவதாரம்:**

இராவணன் சீதையைக் கவர்ந்தான். சீதை அரற்றினாள். தன் அணிகளைக் கழற்றிக் கீழே எறிந்தாள். அவ்வணிகள் அனுமன் முதலான குரங்கினத்தார் வாழிடத்தில் விழுந்தன. குரங்குக் கூட்டம் அவ்வணிகளை அணிந்து மகிழ்ந்தனவாம். இந்நிகழ்ச்சியைப் புறநானூறு பின்வருமாறு கூறும். ''கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை நிலம் சேர் மதரணி கண்ட குரங்கின்''.

சீதையைப் பிரிந்த இராமன் இராவணனை அழிக்க, விபீடணன் சுக்ரீவன் முதலானவர்களுடன் திட்டம் தீட்ட, ஒரு ஆலமரத்தினடியில் அமர்ந்தானும். இந்நிகழ்ச்சியை விவரிக்கும் அகநானூற்று வரிகள் இதோ:-''வென்வேற்கவுரியர் தொன்முது கோடி முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை வெல்போர் இராமன் அருமறைக் கவித்த பல்வீழ் ஆலம்''(70:13-16).

**கிருஷ்ணாவதாரம் (பாகவதம்):**

'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்த' கண்ணன் சிறு பிராயத்தில் யமுனைக் கரையில் ஆயர் பாடி மகளிர் ஆடைகளை மறைத்துப்பின் அருள்செய்து ஆடிய அவதாரக் கதையினை,

அகநானூறு (59:3-6) ''வடாஅது வண்புனல் தொழுநை வார்மணல் அகல்துறை அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர் மரஞ்செலமிதித்த மாஅல்'' எனப் பேசுகின்றது. பாலன் கண்ணன், குதிரைவடிவில் வந்த அசுரனாகிய கேசியைக் கொன்ற நிகழ்ச்சியைப் பரிபாடல் 'கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல் எரிசினம் கொன்றோன்'' என்று குறித்துப் புகழ்கின்றது. கண்ணன் பலராமனின் தம்பி என்பதைப்பரிபாடல் (2:20-21) 'வளையொடு புரையும் வாலி யோற்கு அவன் இளையன்' என்னும் வரிகளால் தெளியலாம்.

பலராமனைக் கண்ணனோடு இணைத்துப் புறநானூறு (58:14-16) 'பால்நிற உருவில் பனைக் கொடியோனும், நீல்நிற உருவின் நேமியோனும் என்று இரு பெருந்தெய்வமும்'' என்று பெருங்கடவுளராக நினைக்கின்றது. வாலியோனாகிய பலராமன் நாஞ்சிலோனாகவும், பனைக் கொடியோனாகவும் புகழப்படுவதைக் கீழே காண்போம். 'நிலனுழு வளைவாய் நாஞ்சிலோன்' (பரி. 13:13; ''கடல் வளர் புரிவளை புரையுமேனி அடல்வெந் நாஞ்சிற் பனைக் கொடி யோன்'' (புற. 56:3-4). கலப்பையினை ஏந்திய பலராமன் சங்கினை ஒத்த உடல் உடையவன் என்பதும் மேற்கொண்ட வரிகளால் அறியப்படுகின்றது.

**மோகினி அவதாரம் :**

''நல்லமிர்து கலந்த நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை''யளாகிய மோகினி அவதாரம் எடுத்த திருமாலுக்குத் திருஓண நாள் விருப்பமான நாளாம். இதனை மதுரைக்காஞ்சி ''கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார் மாயோன் மேய ஓணநன்னாள்'' எனப் பேசுகின்றது.

**பாரதம்:**

துரியன் அரக்கில் கட்டிப் புதுமனை புகுவிழாவிற்கு வந்த பாண்டவர்களை அவண் தங்க வைத்துத் தீமூட்டி அழிக்க நினைத்து நெருப்பூட்டினான். அப்பொழுது வீமன் தாயுள்ளிட்ட அய்வரையும் காப்பாற்றினான். இவ்வரலாற்றினை அடியிற்கண்ட வரிகளால் அறியலாம்:-

1. ''வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால் அய்வர் என்றுலகு ஏத்தும் அரசர்கள் அகத்தராக் கைபுனை அரக்கில்லைக் கதழ் எரி சூழ்ந்தாங்கு'' (கலி: 25:1-4).

2. ''ஒள்ளுரு அரக்கில்லை வளிமகன் உடைத்துத் தன் உள்ளத்துக் கிளைகளொடு உயப் புகுவான்'' (கலி:25-7-8).

காண்டவ வனத்தினை அருச்சுனன் அழித்தான். இவன் அண்ணன் பீமன். பீமன் நன்கு சமைக்கத் தெரிந்தவனாம். இச்செய்தி கூறும் சிறுபாணாற்றுப் படை வரிகள் இதோ: ''காவெரி ஊட்டிய கவர்கணைத் தூணிப்பூவிரி கச்சைப் புகழோன் தன்முன் பனிவரை மார்பன்பயந்த நுண்பொருள்பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்'' (238-241).

அய்வர்க்கும் நூற்றுவர்க்கும் போர் மூண்டதாம். போரில் ஈடுபட்டவருக்கு ஏற்றத்தாழ்வின்றி, இவரவர் என்ற எண்ணமின்றிச் சோறளித்தவன் நம் தமிழரசன் எனில், தமிழர் வாழ்ந்த காலப் பழமை அறிய முடிகிறதல்லவா! அவ்வரசனைப், பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனைப், புறம் புகழும் பாங்கு இதோ!. ''அலங்குளைப் புரவி அய்வரோடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட பொலம் பூந்தும்பை, ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப் பெருஞ் சோற்றுமிகு பதம் வரையாது கொடுத்தோய்''.

''புரிபு மேற்சென்ற நூற்றுவர் மடங்கவரிப் புனை வல்வில் ஐவரட்ட பொருகளம்'' (கலி 104-57:59) அஞ்சத்தக்கதாகத் தானே இருந்திருக்கும். வென்றாலும் அய்வரின் சினம் அடங்கவில்லை - என்கின்றது பெரும்பாணாற்றுப்படை. ''ஈரைம் பதின்மரும் பொருது களத்து அவியப் பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர் ஆராச் செருவின் அய்வர்''

திரௌபதியின் கூந்தலைக் கைந்நீட்டித் தொட்டு இழுத்தான் துரியன். அதுபொழுது துரியனை அழிப்பதாக வஞ்சினம் கூறினான் பீமன். அவ்வஞ்சினத்தைத் துரியோதனனின் தொடையைக் கிழித்துப் போரின் முடிவில் முடித்துக்கொண்டான் பீமன். இது குறித்த வரிகள் இதோ!

1. அஞ்சீர் அசையியல் கூந்தல் கைந் நீட்டியான் நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன் வஞ்சினம் வாய்த்தான். (கலி:11:18-20)

2. மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக் குறங்கு அறுத்திடுவான் (கலி 52:2:-3).

**கர்ணன் :**

செஞ்சோற்றுக் கடன்கழித்த கர்ணன், ''ஞாயிற்றுப் புத்தேள் மகன்'' எனக் கலித்தொகை கூறுவதால் சூரியனின் மகன் என அறியலாம்.

**அர்ச்சனை :**

ஆம். தமிழ் மொழியில் இறைவன் பெயர்களைப் போற்றி வழுத்தினர். திருமாலைப் பரிபாடல் என்னும் நூல் அர்ச்சிக்கிறது எனலாம்.

''செங்கட்காரி! கருங்கண்வெள்ளை! பொன் கட்பச்சை! பைங்கண் மாஅல்!'' உரையாசிரியரும் இதனை அழகுபட விளக்கினார். ''வாசுதேவனே! சங்கருடணனே! சிவந்த உடல் உடைய காமனே! பிரத்யும்நனே! பசிய உடல் உடைய அநிருத்தனே!''.

**முடிப்புரை :**

நம் தண்டமிழ்ப் புலவர்கள் புராணக் கருத்துக்களை உவமையாகப பல இடங்களில் கையாண்டுள்ளனர். பொதுமக்கட்கு நன்கு உள்ளத்துப் பதிந்த பொருள்கள்தாம் புலவர்களால் உவமைகளாகக் கையாளப்படும் என்பது கண்கூடு. பழந்தமிழர் தம் இறையுணர் வாழ்வியலை அறிந்து, மொழியின் பெருமையினையும் மக்களின் சிறப்பினையும் எடுத்துக்காட்டும் இலக்கியங்களை, இந்துமத உணர்வுடன் ஆய்ந்து, மொழிவழிப் பண்டைப் பெருமையினை உணர்ந்து, நம் வாழ்வு சிறக்க முயலுவோமாக!

**

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

வாழப் பெறுவான்; அதுபோல ஆறுகோடி மாயா சக்திகள் வேறுவேறு தம் மாயைகள் தொடங்கினும், ஆருயிர்கள் அனைத்துமே என்றேனும் ஒருநாள் மாயாசக்திகளைப் புறங் கண்டு, திருவருட்டிறனை உணர்ந்து போற்றி, அதனுடைய ''பேரா-ஒழியா-பிரிவில்லா-மறவா-நினையா-மாளா-இன்ப-மாகடலில்'' (திருவா-488) படிந்து திளைத்து வாழ்தல் திண்ணம் என்பது, இப் பகுதியின் சீரிய தெய்விக நுட்பத் தெளிபொருள் ஆகும். ஆதலின், இது குறித்துச் 'சிறியன சிந்தியாமல்', இதன் கருத்துத்தொகுப்புச் சுருக்கத்தினை மட்டும், நாம் இங்குக் கண்டு பயன் கொள்ளுவோம்.

**கருத்துச் சுருக்கம் :**

**கண்டோர்:** அரவைக் கச்சாகவும் உடுத்து, அணியாகவும் அணிந்த சிவபிரானின் தில்லையின்கண் வாழும் தலைவன், இவ்வீதியில் வந்தான். அதுபோது தம் கைகளில் அணிந்த வளையல்கள் ஒலிக்க, இள மயிலின் எழிலை உடைய பரத்தை மகளிர், தமது கரிய புருவமாகிய வில்லில், கண்மலர் ஆகிய அம்பைச் சேர்த்து எய்து, தலைவனைச் சூழ்ந்து சுற்றிப் பற்றிக் கொண்டனர். இங்ஙனம் இத்தலைவன், பரத்தை மகளிரால் சூழ்ந்து சுற்றிப் பற்றிக் கொள்ளப் பெற்றமை, இவனது காதலியாகிய தலைவியின் பால் எத்தகைய விளைவுகளை நிகழச் செய்யுமோ?

[''அணியினும் கையினும் உளவாகிய சங்குகள் ஒலிக்க, இளமையான் உண்டாகிய மன எழுச்சி மிக்கு, வில்லோடு அம்பைஎடுத்துப் பற்றி, அரையின்கண் அணிந்த உடை வாளையுடைய இளைய போர் வீரர்கள், திசைமுழுவதும் சூழ்ந்து தலைவனைப் பற்றினர்'' என்று, வீரரையும் பரத்தையரையும் ஒருங்கே குறிக்கும் வகையில், சிலேடை அணி பொருந்த, வேறு ஒரு பொருளும் இதன்கண் அமைந்து தோன்றுதல், இங்கு அறிந்து மகிழற்பாலது] (352)

**தோழி:** நீர் வளம்மிகுந்து, கரும்புகள் ஓங்கி வளரும் செழிப்பு மிக்க, ஊரை உடைய தலைவன், தலைவியோடு கலந்து மகிழ்ந்து இன்புற்றிருந்தும், அவளை விட்டுப் பிரிந்து பரத்தையர் பாற் சென்றனனே என்று நினைப்பதனால், என்னுடைய கண்ணில் உள்ள கருமணிகளும், பயனின்மையால் தாங்குதற்கு அரிய பாரம் ஆகா நின்றன; என்னுடைய உயிரும் தேய்ந்து சிதைந்து அழியா நிற்கின்றது. இவ்வாறு யான் கலங்கி வருந்தவும், வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரை அணிந்த சிவபிரானின் புலியூரிலுள்ள, நுண்ணிய இடையை உடைய எம் தலைவியோ, ஒரு சிறிதும் கலங்காமல், மிகவும் பெரிய பொறுமை உடையவளாக விளங்குகின்றாள். அவளுடைய பெருமையினை, யான் எவ்வாறு புகழ்ந்து பேசவல்லேன்? (353)

**தலைவி :** கங்கை நதியைச் சடையில் அணிந்த சிவபிரானின் தில்லையை, மன மொழி மெய்களால் அணுகாத பாவிகளைப் போல, ஒரு சிறிதும் கண்ணோட்டம் இன்றித் தலைவர் என் எழில் நலத்தைக் கவர்ந்துகொண்டு பிரிந்து சென்றார். அதனால் யான் அகத்தும் புறத்தும் மிக்க வெப்பத்தையுற்று, வேறு துணையின்மையால் மெல்லிய அணையே துணையாக அமைய, மிகவும் கொடிய பெருமூச்சு விட்டு வருந்திக் கொண்டுள்ளேன். சிமிழ் போலும் தனங்களை உடைய மகளிருள், யான் அல்லது இங்ஙனம் தலைவனால் ஆருயிர் தேய்ந்து வருந்துவார், வேறு பிறர் உளரோ?

[இச்செய்யுள், தனது பொறுமைத் தன்மையைப் புகழ்ந்துரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாக, 'தலைவனைப் பிரிந்து என்னைப் போல உயிர் தேய்பவர், இனியாவரோ?' என்று, பொதுப்படப் பரத்தையர்க்கு இரங்குவாள் போன்று, தலைவி தலைவனது கொடுமை கூறி வருந்துதலை யுணர்த்தி்ற்று] (354)

**தலைவி:** நற்பண்புகள் நிறைந்த தோழியே! மலர் தூவிய படுக்கையின்கண், தலைவன் தனது மாலை அணிந்த மார்பினால், கனவில் என்னைத் தழுவினான். அவனோடு சேராமையினால், யான் மேலும் தனிமையுற்று, நனவு நிலை என்று மயங்கி, அவனது தவறுகளை நினைந்து, யான் தலைவனைப் புல்லி அணைக்க மறுத்தேன். அது மட்டுமேயன்றி, அந்நிலையில் பாவியேனாகிய யான், கனவு நிலையில் இருந்து விழித்துக் கொள்ளவும் செய்தேன். தேவரும் அசுரரும் பணிந்து வணங்கும் சிவபிரானின் தில்லையைச் சேராத பாவிகள், இன்பம் இழப்பதோடு துன்பமும் உறுவதுபோல, யானும் நனவு நிலையில் தலைவனைக்கூடி நுகரும் இன்பத்தை இழந்ததுடன், உறங்குங்காற் கனவுகண்டு அவனை எய்தும் இன்பத்தையும் கூட இழந்து, பெரிதும் வருந்துகின்றேன். (355)

**தலைவி:** நெய்யைப் பருகி, இருளை ஒழிக்கின்ற, நெடிய நல்ல விளக்கே! வயல்களில் நீலப் பூக்கள் மலர்கின்ற தில்லையில் உள்ள, சிற்றம்பலவனின் கழல்களைக் கைகுவித்துப் பணியாத பாவிகளைப்போல, உண்மையும் கண்ணோட்டமும் இல்லாமல், பொய்யாக முகத்தால் போலி அன்பைக் காட்டி, நம்பியிருப்பவர்களை வஞ்சகம் செய்து நீங்குதல் முறையன்று என்று, நீயும்கூட எம்மைக் கலந்து பிரிந்த எம் தலைவருக்குத் தக்க அறிவுரைகள் கூறாது ஒழிந்தனையே! கூறியிருந்தால், தலைவர் எம்மை விட்டுப் பிரிந்திருப்பாரோ?

[''நெய்ம்முகம் மாந்தி, இருள்முகம் கிழும் நெடுஞ்சுடர்'' என்றது, 'நெடிய விளக்கே! நீ நெய்யாகிய சிறந்த உணவைநிரம்ப உண்டு, அதனால் ஒளியும் வனப்பும் மிக்க மேனியினைப் பெற்று, பகைசெருக்கும் வலிமையும் பெருமையும் உற்று, அக்களிப்பின் மிகுதியால் மயங்கி அயர்ந்திருந்து கூறாதொழிந்தனை' போலும்! என்னும் குறிப்புப் பொருளினை உட்கொண்டுள்ளது.] (356)

தலைவி: பகைவர்களின் முப்புரங்களை அழித்த, மேரு மலையாகிய வில்லை உடைய சிவபிரானின், தில்லைநகர்க்கு அயலாகிய இடங்களில் வாழும் பரத்தை மகளிர்க்கு, யான் என் தலைவனை, எல்லா உரிமைகளுடனும் அனுபவித்துக் கொள்ளுதற்குரிய முற்றூட்டுப் பொருளாக, வழங்கிவிட்டேன். ஆதலின் தலைவனது பெரிய குவளைப் பூமாலையையும், அதனை அணிந்த பொன்மலை போலும் அவனதுதோள் இணைகளையும், தத்தம் இல்லங்களில் வளைத்து வைத்துக்கொண்டு, விரும்புபவர்கள் யாராயினும் அனுபவித்துக் கொள்வார்களாக! தோழியே! பரத்தையரிற் பிரிந்து வந்து, தலைமகன் நம் வாயிலின்கண் வந்து நிற்பினும், அவன் பொருட்டு நீ என்பால் வந்து வாயில்நேர்விக்க (ஊடல் தணிவித்து ஒன்றுபடுத்திவைக்க) முயற்சி செய்தல் வேண்டா! (357)

தலைவி: உலகத்திலுள்ளார் எல்லார்க்கும் தந்தையாகிய அத்தனும், இயல்பாகவே பாசங்களில் நீங்கிய முத்தனும், எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்கின்ற சித்தனும், ஆகிய சிவபிரானின் அருள்நிறைந்த தில்லைக்கு உரிய தலைவனே! நின்னை இடைவிடாதுகூடி இன்பம் நுகர்தற்கு முற்பிறப்பில் தவஞ்செய்யாத கொடிய தீவினையை உடைய யான், என்னையே நொந்துகொள்ளுவது அல்லது, இப்பொழுது இனி நின்னை நொந்து கொள்வதனால் யாது பயன்? இது கிடக்க. நின்னுடைய பரத்தையர்கள் நின்பால் புதிதாகச் செய்த போலி அன்புப் புல்லுதல்களை, யான் செய்ய வல்லேன் அல்லேன். ஆதலின், எனது ஆடையணிகளை நீ இனி தொடுதல் வேண்டா; விடுத்துச் செல்க! (358)

இல்லத்தார்: தம்முள் பகைமை கொண்ட அரவையும் பிறையையும், தனக்கு அணியாகக் கொண்ட சிவபிரானின் தில்லையில், இத்தலைவியின் பழைய தோழியர் கூட்டமாகிய ஆயத்தின் நல்லார்கள் முன்னே, அரவு போலத் தோன்றி நுடங்கும் இடையை உடைய பரத்தையரின் வீடுகளில், வளர்ந்து பருத்த தன் கொங்கைகளைத் தாங்கி வருத்தும் இடையை உடைய தலைவியானவள் வருந்தும்படி, இப்பேதையாகிய தோழிப்பெண், இன்று சென்று தலைவி பூப்பெய்திய செய்தியினைத் தலைவன்பால் அறிவித்தற்கு முயல்கின்றாள். இச்செயல் பெரிதும் இளிவரவு உடையது ஆகும்.

[தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையர் வீட்டிற்குச் சென்று, சில நாள் தங்கி இன்புற்றிருப்பான். அதுபோது தலைவியின் இல்லத்துள்ளோர், தலைவி பூப்பெய்திய செய்தியினைத் தலைவன் அறிந்துகொள்ளுதற் பொருட்டு, அவளுடைய தோழியர் சிலரைச் சிவந்த பூச் சூட்டி, சிவந்த ஆடை உடுத்திச், சிவந்த சாந்து பூசிச், சிவந்த அணிகள் அணிவித்து, அவன் தங்கி இருக்கும் பரத்தையர் வீடுகளுள்ள தெருக்களில் சென்று வருமாறு, அனுப்பி வைப்பர். தலைவன் அவர்களைக்கண்டு, தலைவி பூப்பெய்தி இருத்தலைக் குறிப்பால் உணர்ந்து, தலைவியின் இல்லத்திற்குத் திரும்புவான். பூப்பெய்திய நாளில் இருந்து மூன்று நாள் கழித்து, நான்காம் நாள் முதல் பன்னிரண்டு நாள் காறும், கருவுறும் காலம் ஆதலால், தலைவன் தலைவியைப் பிரிந்திருத்தலாகாது என்பது, நம் பண்டையோர் கண்ட சமுதாய ஒழுகலாற்று நெறி.

''பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்''

என்னும் தொல்காப்பிய நூற்பா, தலைவி பூப்பெய்திய நாள்முதல் 12 நாட்கள் வரையில், தலைவன் தலைவியை விட்டு நீங்காமல் உடனிருந்து உறைதல் வேண்டும் என்பதனை வலியுறுத்தி யுணர்த்தும்.] (359)

தலைவி: பிறை போலும் நுதலைஉடைய, இளைய அழகிய பரத்தைப் பெண்களின் முன்னே, செவ்வணியாகிய கோலத்தைச்செய்து, குரவமலர் சூடிய கூந்தலை உடைய இப்பெண்ணின் மூலமாக, யான் பூப்பெய்திய செய்தியினை அறிவித்து, சிவபிரானின் தில்லைக்கண் உள்ள ஊரனாகிய தலைவனை, அவ்விடத்தில் உள்ள பரத்தையாகிய இழிதகவினள் ஒருத்தி, அனுமதிதந்து நம்மிடம் அனுப்பிவைக்க, அதன் பின் நாம் நம் தலைவனை அடைந்து அணையும்படியான ஓர் இளிவரவு நிலையினை, நம்முடைய பெண்தன்மை எய்திவிட்டது போலும்! என் ஊழ்வினை இருந்தவாறு என்னே! (360)

பரத்தையின் வாயிலோர்: திருச்சிற்றம்பலவனின் சிவந்த அழகியதாள்களைத் தனது முடிக்கு அணியாக்குகின்ற தலைவனுக்கு, உலகியல் நெறியை அறிவித்தற் பொருட்டு, நமது சிறப்புமிக்க வீட்டின்கண், சிவந்த நிறமுள்ள செவ்விப்பூவும், அழகிய சிவந்த பூவேலைப்பாடு அமைந்த பட்டுடையும், மார்பின்மேல் பூசுதற்குரிய அழகிய செஞ்சாந்தும், தலைவியின் இல்லத்துள்ளாரால் அனுப்பி வைக்கப்பெற்று வந்து சேர்ந்துவிட்டன. இனி உலகியல் அறநெறிக்கு ஓர் இழுக்கு வாராமல், தலைவன் நம் இல்லம்விட்டு நீங்கித், தலைவியின் இல்லத்திற்குச் செல்லுதல் வேண்டும்.

தலைமகளின் வாயிலோர்: களவு நிலையில், முன்பெல்லாம் இரவும் பகலும் வாயில் உள்ளே நுழைதற்குரிய தலைவியின் இசைவைப் பெறாமல், தலைவன் இக் கடைவாயிலின்கண் நம் உதவியைப் பெறுதற்காகப் பெரிதும் பணிந்து ஒழுகிக்காத்துநின்று, வருந்திக் கொண்டிருப்பான். ஆனால் தலைவியை வரைந்து மணந்து கொண்ட இப்பொழுதோ, இங்குச்சிறிதும் நின்று நீட்டித்து வருந்தவேண்டாமல், மிக விரைவில் நுழைந்து இவ்வாயிலைக்கடந்து, உள்ளேயுள்ள தலைவியின் மனைக்கண்புகுகின்றான். குரவம் பூவை அணிந்த கூந்தலை உடைய தலைவி, இவன்பாற் சினந்து ஊடிப் பெரிதும் புலந்து நிற்கின்றாள். இவளைக் காட்டிலும் தம் கணவர்பால் மிகுதியாகப் புலந்து நிற்கும் மகளிரும்கூட மனையறக் கடமை பூண்டபின்னர், தம் புலவி தணிந்து அடங்காதவர் எவர்? மனைக்கடன் பூணுதலால் மகளிர் யாவருமே,

தம்புலவி தணிந்து தலைவனுக்குப் பணிந்தே ஒழுகுவர் போலும்! (362)

கண்டோர் : பரத்தையிற் பிரிந்த தலைமகன், தோழியரின் செவ்வணி கண்டு நம் வாயிலுக்கு வந்துள்ளான் என்று தெரிவிக்கப் புகும் அளவிலேயே, வாள் போன்று கூரிய தலைவியின் கண்கள், சீற்றத்தால் செந்தாமரை மலர்போலச் சிவந்து நின்றன. அந்நிலையில் அவளது புலவி நோக்கத்திற்கு எதிராகத் தலைவன் காதல் நோக்கம் நோக்க, தலைவியின் புலவிதணிந்து, அவளது முகமாகிய பொய்கையில், கண்களாகிய கரிய குவளைப் பூக்கள் விரிவாக மலர்ந்து, தண்ணென்று அழகுற்றுத் திகழ்கின்றன. (363)

உழையர் (தலைவியின் அருகிலிருப்பவர்) : காம உணர்வினை வென்ற அடியார்கள் செய்கின்ற அன்பினை விரும்பி, அவர்களைத் தேடிச் செல்பவனும், தனது கையாகிய மலரின் கண் எரிஏந்தி இருப்போனுமாகிய சிவபிரானின், தில்லையம்பலத்தைச் சூழ்ந்து, மல்லிகையின் மலர் ஆகிய வெண் சங்குகளை, வண்டுகள் ஆகிய பாணர்கள் ஊதுதலானும், அந்தி மாலையில் அழகிய இளம்பிறைச் சந்திரன் வளம் கெழுமத் தோன்றுதலானும், செறிந்த இருள் நிறைந்து பரவுதலாலும், வேற்படை ஏந்திய தலைவன், ஆற்றாமையுற்று, நம்மைத் தேடிக் கொண்டு நம்பால் வந்தடைந்தான்! ஆதலின் தலைவியே! இனி நீ தலைவன்பாற் புலவி கொண்டு சினத்தல் முறையன்று. இனித் தலைவனை வரவேற்று மகிழ்விப்பதே நின் கடமை.

[''வில்லி கைப்போதின் விரும்பா அரும் பாவியர் அன்பிற் செல்லி'' எனவரும் வரிக்குக் ''காமனின் கையில் உள்ள அம்பு ஆகிய பூக்களினால் காம விருப்பத்தினை எய்தாமல், அதனைவென்று அடக்கிய அரிய குறிப்பினையுடைய அடியவர்கள் தனக்குச் செய்கின்ற அன்பினை விரும்பி, அவர்களைத் தேடிச் செல்வோன்'' என்று, பேராசிரியர் வரைந்துள்ள உரை, மிக்க நுட்பமும் நயமும் பொருந்தியது.

காம தேவன், தேவர்கள்மேல் எய்ய அரும்பு வில்லும், மக்கள்மேல் எய்யக் கரும்பு வில்லும், அரக்கர்மேல் எய்ய இரும்புவில்லும் வைத்திருக்கின்றான் என நூல்கள் கூறுதலால், பொதுவாக அவனை இங்கு 'வில்லி' (வில்லையுடையவன்) என்றார். 'பாவியர்' என்றது இங்குத் தீவினையாளர் என்ற பொருளில் வராமல், 'பாவம்-பாவனை' என்னும் சொற்களின் அடிப்படையில் 'குறிப்பையுடையவர்கள்' என்னும் பொருளில் வந்தது. அரும் பாவியர்-அரிய குறிப்பை உடையவர்கள். செல்லி-செல்லுபவன்; அன்பிற் செல்லி-அடியவர்களின் அன்பை விரும்பித் தேடிச் செல்பவன்; சிவபெருமான்] (364)

—தொடரும்

---

# திருவாலி திருநகரி, அருள்மிகு கல்யாண ரங்கநாதசுவாமி திருக்கோயில்

## (திருமங்கையாழ்வார் அவதாரத்தலம்)

## திருப்பணி வேண்டுகோள் !

நம் பண்பாடும், பத்திச் சீர்மையும், நம் திருக் கோயில்களே! புகழ்மிக்க வைணவத்தில் பொற்கோயில்கள் பல சமைத்துத் திருமால் அருளால் 'அருள்மாரி' ஆனதவர் திருமங்கை ஆழ்வார். அவர் பிறந்தருளிய இடம் இத்திருத்தலமே.

எங்கும் நிறைந்தொளிர்கின்ற எம்பெருமான் எய்துமவர்க்கு, இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் ''எளிது'' என்று எண்ணி, பலப்பல திருக்கோயில்களில் தங்கியருள்கின்றார். அவ்வாறு இங்கே கல்யாண ரங்கநாதராகக் கனிந்தருள்கின்றார்.

இங்கே நடக்கும் ,திருமங்கை ஆழ்வார் அவதாரப் பெருவிழாவும் (கார்த்திகை); புகழ்மிக்க 11 கருடசேவை உற்சவமும் (தைமாதம் );பங்குனியில் நடக்கும் திருவேடுபறியும் பல்லாயிரவரை இத்தலத்திற்கு ஈர்க்கின்றன.

இவ்வாறு புகழ்மிகக்கொண்ட இப்பெருங்கோயில், காலத்தால் மிகவும் பழுதுற்றிருக்கிறது. திருமங்கை மன்னனுக்கு மிகவும் உவப்பானதும், அவர் பாடல்களில் பாடி மகிழ்வதும், திருமதிள் திருப்பணியும், இராச கோபுரத் திருப்பணியும் ஆகும். இராச கோபுரத் திருப்பணி, பெருந்திருப்பணியாகும். இப்பணியை நிறைவு செய்ய மூன்று இலட்ச ரூபாய்கள் தேவைப்படுகின்றன. நம் முன்னோர் நமக்குத் தந்த கலைச் செல்வத்தை, நம் பரம்பரையினருக்குக் காப்பாற்றிக் கொடுத்தல் நம் கடமையல்லவா? ஆதலின் இதைக் கண்ணுறும் அன்பர்கள், இத்திருக்கோயில் திருப்பணிக்குத் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

—திருப்பணிக் குழுவினர்

# சப்த விடங்கத் தலங்களும், நடனங்களும்

முன்னொரு காலத்தில் சோழ நாட்டை முசுகுந்தசோழர் என்னும் பேரரசர், திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்து வந்தார். ஒருசமயம் தேவருலகத்தில் இந்திரனுக்கு அசுரர்களால் இடர் நேர்ந்த பொழுது, இந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்கி, முசுகுந்தர் தேவருலகின் தலைநகராகிய அமராவதிக்குச் சென்று, இந்திரனுக்குத் துணைபுரிந்து, அமராவதி நகரத்தினைக்காவல் புரிந்து காத்தளித்தார் என்று, இவரைப்பற்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் புகழ்ந்து கூறுகின்றன. முசுகுந்தரின் உதவிக்குப் பெரிதும் மகிழ்ந்து, இந்திரன் முசுகுந்தர்பால் மிகவும் அன்பு கொண்டான்; மிக்க நன்றி பாராட்டினான்; ''சோழப் பெரு வேந்தரே! எனக்கு நீர் காலத்தினாற் செய்த பெருதவி குறித்து, என் நன்றியுணர்வைப் புலப்படுத்திக் கொள்ளும் வகையில், நுமக்கு யான் எதனையேனும் சிறந்ததொரு பொருளைத்தர விரும்புகின்றேன். அருள்கூர்ந்து, என்னிடம் நீர் எதனையேனும் என் அன்புக்கு அறிகுறியாகப் பெற்றுக் கொண்டு, என்னை மகிழ்வித்தருள்க'' என்று இந்திரன் பெரிதும் வேண்டிக் கொண்டான்.

எதனையும் பிறர்க்குக் கொடுத்துப் பழக்கப்பட்டதேயன்றி, யாரிடமும் எதனையும் கேட்டுப் பெறும் இயல்பு இல்லாத பெருந்தகையாளராகிய முசுகுந்தச் சோழர், இந்திரனின் வேண்டுகோள் குறித்துச் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தார். ''அய்யா! நும்மிடம் யான் என் உதவிக்காகக் கைம்மாறு எதுவும் பெற விரும்பவில்லை. ஆயினும் நீர் பெரிதும் வற்புறுத்துவதனால் ஒன்றைப் பெறக் கருதுகின்றேன். நீர் வழிபாடு செய்துவரும் தியாகராசப் பெருமானின் திருவுருவத்தை எனக்கு அளித்தால், அதனை யான் எங்கள் நகரத்திற்குக் கொண்டு சென்று நிறுவி வழிபட்டு மகிழ்வேன்'' என்றார். முசுகுந்தரின் இவ்வேண்டுகோளை இந்திரன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதனால் திடுக்கிட்டான். சொல்லிய சொல்லை மாற்றவோ, இல்லை என்று மறுக்கவோ, இந்திரனால் இயலவில்லை. அதனால் தான் வழிபடும் தியாகராசப் பெருமானின் திருவுருவத்தைப் போன்றே, வேறொரு புதிய திருவுருவத்தைத் தன் மன நினைவினால் படைத்து, அதனை இந்திரன் முசுகுந்தச் சோழருக்குக் கொடுக்க முற்பட்டான். முசுகுந்தர் பேரறிவும் நுண்ணுணர்வும் உடையவர் ஆதலின், இது தியாகராசரின் உண்மைத் திருவுருவமன்று என்று உணர்ந்து, அதனைப் பெற மறுத்து, இந்திரனின் பூசையிலுள்ள உண்மைத் தியாகராசரின் திருவுருவத்தையே வற்புறுத்திக் கேட்டார். தான் வழிபடும் தியாகராசரின் திருவுருவத்தைக் கொடுக்கத் தயங்கிய இந்திரன், இவ்வாறே மீண்டும் புதிய திருவுருவத்தைப் படைத்துக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு முசுகுந்தரை வற்புறுத்தி, முயன்று பார்த்தான். அறிவாற்றல் மிக்க முசுகுந்தர் அவற்றை ஏற்க மறுத்து, உண்மைத் திருவுருவத்தையே வழங்குமாறு வேண்டிக் கொண்டார். இந்திரன் முசுகுந்தரின் நுண்ணுணர்வுத் திறனை வியந்து பாராட்டி, தான் தன் மனநினைவாற் படைத்த தியாகராசர் திருவுருவங்கள் ஆறனோடு, ஏழாவதாக உண்மைத் தியாகராசர் திருவுருவத்தையும் ஒருசேரச் சேர்த்தளித்து, முசுகுந்தரைப் போற்றிப் பாராட்டி வழியனுப்பி வைத்தான்.

தேவர் உலகினின்று கொணர்ந்த தியாகராசர் திருவுருவங்கள் ஏழினையும், முசுகுந்தச் சோழர் தன் தலைநகராகிய திருவாரூரிலும், அதனைச் சூழ்ந்துள்ள வேறு பிற ஆறு தலங்களிலும் நிறுவி வழிபட்டு மகிழ்ந்தார். திருவாரூரும், அதனைச் சூழ்ந்துள்ள பிற ஆறுதலங்களும், சப்தவிடங்கத் தலங்கள் என்று வழங்கி வருகின்றன. சிறந்த இந்த ஏழு விடங்கத் தலங்களும், நமது தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில், திருவாரூரைச் சுற்றிச் சூழ்ந்து மிக மிக அருகில் அமைந்து விளங்குகின்றன. இந்தத் தலங்கள் ஏழிலும் எழுந்தருளியிருக்கும் இறைவருக்குத் தியாகராசர் என்பதே பொதுப் பெயராயினும், தனித்தனியே சிறப்புப் பெயர்கள் உண்டு.

| | தலத்தின்பெயர் | தியாகராசர்பெயர் | நடனத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் | வீதிவிடங்கர் | அசபா நடனம். (பாற் கடலில் பள்ளி கொண்டுள்ள திருமால், தம் இருதயத்தில் தியாகராசரை வைத்து அன்புடன் பூசித்துத் தியானித்துக் கொண்டு, அசபா என்ற மந்திரத்தை மெல்லென ஓதிக்கொண்டு, தம்முடைய உசுவாசம், நிசுவாசம் என்னும்மூச்சுக் காற்றினால், தியாகராசப் பெருமானின் திருஊசலை ஆட்டுவித்து வழிபடுவது போன்று அமைந்த ஒருவகை நடனம்) |
| 2. | திருநள்ளாறு | நகவிடங்கர் | உன்மத்த நடனம் (பித்துக் கொண்டவன் ஆவேசமுற்று ஆடுவது போன்றது. உன்மத்தன்-பைத்தியக்காரன்) |
| 3. | திருநாகைக்காரோணம் (நாகப்பட்டினம்) | சுந்தரவிடங்கர் | பாராவார தரங்க நடனம் (கடலின் அலை போல் மேலே உயர எழுந்தும் கீழே தாழவிழுந்தும் ஆடுவது. பாராவாரம்-கடல். தரங்க-ம்அலை.) |
| 4. | திருக்காறாயில் (திருக்காரவாசல்) | ஆதிவிடங்கர் | குக்குட நடனம் (கோழி போன்று வளைந்து சுற்றி ஆடுவது. குக்குடம்-கோழி). |
| 5. | திருக்கோளிலி (திருக்குவளை) | அவனிவிடங்கர் | பிருங்க நடனம் (வண்டு மலருக்குள் சென்று படிந்து குடைவது போல ஆடுவது. பிருங்கம்-வண்டு) |
| 6. | திருவாய்மூர் | நீலவிடங்கர் | கமல நடனம் (தாமரை மலர் மொட்டாக இருந்து சிறிது சிறிதாக விரிந்து வட்டமாக மலர்வது போல ஆடுவது. கமலம்-தாமரை). |
| 7. | திருமறைக்காடு (வேதாரண்யம்) | புவனிவிடங்கர் | அம்சபாத நடனம் (அன்னம் நடப்பது போல மிக அழகாகவும் நளினமாகவும் ஆடுவது. அம்சம்-அன்னம். பாதம்-கால்). |

R. R...
By Commissioner H.R.&C.E.
(Retired)
HR&CE Administration Dept

சைவ சமயத்தில், தில்லை நடராசர் நடனக் கலைக்குரிய அதிதெய்வம். அதேபோலத் திருவாரூர்த் தியாகராசரும் ஒருவகையில் நடனத்துக்குரிய அதி தெய்வமாவார். ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போலச் சிவபரம்பொருள் ஒன்றே, தில்லை நடராசராகவும், திருவாரூர்த் தியாகராசராகவும் விளங்குகின்றது. நடராசர் நின்று ஆடும் அழகர்; தியாகராசர் இருந்து ஆடும் அழகர், என்று பெரியோர்கள் கூறுவர். தமிழக நடனக் கலையின் சிறப்பும், அருங்கலையார்வமும், சிறந்துயர்ந்த தெய்விக நெறியுணர்வும், இணைந்து, தமிழக மக்களின் கலை நாகரிகப் பண்பாட்டு வாழ்வியல் வளப்ப மாட்சிமை நலங்கள் அனைத்தும், இந்தச் சப்தவிடங்க நடனங்களின் மூலம், தெற்றென விளங்குதல் அறிந்துணர்ந்து, போற்றி அனுபவித்து, ஆனந்தம் அடையத்தக்கதாகும் அவ்வத் தலங்களில் முறையே நிகழும் இந்த நடன வகைகள், நேரிற் கண்டு மகிழத்தக்கவை; நடனக் கலையின் பலவகை நுட்பத் திறங்களை விளக்குபவை. நடனக் கலையில், இயல்இசை என்னும் இரண்டும்கூட இணைந்து இயைந்து ஒன்றி விளங்குகின்றன. ஆதலின், தில்லை நடராசரையும், திருவாரூர்த் தியாகராசரையும், நடனக் கலைக்கு மட்டுமேயன்றி, இயல் இசை நாடகம் என்னும் நம் முத்தமிழ்க்குமே, உரிய அற்புதத் தெய்வங்கள் என்று, நாம் சிறப்புறக் குறிப்பிட்டு மகிழலாம். —ஆசிரியர்.

# இறைவனும் உயிரும்

பேராசிரியர் திரு. டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, M.A., Ph.D.,

சென்னை

RAJU
Dy. Commissioner Hqrs.
(Retired)
HR&CE Administration Dept.

இறைவன், உயிர், தளை என்னும் முப்பொருள் உண்மையைச் சைவ சித்தாந்தம் வற்புறுத்துகிறது. இவற்றுள் முதலிரண்டும் அறிவுடையவை; பின்னது அறிவற்றது. எனவே, இறைவனும் தளையும், உயிரும் தளையும் வேறாயிருக்கக் கூடும். அறிவுப் பொருள்களான இறைவனும் உயிரும், எவ்வாறு வேறுபடலாம்? கட்டுநிலையில் வேறுபடுகின்றன எனினும், வீட்டு நிலையில் அவை ஒன்றேயாயிருப்பதற்குத் தடை யாது? என்னும் கேள்விகள் எழலாம். சைவ சித்தாந்தம் இக் கேள்விகளுக்குக் கூறும் விடையைப் பார்ப்போம்.

இதற்கிடையில், உள்பொருள் ஒன்றே என்னும் மறைமொழி நினைவுக்கு வரலாம். ஒன்று எனில் உயிர்களைப் பன்மையில் எவ்வாறு கொள்ள முடியும்? உள்பொருள் ஒன்றென மறைகள் முழங்குவது உண்மைதான். ஆயின் அவைகள் இறைவன் ஒன்று என்னும் கருத்தில் 'ஒன்று' என்று கூறுகின்றன. மறைகளைப் பின்பற்றி ஒன்று என்று கூறும் உயிர், இறைவனன்று, தளையால் பிணிப்புண்டது. இவ்வாறு பிணிப்புண்ட உயிர்களும் பல. அகரம் என்னும் முதன்மையான எழுத்தையின்றி ஏனைய எழுத்துக்கள் அமையாதவாறு போல, இறைவனையின்றி உயிர்களும் அமையா. இவ்வுண்மையை மெய்கண்டார் மிகத் தெளிவாகப் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

ஒன்றென்ற தொன்றேகாண்; ஒன்றே பதி;
பசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்;-ஒன்
றின்றால்
அக்கரங்கள் இன்றாம் அகர உயிரின்றேல்;
இக்கிரமத் தென்னும் இருக்கு.

இனி, உயிர் தளையுற்றிருப்பது உண்மைதானா? என்னும் கேள்வி எழலாம். அறியாமையால் உயிர் தளையுற்றிருப்பது போலக் கருதிக் கொள்ளக்கூடும். அறியாமை நீங்கினால் தளை இல்லையென்பது தெளிவாகும். உண்மையில் உயிர் தளைப்பட்டிருக்கக்கூடு மெனில், ஒருகால் தளை நீங்கினாலும், மீண்டும் தளை ஏற்படக்கூடும். எனவே, முடிவான உண்மை, உயிர் ஒருபோதும் தளைப்பட்டிருப்பதில்லை என்பதுதான் என்று முடிவு செய்யலாம். ஆனால் இம்முடிவு ஆன்மிக வாழ்விற்குப் பொருந்துவதாக உளதா? என்று பார்க்க வேண்டும்.

மெய்யுணர்வு ஆராய்ச்சியில் ஈடுபடாத வரையில், சிக்கல் ஒன்றுமில்லை. ஆராய்ச்சி தொடங்கிய உடன், பலவகையான சிக்கல்கள் எழுகின்றன. உடலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும், உயிர் உடலன்று என்னும் உண்மை புலப்படுகின்றது. அப்போது உயிரின் வரலாறு யாது? அதன் தன்மை யாது? என்றெல்லாம் கேட்கத் தோன்றுகிறது. தன்னுடைய அறிவும் ஆற்றலும் விருப்பங்களும்தடைபட்டிருப்பதாக, உயிர் உணர்கிறது. ஏதோ ஒருவகையான கறை அல்லது மாசு, தன்னைப் பற்றிக் கொண்டிருப்பதாகவும் உயிர் உணர்கிறது. ''பொத்தின நோயிதனைப் பொருளுணர்ந்தேன். போய்த் தொழுவேன்'' என்று சுந்தரர் கூறுவதை, இங்கே நினைவு கொள்ளலாம். மாசு அல்லது நோய், செயற்கைதான். ஆகையால் இம்மாசு அல்லது கறை அல்லது நோய் நீங்கி, இயற்கை நிலையாகிய தூய்மை அல்லது துன்பமற்ற இன்ப நலத்திற்கு மீளும் வரையில் உயிர் ஓய்வு கொள்வதற்கில்லை. இதற்கான வழிவகைகளை மேற்கொண்டாலும் இறைவன் திருவருளின்றி வெற்றி காண முடியாது. எனவே அவனருளால் தொடங்கப்படும் முயற்சி, அவனருளாலேயே முற்றுப்பெற வேண்டியதாகிறது. இம்முயற்சி கைகூடுவதற்குப் பல பிறவிகள் தேவைப்படலாம். இவ்வுண்மைகள் அனைத்தும் வெறும் அறிவுவழி நின்று பெறக்கூடியவை அல்ல. இறைவனருளால் மட்டுமே விளங்கக் கூடியவை; இறைவன் அருளால் சமயச் சான்றோர்களுக்குப் புலப்பட்டவை. எனவேதான், அருணந்திசிவம் மறைகளாலும் உள்ளத்தாலும் லும் உரையாலும் இறைவனை உணரமுடியாது என்று கூறியபின், இறைவனருள் வாய்க்குமானால் இவற்றாலும் அவனை உணரமுடியும் என்கிறார்.

மாசு நீங்கித் தூய்மை அடைந்த உயிர், தன் இயற்கைநிலை மாசற்றதென்பதற்காக, மாசு படிந்திருந்த செய்ற்கை நிலையை மறைப்பதோ-மறுப்பதோ-மறப்பதோ, ஆன்மிக வரலாற்றுக்குப் பொருந்தாத செயலாகும். இறைவனருளின்றி அது மீண்டும் தன் இயற்கையான தூய்மையை அடைந்திருக்க முடியாது. அதனால்தான், உயிரானது இறைவனின் அருளினால் தான் பெற்ற நன்மையை மறப்பது, அவ்வுயிர்க்கு உய்தியில்லாத பிழையாகும் என்று மெய்கண்டார் வற்புறுத்துகிறார்.

இனி, அறிவுப் பொருள்களாயினும் இறைவனும் உயிரும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதற்கு அருணந்திசிவம் தரும் விளக்கம் இருள் மருள் ஆகிய நிலைகளிலிருந்து அருள்நிலைக்கு உயிர் செல்லும் ஆன்மிக வளர்ச்சியை மையமாகக் கொண்டுள்ளது.

உயிர் அறிவுடைய பொருளெனினும் அருளை நாடி நிற்பது, பிறப்பு இறப்புக்களில் படிவது, அறிவித்தால் அறிவது. ஆதலின் இறைவனும் உயிரும் அணைந்தாலும் அவை ஒரே பொருளாய் விடாமல் தம்முள் நெருங்கிய தொடர்புடையனவாக இருப்பவை. இத் தொடர்பு பிரிக்கமுடியாதது. கட்டுநிலையில் உயிர் இதனை உணர்வதில்லை. கட்டு நீங்கிய உடன் உயிர் எதையும் யாரையும் இறைவனாகவே பார்க்கிறது. 'பரமே பார்த்திருப்பர், பதார்த்தங்கள் பாரார்' என்பது அருணந்தி சிவத்தின் வாக்கு.

''சிவன்சீவன் என்றிரண்டும் சித்து,ஒன்ரும் என்னில்
சிவன்அருட்சித்து, இவன்அருளைச் சேரும்சித்து அவன்தான்;
பவம்கேடு புத்திமுத்தி பண்ணும்சித்து, அவற்றிற் படியும்சித்து, அறிவிக்கப் படும்சித்தும் இவன் தான்;
அவன்தானே அறியும்சித்து; ஆதலினல் இரண்டும் அணைந்தாலும் ஒன்ருகாது; அநந்நியமாய் இருக்கும்;
இவன்தானும், புத்தியும்சித்து; இவன்ஆமோ புத்தி?
இதுஅசித்து என்றிடில், அவனுக்கு இவனும் அசித்து ஆமே!''

—சிவஞான சித்தியார்

அத்வைதம். என்னும் சொல்லுக்குச் சிவஞானமுனிவர் 'வேறன்மை' என்று அன்மைப் பொருள் கொள்வதைப்போல, 'அநந்நியம்' என்பதையும் வேறன்மையாகவே கொள்ளுதல் ஏற்புடைத்து.

---

# சிலப்பதிகாரம் அளிக்கும் ஞானச்செய்தி

சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் பெருங் காப்பியத்தினை, மூன்று காண்டங்களாகவும், முப்பது காதைகளாகவும் வகுத்து, ஓர் அழகிய கலைக் கோயிலாக அமைத்தருளிய இளங்கோவடிகள், அந் நூலின் தொடக்கத்திற் போலவே, அதன் முடிவிலும்கூட, உலக மக்களுக்கு நலம் விளைவிக்கும் உயரிய சிறந்த உபதேசங்கள் பலவற்றைச் செய்கிறார். பின்னரே, தமது காப்பிய நூலினை நிறைவு பெறுத்துகின்றார். அவ்வுபதேசங்கள், தமது காப்பியத்தின் பயனாகிய கருப்பொருளாக விளங்கும் வகையிலும், உலகத்திற்குத் தாம் அளிக்கும் ஞானச்செய்தி (Spiritual Special Message) எனத் தக்கவாறு திகழும் வண்ணமும், அவரால் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

''இதுவரையில் சிலப்பதிகாரம் என்னும் இச் செந்தமிழ்க் காப்பியத்தின்கண், யாம் கூறிவந்த செய்திகளையெல்லாம் தெளிவுறக் கேட்டுவந்த திருத்தகவு உடைய நல்லோர்களே! இதுகாறும் எம்முடைய இந்நூற் பொருளைக் கேட்டதன் பயனாக, நீவிர் இனிமேற் பிறர்க்குக் கவலையும் துன்பமும் விளைவித்தலை விட்டொழியுங்கள்! கடவுள் உண்டு என்று நம்புங்கள். கடவுளை உணர்ந்த பெரியோர்களை விரும்புங்கள்''.

''பொய் கூறுவதற்கு அஞ்சுங்கள். பிறர்மேற் புறங்கூறுதலைக் கைவிடுங்கள். ஊன் உண்ணுதலை விலக்குங்கள். தவவொழுக்கங்கள் பலவும் மேற்கொள்ளுங்கள். பிறர் செய்த உதவியை மறவாதிருங்கள். தீயவர்களின் தொடர்பினை இகழ்ந்து ஒதுக்குங்கள். பொருள் நிறைந்த அறிவுரைகளை இகழாது ஏற்றுக் கடைப் பிடித்து ஒழுகுங்கள். அறநெறியிற் செல்லும் சான்றோர்களின் திருக்கூட்டத்திற்கு இடைவிடாமற் சென்று பழகுங்கள். மறநெறியிற் சென்று திரியும் தீயவர்களின் தொடர்பினின்று விடுபட்டுத் தப்பிஓடி உய்ய முயலுங்கள். பிறர் மனைவியை நெருப்பெனநினைத்து அஞ்சுங்கள். துன்புற்று வருந்தும் உயிர்களைக் காப்பாற்றுங்கள். இல்லறக் கடமைகளைத் தவறாது போற்றி ஆற்றுங்கள். பாவச் செயல்களைக் கடிந்து நீக்கிவிடுங்கள். கள்ளும் களவும் காமமும் பொய்யும் ஆகிய குற்றங்களைக் கைவிடுங்கள். அறிவிலிகள் ஆகிய வீணர்களின் தொடர்பை அறவே ஒழித்துவிடுங்கள்''.

''இவ்வுலகத்தில் நம்முடைய இளமையும், செல்வமும், யாக்கையும், ஒரு சிறிதும் நிலையுடையன அல்ல. நமக்கென்று அளவிடப் பெற்றுள்ள வாழ்நாள், குறைந்து கழிந்து ஒழியாமல், ஒரு கண நேரமேனும் மிகுதிப்பட்டு நில்லாது. நமக்கு நேர வேண்டிய துன்பங்கள் நேராமல், எவ்வாற்றானும் இடைநெறியில் நீங்கியொழியாது, ஆதலால், காலம் உள்ளபொழுதே, அவ்வுலகத்திற்கு, உற்ற துணையாகிய அறங்களைச் செய்து தேடிக் கொள்ளுங்கள். வளம் மிக்க இப்பெரிய உலகத்தில் வாழும் மக்காள்! நுமக்கு யாம் கூறும் செய்தி இதுவே'' எனக் கூறி, இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தினை முடித்தருள்கின்றார்.''

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப்பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையியுர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும்யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக்குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்

இங்ஙனம் ''தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்'' என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் வாயிலாக விடுக்கும் சிறந்த ஞானச் செய்தி, எத்துணை விழுமிய பொருள் நலங்கள் பொதிந்து என்று சொல்லவும்வேண்டுமோ!

—ஆசிரியர்.

# கண்டுபிடிப்பின் கண்டுபிடிப்பு

அண்மைக்காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த அறிவியல் அறிஞர்களில், குளிஎல்மோ மார்க்கசா மார்க்கோனி ( Guglielmo Morchesa Marconi ) என்பவர் ஒருவர். இத்தாலியநாட்டைச் சார்ந்த இவர், சிறந்த மின்பொறி அறிஞர்; இயற்கைப் பொருள்நூல் ஆராய்ச்சி வல்லுநர்! கி.பி. 1874 முதல் 1937 வரை வாழ்ந்திருந்தவர். இவரது கண்டுபிடிப்புகளில் மிகவும் தலை சிறந்தது, கம்பியில்லாத் தந்தி ( Wireless Telegraphy ) ஆகும். மார்க்கோனி அவர்கள் கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தபோது, அவர்தம் நண்பர்கள் சிலர், அவருக்கு ஒரு விருந்தளித்து அவரைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தனர். ''மனிதன் முயன்றால் எதனையும் சாதித்துவிடலாம், முயற்சியினால் முடியாததது எதுவும் இல்லை; கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும், பிறவும் தேவையில்லை'' என்ற கருத்தின்போக்கில், மார்க்கோனியின் நண்பர்கள் அவரைப் பெரிதும் புகழ்ந்து பேசினர். ஆனால் மார்க்கோனி அவர்களோ, நண்பர்களின் பாராட்டுக்கு நன்றிமொழி பகருங்கால், பின்வருமாறு குறிப்பிட்டார்:

''நான் மிகவும் சிறியவனாக இருந்தபோது, என்பெற்றோர்கள் தினந்தோறும் காலை மாலை வேளைகளில், பைபிள் படித்துப் பிரார்த்தனை செய்யுமாறு, என்னை வற்புறுத்துவர். அதன் சிறப்பையும் பயனையும் உணர இயலாத நிலையில், சிறு வயதினனாக இருந்த யான், அவர்களின் வற்புறுத்துதலுக்காகப் பயந்து, பைபிள் படித்துப் பிரார்த்தனை செய்வதுபோல நடிப்பேன். அப்போதெல்லாம் என் பிஞ்சு மனத்திற்குள், ''இங்கே ஓர் அறையில் இருந்துகொண்டு, பைபிளைப் படித்துச் சில வரிகளை ஒப்பித்தால், அங்கே நெடுந்தொலைவில் பரமண்டலத்தில் உள்ள பரமபிதாவாகிய ஆண்டவனுக்கு, ஒருகால் அவன் இருந்தாலும் கூட, எங்கே? எப்படி கேட்கப்போகிறது!'' என்று எனக்குள் முணுமுணுத்துக் கொள்வேன்.


ஆனால் இன்று கம்பியில்லாத் தந்தியினைக் கண்டுபிடிக்க நேர்ந்ததன் மூலம், என்வாழ்க்கையிலேயே ஒரு பெரும் ஐயம், தீரப்பெற்றேன். கம்பியில்லாத் தந்தியின்மூலம், ஒருவர் பேசுவதை, எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்தாலும், மற்றொருவர் கேட்டு உணர முடியும் என்பது, இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. இங்ஙனமே ''பக்தன் ஒருவன் உண்மையான அன்புடன் தன் உள்ளம் திறந்து, தன் குறைகளை எவ்வளவு மெல்லியகுரலில் முறையிட்டுக் கொண்டாலும், அவைகளை இறைவன் நன்றாகச் செவிமடுப்பான்; பக்தனின் முறையீடுகள் இறைவனுக்கு நன்றாகக் கேட்கும். பக்தனின் வேண்டுதல்களைச் செவிமடுக்கும் இறைவன், நிச்சயமாக மனமிரங்கிப் பக்தர்களுக்கு அருள்புரிகின்றான் என்னும் உண்மையையும், இப்போது நான் நன்றாகத் தெளிவுற உணருகின்றேன். நெடுங்காலமாக யான் கொண்டிருந்த ஒரு பெரிய ஐயப்பாடு, எனக்கு இப்போது தீர்ந்துவிட்டது. நம்முடைய குறைகளையும் துயரங்களையும் இறைவனிடம் மண்டியிட்டு முறையிட்டுப் பிரார்த்தனை செய்துகொள்வது, ஒருபோதும் வீண்போவதில்லை. நிச்சயமாகப் பயனளிக்கின்றது. கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடிக்க நேர்ந்ததன்மூலம், நான் என் வாழ்க்கையில் இவ்வுண்மையை நன்றாக உணர்ந்து கண்டுகொண்டேன்''.

இளஞ்சிறுவன் எனஇருந்தேன்; எந்தையார்
நாள்தோறும் என்னைப் பைபிள்
உளங்கெழும ஓதுகென்பார்; ஓதிலையேல்
உணவில்லை என்று ரைப்பார்;
அளந்தறியாத் தொலைவிலுள்ள ஆண்டவன்கேன்
முணுமுணுப்பை அறியான் என்பேன்;
தெளிந்துணர்ந்தேன் கம்பியில்லாத் தந்திஇஃதால்;
செவிமடுப்பன் தேவன் என்றே!

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

இவ்வாறு மிகச் சிறந்த அறிவியற் பேரறிஞராகிய மார்க்கோனி அவர்கள் கூறியிருப்பது, இறைவனை நோக்கி முறையிட்டுக் கொண்டு, நாம் செய்யும் பிரார்த்தனையின் சிறப்பையும், பயனையும் நமக்கு நன்கினிது தெளிவுற உணர்த்துவதாகும்.

ந. ரா. முருகவேள்.



திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில், தெற்கு இராயகோபுரம் 6ஆம் நிலைக்கான நன்கொடையைத் திரைப்பட இன்னிசை அமைப்பாளர் திரு. இளையராஜா அவர்கள், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களிடம் வழங்குதல்.




திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் 6ஆம் நிலை அடிக்கல் நாட்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர் களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. ஆர். ஷண்முகசிகாமணி, ஐ.ஏ.எஸ். அவர்களும், திருச்சி மாவட்ட ஆட்சியாளர் திருமதி சாந்தாஷீலாநாயர், ஐ.ஏ.எஸ். அவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொள்ளுதல்.